கல்கி



KALKI 28.5.1961

30 காசு

"தோளோடு தோள் இணைந்து சவாரி செய்து என் ஹெர்குலிஸ் ஸைக்கிளை இழக்க நான் தயாராக இல்லை"

ஒரு ஹெர்குலிஸ் வாங்குவதற்காக அவரும், அவருடைய குடும்பத்தினரும் எவ்வளவோ தியாகம் செய்யவேண்டியிருந்திருக்கும் — பஸ் கட்டணத்திலோ, டிபன் செலவிலோ, துணிமணி, நகைகள் வாங்குவதிலோ சிக்கனம் செய்து சேமித்த பணத்தில் ஹெர்குலிஸ் வாங்கி இருக்க வேண்டும். அதனால்தான் அவர் அவ்வளவு ஜாக்கிரதையுடன் பாதுகாக்கிறார்.

உலகெங்குமுள்ள 134 தேசங்களில் அதிகமாக விரும்பி வாங்கப்படும் ஹெர்குலிஸ் உன்னத அமைப்பும், பிரயாசையின்றி சுலபமாகச்செல்லும் தன்மையும் கொண்டது.

இந்தியாவிலேயே மிகப் பெரியதும், சிறந்த சாதனங்கள் கொண்டுள்ளதுமான டி. ஐ. ஸைக்கிள்ஸ் தொழிற்சாலையில், ஹெர்குலிஸ் ஸைக்கிளின் ஒவ்வொரு உறுப்பும் நுட்பமான பரிசோதனைக்கிடையே தயாரிக்கப்படுகிறது. அவைகளின் சட்டங்களும், இணைப்புகளும் துருப்பிடிக்காமல் இருக்க 'ஸ்ப்ராகிரானோடைஸிங்' செய்யப்படுவதோடு, என்றென்றும் பளபளவென்று தோற்றமளிக்க அவைகளுக்கு எனாமல் பூச்சு அளிக்கப்படுகிறது.

உங்கள் ஸைக்கிள் ஒரு முதலீடு—ஹெர்குலிஸ் பணத்திற்கேற்ற சிறந்த பெறுமானம்

ஹெர்குலிஸ்


ஒரு ஸைக்கிள் மட்டுமல்ல—வாழ்நாள் முழுதும் உழைக்கும் ஓர் நற்றுணை

ஹெர்குலிஸ் ஸைக்கிள் அளாது மதிப்பு வாய்ந்த சொத்து



தயாரிப்போர்,
டி. ஐ. ஸைக்கிள்ஸ் ஆப் இந்தியா, மதராஸ்

JWT/TIC/1147a




தூய, மெல்லிள லக்ஸ் சோப்புக்கு
வானவில்லின் 4 வித வண்ணங்கள்
தவிர, நமதருமை வெண்மையும் உண்டு

புதுமையோ புதுமை! வண்ண வண்ணக் கோலமும் வாசனை மேலுறையும் புனைந்து வருகுது லக்ஸ். வெண்ணிறமா ? உண்டு. உண்டு. தேயமுடன் நம்மோடு பழகிவிட்ட அதே லக்ஸ். எந்த வண்ணமும் நமக்கே சொந்த வண்ணம், எழிலோங்குதல் திண்ணம் திண்ணம்!




'என்ன என்ன இனிமை,
வண்ண வண்ணப் புதுமை: என் லக்ஸ்!'
என்கிறார் சாவித்திரி



சினிமா நட்சத்திரங்களின் தூய,
மெல்லிளம் அழகுசாதன சோப்
இந்துஸ்தான் லீவர் தயாரிப்பு

LTS. 85-X53 TM


மே 27ல முதல்
சித்ரா
கிரௌன்
சயானி
மற்ற நகரங்களிலும்
சிவாஜி கணேசன்
அளிக்கும்
ராஜாமணி பிக்சர்ஸ்
பாசமலர்
டைரக்ஷன்: A.பீம்சிங்
தயாரிப்பு
M.R.சந்தானம்
K.மோஹன் (MOHANARTS)
MOHANARTS

ELEGANT

கல்கி பொருளடக்கம்

பிலவ, வைகாசி 15 ※ மே 28, 1961

"கல்கி"யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்களே; சம்பவங்களும் கற்பனையே.



மலர் 20 | தமிழ்த்திரு நாடுதன்னைப் — பெற்ற தாயென்று கும்பிடடி பாப்பா — *பாரதியார்* | இதழ் 43

குடிசைவாழ்வோரும் சர்க்காரும்

'நல்லது செய்ய வேண்டும் என்ற ஆர்வமுள்ளவர்களுக்கு நல்லவனாக இருக்க நேரம் இராது' என்று ரவீந்திரர் ஏதோ சந்தர்ப்பத்தில் பொருள் செறிந்த ஒரு சொல்லைச் சொன்னார். குடிசைகளில் வாழும் ஏழை மக்களுக்கு நல்ல வீடுகள் கட்டித் தந்து நன்மை செய்து தரவேண்டும் என்ற ஆர்வத்துடன் சர்க்கார் ஆதரவில் பணியாற்றும் ஸ்தாபனத்தாருக்கு ஏழைகளின் குறைபறிந்து அதற்குத் தக்கபடி நடக்க முடிவதில்லை.

சென்ற வாரம் சென்னைக் கடற்கரையில் வாழ்வோரின் குடிசைகளைப் பிரித்து அவர்களை அவ்விடத்தை விட்டுப் போகச் சொல்லிக் கொடுமைப்படுத்தியதைப் படித்தவர்களும், காட்சியை நேரில் கண்டவர்களும், நெஞ்சம் உருகாமல் இருக்க முடியாது.

செம்படவர்களுக்காக, கடற்கரையில் சென்னை நகர அபிவிருத்தி டிரஸ்டார் எங்கேயோ ஓர் இடத்தில் கட்டடம் கட்டினர். ஆனால் செம்படவர்கள் அதில் குடியேற மறுத்தனர். ஏனெனில் அவ்வீடுகள் அவர்களுக்குச் சௌகரியம் உள்ளதாக இல்லை.

'அந்த வீடுகளில் வசிக்க முடியாவிட்டால், அவ்விடத்தை விட்டு, கடற்கரையை விட்டு, அப்பால் செல்லுங்கள்' என்கின்றனர் தமிழ் நாடு வீடு கட்டும் போர்டார்.

இது எந்த விதத்தில் நியாயமாகும்? இதிலுள்ள அநீதியை எடுத்துக் கூறி ராஜாஜி ஓர் உருக்கமான அறிக்கை வெளியிட்டிருக்கிறார்.

''மனித உரிமைகளை இந்நாளிலும் மதிக்கிறோம் என்றால், சென்னை நகரம் செம்படவர்களின் பல குடியிருப்புக்கள் ஒன்று சேர்ந்த நகரம் என்றுதான் உண்மையில் கருத வேண்டும். ஏனெனில் அவர்கள்தான் இந்நகரின் பூர்வகுடிகள். அவர்களை, அவர்கள் வசிக்கும் இடங்களை விட்டு வெளியேறுங்கள் என்று சொல்வதற்கு மற்றவர்களுக்கு என்ன உரிமை யிருக்கிறது? அவர்கள் செய்யும் தொழிலின் காரணமாக அவர்கள் கடற்கரையோரமாகத்தான் வசிக்க வேண்டியிருக்கிறது. செம்படவர்களின் குறைகளையும் கஷ்டங்களையும் சட்டசபைகளில் எடுத்துச் சொல்ல அவர்களுடைய பிரதிநிதிகள் இல்லை என்பதற்காக எது வேண்டுமானாலும் செய்துவிடலாமா? அழகான கடற்கரையிலிருக்கும் செம்படவர்களின் எளிமையான குடிசைகள் வெளிநாட்டு யாத்திரிகர்களின் கண்களை உறுத்தும் என்று அரசினர் கருதினால் எது வேண்டுமானாலும் செய்துவிட முடியுமா? அவர்கள் வாழும் குடிசைகளை அழகுபடுத்திச் சுத்தமாக வைத்துக் கொள்ள ஏற்பாடு செய்தால், வெளிநாட்டினர் நம்மைப் பாராட்டுவார்கள்.''

செம்படவர்களின் வாழ்வு கடலோடு ஒட்டியது. கடல் பொங்குவதையும், அலை மோதுவதையும், காற்றடிப்பதையும் எப்பொழுதும் கூர்ந்து கவனிக்க வேண்டியிருக்கிறது. கடலின் இயல்பு நமக்குத் தெரியாது; செம்படவர்களுக்குத்தான் தெரியும். பூமியை வயல் வயலாகப் பிரித்தனுபவிப்பது போல் சென்னைக் கடலோரத்தில் வசித்து வரும் இம்மக்கள் கடலை ஆண்டு வருகிறார்கள். பல்வேறு குப்பங்களுக்குக் கடலில் வயல்வரப்புகள் போல் பல்வேறு பிரிவுகளும் உண்டு. அவர்களது கட்டுமரம், வலை முதலிய சாமான்களைக் கடலைவிட்டுத் தொலைவில் வைத்துக் கொள்ளவும் முடியாது. வலையைக் காய வைப்பதற்கு வசதியான விஸ்தாரமான வெளியிடமும் வேண்டும். இத்தனை வசதிகள் அளிக்க இன்று வீட்டு வசதி செய்து கொடுக்கும் ஸ்தாபனத்தாரால் ஒரு நாளும் முடியாது. எல்லாவிதத்திலும் இடையூறான வீடுகளைக் கட்டிவிட்டு, அதிக வாடகையும் கேட்டால் ஏழைகள் எங்கே போவார்கள்? சர்க்கார் ஏழை மக்களின் வாழ்க்கை முறையை உணர்ந்து வசதிகள் செய்து தரவேண்டுமேயின்றி, சர்க்கார் செய்து கொடுக்கும்

வசதிக்குத் தக்கபடி மக்கள் வாழ வேண்டும் என்பது கொடுங்கோன்மையாகும்.

இப்பொழுதெல்லாம் மூலைக்கு மூலை குடிசை வாழ்வோர் சங்கங்களின் மகா நாடுகள் நடக்கின்றன. தேர்தல் காலம் நெருங்க நெருங்கக் குடிசை வாழ்வோர் நலனில் அக்கறை காட்டும் அரசியல் கட்சிகளின் எண்ணிக்கையும் பெருகி வருகிறது. அம்முறையில் ராஜாஜியும் தலையிடுகிறாரோ என்று யாரும் எண்ணி விடக் கூடாது என்பதற்காக மிகத் தெளிவாகக் கூறியிருக்கிறார்:

"இன்றைய சர்க்காரின் வீட்டு வசதி போர்டார் செம்படவர்களின் வாழ்க்கை முறையை உணர்ந்து அவர்களுக்கு உதவி செய்ய வேண்டும். அப்படிச் செய்து இன்று பதவியிலிருப்போர் பெருமையும் புகழும் கொள்ளட்டும். அதைப் பார்த்து நான்உண்மையில் மகிழ்ச்சியடைவேன்."

இதைவிட உருக்கமாகச் செம்படவ மக்களின், குடிசை வாழ்வோரின் நிலைக்குப் பரிந்து யாராலும் பேச முடியாது. சர்க்கார் அவர்கள் கஷ்டத்தை உணர்ந்து நடந்துகொள்ள வேண்டும்.

மந்திரியை மகிழ்விக்கிறார்!

மத்திய நிதி மந்திரி திரு மொரார்ஜி தேசாயை ஒரு விருந்து வைத்துத் திருப்தி செய்விக்க முடியாது. ஒரு நடன நிகழ்ச்சி ஏற்படுத்தியும் மகிழ்விக்க முடியாது. அதனால் நம் தமிழகத்திலுள்ள பிரபல தொழிலதிபர் திரு கோத்தாரி உலகிலேயே மிகவும் குறைந்த வரி விதிக்கப்பட்டுள்ள நாடு இந்தியாதான் என்று புள்ளி விவரத்தோடு கூறி மந்திரியை மகிழ்விக்க முயன்றிருக்கிறார்.

மக்களின் சராசரி வருமானத்தில் பிரிட்டனில் 28 சத விகிதமும், ஜெர்மனியில் 27 சதவிகிதமும், அமெரிக்காவில் 33 சதவிகிதமும் வரி வசூலிக்கப்படுகிறது. இவற்றுடன் ஒப்பிட்டால் இந்தியா வரி விகிதம் மிக மிகக் குறைவு; 9 சத விகிதம்தான் வசூலிக்கப்படுகிறது என்று திரு கோத்தாரி கூறியிருக்கிறார்.

பிறநாடுகளில் நிலவும் வரி விகிதத்தைப் பற்றிப் பேசியவர் அந்நாடுகளில் சராசரி தேசிய வருமானம் எவ்வளவு என்பதைக் கணக்கில் எடுத்துக் கொண்டாரா என்பது தெரியவில்லை.

ஜெர்மனி	ரூ.	3530
பிரிட்டன்	ரூ.	4561
அமெரிக்கா	ரூ.	10124
இந்தியா	ரூ.	289

மற்ற நாடுகளின் தேசிய வருமானத்துடன் ஒப்பிடும்போது இந்தியாவின் வருமானம் எவ்வளவு குறைவாக இருக்கிறது, பாருங்கள்! அந் நாடுகளின் வருமானத்தில், பாதி சர்க்காருக்கு வரியாகப் போய் விடுகிறது என்றாலும்,

ஜெர்மனிக்கு	ரூ.	1600ம்
பிரிட்டனுக்கு	ரூ.	2300ம்
அமெரிக்காவுக்கு	ரூ.	5000ம்

மிஞ்சும். அப்போதும் இந்தியாவின் தேசிய வருமானத்தைவிட மற்ற நாடுகளின் வருமானம் எவ்வளவு உயரத்தில் இருக்கிறது, பாருங்கள். ஆகவே அந்நாடுகளில் அந்தச் சத விகித வரி பொருந்தும். ஆனால் நம் நாட்டுக்குப் பொருந்துமா?

கவர்னர் மாளிகை விருந்துகளின் போது, பரிமாறப்படும் தின்பண்டங்களின் எண்ணிக்கையில் பாதி குறைந்து விட்டாலும் வந்த விருந்தினர்கள் பட்டினியோடு திரும்ப மாட்டார்கள். ஆனால் ஏழை ஒருவன் ஒரு சிறு வட்டியில் கொஞ்சம் சோறு வைத்துக் கொண்டு உண்ணும்போது அதில் ஒரு கவளம் எடுத்தால் அது அவனுக்கு மாபெரும் நஷ்டமேயாகும்! அதுபோல் இங்குள்ள 9 சதவிகித வரியுமே மிக அதிகம். மத்திய சர்க்காரின் புது பட்ஜெட்டின் மறைமுக வரிகள் காரணமாக மக்களின் அன்றாட வாழ்க்கைக்கு அவசியமான பொருள்களின் விலைகளை உயர்த்தி அதனால் மக்கள் தொல்லைப் படும்போது, திரு கோத்தாரி நிதி மந்திரியை மகிழ்விக்க இந்த மந்திரத்தைக் கையாண்டிருக்க வேண்டியதில்லை.

சுதந்திர நிதி

நன்கொடைகள் அனுப்பியவர்களுக்கு நன்றி. பெரியதொரு அரசாங்கத்தைத் தன் கையில் வைத்துக்கொண்டு ஆர்ப்பாட்டம் செய்யும் காங்கிரஸை எதிர்க்க இந்த நன்கொடைகள் எம்மட்டும் உதவும்? இந்த ஊக்கம் போதுமா? பெரியோர்களும் சிறியோர்களும் யோசனை செய்ய வேண்டும்.

19-5-61

சக்கரவர்த்தி ராஜகோபாலாச்சாரி

சீனவில் பஞ்சம்

சீனத் தலைவர் மாஸேதுங் அவர்களே விவசாயத் துறையில் தாங்கள் தோல்வி யடைந்து விட்டதாக ஒப்புக் கொண்டு விட்டார்.

கம்யூனிஸ்ட் சீன விவசாயத் துறையில் கடைப்பிடித்து வந்த முறைகள் படு தோல்வி யடைந்து மக்கள் பஞ்சத்தில் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கின்றனர். சீன அரசாங்கம் எந்த நாடுகளை முதலாளித்துவ நாடுகள் என்று ஏசி வந்ததோ அந்த நாடுகளிடமிருந்தே உணவு தானியங்கள் விலை கொடுத்து வாங்கும் நிலைக்கு வந்துள்ளது.

கனடா நாட்டிலிருந்து கோதுமையும், கம்பும் இரண்டரை ஆண்டுகளுக்கு இறக்குமதி செய்ய ஒரு நீண்ட கால ஒப்பந்தம் செய்து கொண்டிருக்கிறது சீனு. இதிலிருந்தே, சமீப காலத்தில் சீனுவின் விவசாய நிலை சீர்ப்படப் போவ தில்லை என்பது தெளிவாகிறதல்லவா?

கனடா, உலகிலேயே கோதுமை ஏற்று மதி வியாபாரத்தில் முதன்மை ஸ்தானம் வகிக்கிறது. இப்பொழுது சீனுவுடன் கோதுமை வர்த்தக ஒப்பந்தம் செய்து கொண்டதன் பலனுக, அதன் மொத்த ஏற்றுமதியில் 25 சத விகிதம் உயரப் போகிறது என்றுல் சீனு எவ்வளவு கோதுமை வாங்கப் போகிறது என்பதையும் எவ்வளவு பற்றுக்குறையும் பஞ்சமும் சீன நாட்டில் நிலவுகின்றன என்பதையும் ஊகிக்கலாம்.

கம்யூனிஸ்ட்டுகள் ஆட்சிக்கு வந்த பின் சிறுசிறு பண்ணைகளைப் பறித்து, ஒன்ருக்கி விவசாய மக்கள் அனைவரையும் கம்யூன்கள் என்னும் பட்டிக்குள் அடைத்து, அடிமைகளாகவும் கூலிகளாகவும் வேலை வாங்கியதன் விளைவாகத்தான் இன்று சீன நாட்டில் பஞ்சம் தாண்டவமாடுகிறது.

இப்பொழுது கம்யூனிஸ்ட் சீனர்கள், 24000 பெரிய கம்யூன்களைக் கலைத்து விட்டார்கள் என்ற செய்தி வந்திருக்கிறது. இதன் பொருள், சீன கம்யூனிஸ்ட்காரர்கள் கூட்டுப் பண்ணையும், கூட்டுறவுப் பண்ணை வாழ்வும் தோல்வி யடைந்து விட்டன என்பதை ஒப்புக் கொண்டு பழைய வாழ்க்கை முறைக்குத் திரும்பப் பார்க்கிருர்கள் என்பதுதான்.

ருஷ்யாவிலும், சீனுவிலும் படுதோல்வி யடைந்த விவசாய முறைகளை இந்தியாவில் புகுத்த முயல்கிறது, கம்யூனிஸ்ட் கொள்கைகளை ஸ்வீகாரம் செய்து கொண்டிருக்கும் காங்கிரஸ் ஆட்சி. சீனு செய்யும் எச்சரிக்கை காங்கிரஸ் மூளையில் ஏறவில்லை.

மைசூர் வாசுதேவாச்சார்

● கர்நாடக சங்கீத உலகின் முதுபெரும் கிழாராக விளங்கிய மைசூர் ஸ்ரீ வாசுதேவாச்சார் பூரண வாழ்வு வாழ்ந்து பழுத்த பழமாக, தமது 96 வது வயதில் காலமான செய்தி கேட்டு வருந்துகிறேம். பெற்ற தந்தையைக் கவனித்துக் கொள்வது போன்ற அன்புடன் கண்ணும் கருத்துமாக இந்த இசை மேதையைக் கலாக்ஷேத்திரத்தில் வைத்துப் போஷித்துப் பாதுகாத்துவந்தார் ஸ்ரீமதி ருக்மிணி தேவி.



பட்டணம் சுப்பிரமணிய அய்யருடைய நேர்சிஷ்யர்; சாஸ்திரீய சங்கீத சம்பிரதாயத்தை வழுவின்றிக் கடைப்பிடித்தவர். பல்லாண்டுகளுக்கு முன்பே மைசூர் சமஸ்தான வித்வானுகப் புகழடைந்து கர்நாடக சங்கீதத்துக்கு அணிகலனுக விளங்கினவர். இந்தக் காரணங்களால் ஸ்ரீ வாசுதேவாச்சார் வித்வான்கள் சமூகத்திலும், ரசிகர்களிடையேயும் கௌரவ ஸ்தானத்தைப் பெற்றிருந்தார். இவைகளைக் காட்டிலும் அவருக்குப் புகழும் கௌரவமும் அளித்தது தெலுங்கு, ஸம்ஸ்க்ருதம் இவ்விரு மொழிகளிலும் அற்புதமான உருப்படிகளைக் கவனம் செய்வதில் அவருக்கு இருந்த திறமைதான். சங்கீத மும்மூர்த்திகளின் சாகித்தியங்களுக்குத் தற்காலக் கச்சேரிகளில் எவ்வளவு மதிப்பு அளிக்கப்படுகின்றதோ அதே போன்ற ஸ்தானம் பெற்றவை ஸ்ரீ வாசுதேவாச்சார் அவர்களின் கீர்த்தனைகள். இவருடைய சாகித்தியங்களின் இராக அமைப்பையும், மெட்டு அமைப்பையும், சங்கதி அடுக்குகளையும், பிரஸ்தாரக் கிரமங்களையும் அவரே அமைத்துக் கொடுத்து உதவியிருக்கிருர். உள் அபிமானத்துடனும் ஆர்வத்துடனும் அவரை அணுகும் சிஷ்யர்களுக்கு அவற்றைக் கற்பிப்பதில் மகிழ்ச்சி அடையும் குணமுள்ளவர் ஸ்ரீ வாசுதேவாச்சார். அரசாங்க விருதும் அகாடமி கௌரவமும் அவரைத் தேடி வந்தடைந்தன. அவரிடம் சேர்ந்ததால் விருதுகள் பெருமையும் புனிதமும் பெற்றன என்றுல் மிகையாகாது.

கலாக்ஷேத்திர ஸ்தாபனத்துக்கு, ஏன், கர்நாடக இசை உலகம் முழுவதுக்குமே ஸ்ரீ வாசுதேவாச்சாரின் பிரிவு ஈடு செய்ய முடியாத மாபெரும் நஷ்டமாகும். ●



கடும் வெய்யிலில் வாடித் துவளும் பயிர்கள் கார் மழையால் புத்துயிர் பெறுவது போல், பிரும்மஸ்ரீ அனந்தராம தீக்ஷிதர் அவர்களின் பிரவசனங்களால் தில்லிவாழ் பெரு மக்கள் அனைவரும் புத்துணர்ச்சி பெற்றிருக்கின்றனர். ஏப்ரல் முழுதும் புதுதில்லியில் பிரும்மஸ்ரீ தீக்ஷிதர் அவர்களின் மகாபாரத, ராமாயண, பாகவதப் பிரவசனங்கள் நடைபெற்றன. கூட்டம் சொல்லி முடியாது. ஒரு பாட்டுக் கச்சேரிக்கோ, நடனக் கச்சேரிக்கோ கூட்டம் வந்தால் நம்பலாம். உபன்யாஸத்துக்குப் பத்துப் பன்னிரண்டு மைல் தூரத்திலிருந்தெல்லாம் குடும்ப சகிதம் பெரும் ஜனத்திரள் நாள்தோறும், மாதம் முழுதும் வந்ததென்றால் அது தீக்ஷிதர் அவர்களின் மேதையையும், ஆஸ்திகத்தின் மேன்மையையும் நம் மக்களுக்குள்ள தெய்வ பக்தியையும்தான் காட்டுகிறது.

இவ்வளவு மகத்தான சாதனைக்குக் காரணமான தில்லி வைதிக பிராம்மண சங்கத்தினர்களின் உழைப்பைப் பாராட்டாமலிருக்க முடியாது. இரவு பகல் என்று பாராமல் உழைத்து இந்த வைபவத்தை ஒரு பெரும் விழாவாகவே கொண்டாடிவிட்டார்கள். நாள் தோறும் இரண்டாயிரம் பேர்கள் தீக்ஷிதர் அவர்களின் பிரவசனத்தைக் கேட்டு மகிழ்ந்து பயனடைந்தார்கள்.

தில்லியிலுள்ள எல்லாச் சங்கங்களும் தீக்ஷிதர் அவர்களின் வருகையைப் பயன்படுத்திக் கொண்டன. லோதி ரோடு - கரோல்பாக் பஜனை சமாஜம், தென்னிந்திய சமாஜம், மோதி பாக் கலாசார சங்கம் எல்லாம் தனித்தனியே அன்னாரின் உபன்யாசங்களுக்கு ஏற்பாடு செய்து அவரையும் கௌரவித்து அவையும் பெருமை பெற்றன.

மே 3ந்தேதி முதல் 9ந்தேதி வரை தில்லியில் ஸ்ரீ டி.. எல். வெங்கட்ராமையர் அவர்கள் தலைமையில் வேத தர்ம சாஸ்திர பரிபாலன சபையின் சம்மேளனமும் நடைபெற்றது. சம்மேளனத்தில் தீக்ஷிதர் அவர்களும் கலந்துகொண்டு சிறப்பித்தார்கள். படத்தில் மேற்படி சபையின் அங்கத்தினர்களான அக்னிஹோத்ரம் ஸ்ரீ தாதாச்சாரியார், ஸ்ரீ எல். எஸ். பார்த்தசாரதி அய்யர், ஸ்ரீ அண்ணாதுரை அய்யங்கார் ஆகியோரை பிரும்மஸ்ரீ அனந்தராம தீக்ஷிதர் அவர்களுடன் காணலாம். இப்போது பங்களூர் மல்லேஸ்வரத்தில் ஸ்ரீ அனந்தராம தீக்ஷிதர் அவர்களின் மகாபாரதப் பிரவசனம் நடைபெற்று வருகிறது.



வட்டமேஜை

ராணுவ மனப்பான்மை

ருஷ்யர்களின் வானவெளிச் சாதனையைக் கண்டித்த சர் சி. வி. ராமன் அவர்களது கருத்தைச் சிலர் தவறாகப் புரிந்து கொண்டிருக்கின்றனர்.

ஒரு விஞ்ஞான ஆராய்ச்சியின் பலன் அந்த ஆராய்ச்சியை மட்டும் பொறுத்ததல்ல; அது நடத்தப்பட்ட நேரத்தையும் நடத்தியவர்களின் மன நிலையையும்கூடப் பொறுத்திருக்கும்.

ஸ்டீவன்ஸன் என்ற பிரபல ஆங்கில நாவலாசிரியர் ''டாக்டர் ஜெகிலும் மிஸ்டர் ஹைடும்'' என்ற தமது நாவலில் ஜெகில் வாயிலாகக் கூறியிருப்பதைப் பாருங்கள்: ''நான் முதன் முதல் அவ்வாராய்ச்சியை நடத்திய போது, நல்ல எண்ணங்களோடும் சீரிய அறிவோடும் இருந்திருந்தால் மருந்து என் சிறிய அளவு தீமையைப் பழைய உடலில் நிறுத்தி விட்டு இயல்பாக எனக்கு அமைந்திருந்த நற்பண்புகளைக் கடவுள் வடிவமுடைய ஒருடலில் புகுத்தி என்னையும் ஒரு தேவனாகச் செய்திருக்கும். எனது ஆராய்ச்சியும் ஆசையும் பெருமையாக முடிந்திருக்கும். ஆனால் நடந்தது வேறு. நான் முதன் முறை மருந்தினை அருந்தியபோது பேராசைக்கும், உலகை ஏய்த்துப் பல வகை இன்பங்களைத் துய்க்க வேண்டும் என்னும் கெட்ட எண்ணத்துக்கும் அடிமைப்பட்டிருந்தேன். ஆகையால் மருந்தின் நடுநிலைமையால் நான் தீமையின் உருவமாம் ஹைடாக மாறி விட்டேன்.'' இதைத்தான் ராமன் அவர்கள் சுருக்கமாக 'ராணுவ மனப்பான்மை' என்று குறிப்பிட்டிருக்கிறார்.

ஆக்க வேலைகளுக்குப் பயன்படும் விஞ்ஞானம் அழிவு வேலைகளுக்கும் பயன்படுவதன் காரணம் விஞ்ஞானிகளல்ல; விஞ்ஞானத்தின் இன்றைய நிலைதான்.

வல்லரசு நாடுகளில் விஞ்ஞானிகள் ராணுவத்தின் கீழ்தான் செயல்படுகின்றனர். இதை நினைக்கும்போதுதான் உலகம் அழிவுப் பாதையில் சென்று கொண்டிருக்கிறதோ என்று அச்சம் ஏற்படுகிறது. அதே சமயம் ராமன் போன்ற விஞ்ஞானிகள் துணிவுடன் இந்த 'ராணுவ மனப்பான்மை'யைக் கண்டித்திருப்பது மனித சமுதாயத்துக்கு நம்பிக்கையூட்டுகிறது.

கல்லிடைக்குறிச்சி 2—5—61 ஆர். பத்மநாபன் எம்.எஸ்ஸி

அபாயச் சங்கிலி

மூட்டைப் பூச்சியின் கடி பொறுக்க முடியாமல் வீட்டையே எரித்தார்களாம். பெருச்சாளிகளை ஒழிக்க நெல் வயலையே நாசம் செய்தார்களாம். இவை போலவே விசித்திரமாக இருக்கிறது மத்திய ரயில் மந்திரியின் போக்கு. வடகிழக்கு ரயில்வே பகுதியில் பல விஷமிகள் அபாயச் சங்கிலியைத் துஷ்பிரயோகம் செய்கிறார்கள் என்பதற்காக அங்கு அபாயச் சங்கிலியையே வேலை செய்யாமல் தடுத்து, இதை ஏதோ ஒரு மிகப் பெரிய சாதனை போன்ற வெற்றிப் பெருமிதத்தோடு, பாராளுமன்றத்திலே பறைசாற்றுகிறார் பொறுப்புள்ள மந்திரி. விஷமிகள் பிரயாணம் செய்யும் அதே ரயிலில்தான் நல்லவர்களும் முக்கியமாகப் பெண்களும் பிரயாணம் செய்கிறார்கள் என்பதை மந்திரி அவர்கள் உணர வேண்டும். ஆகையால் அபாய அறிவிப்பைத் தடுக்கும் காரியமானது கொலை, கொள்ளை போன்றவைக்கு வசதியாக இருப்பதோடு மட்டுமின்றி அத்தகைய செயல்களில் ஈடுபடுபவர்களை மேன்மேலும் ஊக்குவிப்பதாகவே இருக்கிறது.


கண்வலி வந்தால் தக்க மருந்து போட்டுக் கண்களைக் காக்க வேண்டுமேயன்றி, அதற்காகக் கண்களையே குத்திக் கொள்வது அறிவின்மையையே காட்டுகின்றது. ஆகையால் அரசாங்கம் தக்க நடவடிக்கை எடுத்து மக்களுக்குப் பாதுகாப்பு அளிக்கும் என்று நம்புகிறோம்.

கோவை 13-5-61 பா. சுகவனம்
வெ. சீனிவாசன்

விவசாயம் வளருமா?

பயிரிடும் விவசாயிகளாகிய நாங்கள் பெரும்பாலும் ஏழைகளே. நாங்கள் பயிர் செய்வதற்கு ஒரு பெரும் ஆபத்து வந்துள்ளது. நெற் பயிர்களுக்கு, முக்கியமாக, கதிர் சமயத்தில் அமோனியம் சல்பேட் போட்டால்தான் நெற்கதிர்கள் ஒரே ஒப்பாகக் கதிர்கள் விட்டு விளைச்சலை அதிகமாகப் பெருக்கும். அந்த அமோனியம் சல்பேட்டுக்கு வந்திருக்கும் பற்றாக்குறை கொஞ்சநஞ்சமல்ல. இங்குள்ள அமோனியா சொசைட்டிகளுக்கு வரும் அமோனியம் சல்பேட்டு மறையும் மாயம் என்னவோ? இந்த அமோனியா என்னவென்பதை விவசாயிகளாகிய நாங்கள் இது வரையில் கண்ணாலும் கண்டதில்லை. இது தான் கிடைக்கவில்லை என்று கலப்பு உரங்களை உபயோகித்து வந்துள்ளோம். ஆனால் அதற்கும் ஆபத்து வந்துள்ளது. நமது மத்திய அரசாங்கம் அந்தக் கலப்பு உரத்துக்கு ஒரு சட்டம் அமைத்துள்ளது. அதாவது ஒரு ராஜ்யத்திலிருந்து மற்றொரு ராஜ்யத்துக்கு உரம் செல்லகூடாது என்பதே. எங்கள் புதுவை மாநகரிலே கலப்பு உரத் தொழிற்சாலை இல்லாமையால் இந்தியாவிலிருந்தே உரங்கள் வந்து பெரிதும் உதவி புரிந்தன. இந்தக் கலப்பு உரங்கள் தற்சமயம் எங்கள் ஊர்களுக்கு வரவில்லை. ஆதலால் எங்கள் விவசாயம் பெரிதும் பாதிக்கப் பட்டிருக்கின்றது. 'விவசாயத்தைப் பெருக்குங்கள், பெருக்குங்கள்' என்று வெறும் வார்த்தைகளால் சொல்லி என்ன பயன்? காரியத்தில் காட்டி ஒத்துழைத்தால் அல்லவா பலனுண்டு?

வில்லியனூர் 28-4-61 வில்லியனூர் விவசாயிகள்



REGISTERED USER OF THE TRADE MARK 'SANFORIZED'



"பில்க் துணிக்கு விற்பனை வரி எவ்வளவு போட வேணும் ஸார்?"

தேவராஜ் எழுதுவதை நிறுத்திவிட்டுத் தலைநிமிர்ந்து பார்த்தான். புதிதாக ரெடிமேட் துணிகள் விற்பனையாகும் பகுதியில் வேலைக்கு வந்துள்ள பெண்தான். ஒரு கையில் பென்சிலும் இன்னொரு கையில் பில் புத்தகமுமாக அவள் உதட்டைக் கடித்துக் கொண்டு தயங்கியபடியே நின்றாள். குரல் கெஞ்சிற்று. அவன் பார்வையில் பென்சிலின் பிடி தளர்ந்து போயிற்று.

"என்னைப் பெயர் சொல்லியே நீங்கள் அழைக்கலாம்!"

"மிஸ்டர்....?"

தன் பெயரைச் சொல்லாதது நினைவுக்கு வரவே "தேவராஜ்!" என்று முடித்தான்.

"உங்கள் பெயர்?" என்று தொடர்ந்து கேட்டான்.

"மிஸ்ஸிஸ் லீலா!"

முதல் பகுதியை அவள் அழுத்திச் சொன்னதுபோல இருந்தது. பில்லில் குறிக்கவேண்டிய வரி விகிதத்தைச் சொல்லிவிட்டுத் தன் வேலையைக் கவனிக்கப் போய் விட்டான் தேவராஜ்.

கடைத் தெருவில் முக்கியமான பெரிய கடை ஜோஸப் ஸ்டோர்ஸ். குடித்தனத்துக்குத் தேவையான சாமான்கள் யாவும்—உணவுப் பொருள்களிலிருந்து துணிமணி வகைகள் வரை, சிறு பேனாக்கத்தியிலிருந்து விலையுயர்ந்த பரிசுப் பொருள்கள் வரை—அங்கே கிடைக்கும். ஒவ்வோர் இனமும் ஒவ்வொரு பகுதியில். ரஸ விளக்குகளின் ஒளியில் பளபளவென்று மின்னும் கருங்காலி மேஜைகளின்மேல் சாமான்கள் வந்து குவிவதும், வாங்குவோரும் விலை சொல்வோரும் பரிமாறிக் கொள்ளும் பேச்சும், வழுவழுப்பான வண்ணக் காகிதங்களில் சாமான்களைக் கட்டி அனுப்புவதுமாக, பலவிதக் காட்சிகள் நாடகத்தில் நடப்பது போல் அங்கே நிகழ்ந்து கொண்டிருக்கும்.

ரெடிமேட் துணிகள் வியாபாரம் செய்யும் பகுதியில் வேலைக்கு வந்து அமர்ந்தவள் லீலா; குழந்தைகள் துணிகள், பெண்களுக்குரிய உடைகள், எம்பிராய்டரி வேலை செய்த தாவணிகள், கைவேலைப்பாடமைந்த விரிப்புகள் யாவும் அப்பகுதியில் கிடைக்கும்.

அதற்குப் பக்கத்திலிருந்த பகுதியைத் தான் தேவராஜ் கவனித்துக் கொண்டிருந்தான். ஆடவருக்கான பலவித மில் துணிகள், வாயில், நைலான் துணி ரகங்கள் ஆகியவை அவன் பகுதியில் நடமாடும். கடைசியாகத் துண்டு விழும் சில துணிகளை அவன் ரெடிமேட் ஆடைகளாகத் தைத்துவிடுவதற்குக் கொடுக்க வேண்டி விருப்பதும் உண்டு.

குழந்தைகள் துணிக்கான அளவுகளை, வயதுக் கணக்கைக் கொண்டு அவள் கச்சிதமாகச் சொல்வதைக் கேட்கும்போது, அவனுக்கு வியப்பாக இருக்கும்.


"எப்படி நீங்கள் இவ்வளவு கணக்காகச் சொல்லுகிறீர்கள்?"

"எனக்குத் தைக்கத் தெரியும். வீட்டில் மிஷின் வைத்திருக்கிறேன்!"

சட்டென்று-அவனுக்கு ஒரு சந்தேகம்.

"நீங்கள் என்ன நினைத்தீர்கள்?"

எஸ். லட்சுமி சுப்பிரமணியம்





நெம்மாராவைச் சேர்ந்த ஸ்ரீ என். பி. கோபாலகிருஷ்ணய்யர் அவர்களின் சதாபிஷேகம் சமீபத்தில் வெகு விமரிசையாக நடந்தேறியது.

'' உங்களுக்கு அந்த வயதில்...''

அவள் குறும்புப் புன்னகையின் எதிர்நிழலாய் அவன் முகம் சிவப்புப் பூத்தது.

'துறுதுறு' வென்ற சுபாவம் அவனுக்கு. கழுத்தில் பிளாஸ்டிக் டேப்பை மாலையாகப் போட்டுக் கொண்டு நிமிஷத்துக்கு ஓர் அளவு எடுத்துக் கொண்டே இருப்பான். பேச்சில் கண்டிப்பு இருந்தாலும் பார்வையில் கனிவுக்குக் குறைவில்லை. கடை மூடுகிற வரையில் சலிப்பில்லாமல் வேலை செய்ய முன்வரும் ஊக்கம். வற்றாத புன்னகை. வாங்க வருபவர்களை வாடிக்கைக்காரராக்கிவிடும் நயமான பதில். சிலசமயம் அவன் அலுவல் செய்யும் நேர்த்தியைக் கவனிக்கும் பாவனையில் அவள் தன் வேலையை மறந்து அயர்ந்து நின்றது கூட உண்டு.

ஒருநாள் '' இந்தச் சட்டையையும் நிஜாரையும் பார்த்தீர்களா? இது என் புது டிஸைன்!'' என்று அவன் அவளிடம் காண்பித்தான்.

துணி அதிகம் செலவில்லை. பார்வைக்கும் புதுமாதிரியானது. எடுப்பாக இருக்கும் தையல் அமைப்பு. நான்கு வயதுக் குழந்தைக்குக் கச்சிதமாக இருக்கும்.

'' உங்கள் பையனைப் பள்ளிக்கூடத்தில் சேர்த்து விட்டீர்களா? அவனுக்குச் சரியாக இருக்குமே இது?''

அவள் குறும்பு அந்தக் கேள்வியில் மட்டும் தொனிக்கவில்லை. அவள் பார்வையிலும் அதன் சாயல் தெரிந்தது. அவன் சமாளித்துக் கொண்டு தலையை ஆட்டினான், 'இல்லே' என்ற பாவனையில்.

'' என்ன இல்லே?''

'' பள்ளிக்கூடத்துக்கு அனுப்பவில்லே.''

'' ஏன்?''

'' எனக்குப் பையனே இல்லே!''

இருவருடைய சிரிப்பொலியும் ஒன்றாகக் கலந்து போயிற்று.

சாப்பாட்டு இடை நேரம். கடைக்கு வெளியே ஹோட்டலுக்குப் போய் வருபவர்களும் உண்டு. அருகில் வீடு இருப்பவர்கள் வீட்டுக்கே போய் வந்து விடுவார்கள். தேவராஜ், லீலா இருவருமே கையில் சிற்றுண்டி கொண்டு வருபவர்கள். அங்கேயே ஸ்டூலுக்கு மேல் பிரித்து வைத்துக் கொண்டு கால் மணியில் டிபனை முடித்து விடுவார்கள். பையன் காப்பி மட்டும் வாங்கி வருவான்.

'' இன்றைக்கு என்ன கொண்டு வந்திருக்கிறீர்கள்?'' என்பாள்.

ஏதாவது ஒரு பிசைந்த சாதமாகத்தான் இருக்குமென்று அவனுக்குத் தெரியும்.

'' உங்களுடையது என்னவாம்?''

வெற்று ரொட்டியும், காகிதத்தில் சுற்றிய வெண்ணெயும்தான் என்று அவளுக்கும் தெரியும். இருந்தாலும் ஒரு கேள்வி.

'' வீட்டில் அவரையும் கவனித்துவிட்டு, சமையலுக்கும் ஏற்பாடு செய்து, தனியாக டிபன் செய்து கொண்டு வருவது சாத்தியமில்லைதான்!'' அவன் குரலில் அனுதாபம் தொனிக்கும்.

'' நீங்களும் வீட்டில் தொந்தரவு கொடுக்க வேண்டாமென்று பார்க்கிறீர்கள் போல் இருக்கிறது!''

எதையோ சொல்ல வந்தவன், மௌனமான தலையசைப்போடு நிறுத்திக் கொண்டு விட்டான்.

'' உங்கள் மனைவி கொடுத்து வைத்தவள்!''

தூங்கினவனைத் தட்டி யெழுப்பியது போல் இருந்தது. குலுங்கி நிமிர்ந்தான்.

'' என்ன சொன்னீர்கள்?''

'' ஒன்றுமில்லே. எல்லோரும் உங்களைப் போல, சிரமம் தெரிந்து, அனுசரித்துக் கொண்டு....''

அரை யோசனையும் குறை வாக்கியமுமாக, அவனுக்குத் தன்னுணர்விலிருந்து மீளமுடியாதபடி ஒரு குழப்பம். சிரிக்கும் பாவனையில் அவள் பேச்சைச் சட்டென்று வேறெங்கேயோ திருப்பி விட்டான்.

ஆனால் அவளால் சிந்திக்காமல் இருக்க முடியவில்லை. அவன் கணவன் எப்படிப் பட்டவன்? அவளை எப்படி நடத்துகிறான்? எவ்வளவு தூரம் புரிந்து கொள்கிறான்? அவன் கேள்வியில் பதில் புரிந்தும் புரியாமலும் நின்ற உணர்ச்சிகளின் உருவம்தான் என்ன? அதை அவனிடமே கேட்டறியும் அளவுக்கு அவர்கள் பழக்கம் முதிர்ந்து போகவில்லை. முதிர்ந்து இருந்தாலும் அவன் கேட்டிருக்க மாட்டான். அது அவன் இயற்கை.

கடையில் அப்படியும் இப்படியுமாக, அவர்களைப் போல் நாற்பது ஊழியருக்குக் குறைவில்லை. அவர்களுக்குள் ஒரு சுற்றிவரும் லைப்ரரி. தமிழ்ப் பத்திரிகைகள், ஆங்கிலப் பத்திரிகைகள், புத்தகங்கள். இவை நாளுக்கொன்றாக மாறி மாறிக் கைக்கு வந்து சேரும். அவன் ஏதாவது ஒரு தமிழ்ப் புத்தகத்தை எடுத்துக் கொள்வான்.

''உங்களுக்குப் பிடித்தது தமிழ்ப் புத்தகங்கள்தானா?'' என்று அவள் கேட்பாள்.


''ஏதோ ஒன்று.''


''ஆமாம். உங்கள் மனைவிக்கும் பொழுது போக வேண்டுமே? அவர்களுக்காகத்தானே முக்கியமாய் நீங்கள் வாங்கிக் கொண்டு போகிறீர்கள்?''

அந்தக் குரலிலேயே விளங்காத ஓர் ஆதங்கம்.

அவன் பதிலை ஆவலாய் எதிர்பார்த்து மோவாயின் குழியில் நீர்ச் சுழியாய்த் தோன்றி மறையும் புன்னகை.

''இதைக் கொண்டு போய்க் காட்டுங்களேன்!'' என்று ஒரு நாள் அவள் ஆங்கில





சிறுவர்கள்
முகம் மலர
சிறந்த பரிசு

Nutrine மிட்டாய்கள்

நியூட்ரைன் கன்பெக்ஷனரி கம்பெனி பிரைவேட் லிமிடெட்
சித்தூர் (ஆந்திரப் பிரதேசம்)



துயரில் ஆழ்ந்த நாடு

பல நூற்றாண்டுகளாக இந்தப் புராதன நாட்டின் மக்கள் சொல்லொணாத் துயரில் ஆழ்ந்திருந்தனர். சுதந்திரோதயத்திற்கு ஒரு சில ஆண்டுகளுக்கு முன்னர் கூட நம் மக்களில் லட்சக்கணக்கானவர் ஒரு பிடி சோறுக்கும் வழியின்றி மாண்டனர். சுதந்திரத்திற்குப் பின் துரிதமான தொழில் வளர்ச்சியில் நவபாரதம் மெதுவாக உருவாகி வருகிறது. பிற்பட்ட நிலையிலுள்ள பாரத சமுதாயம் உய்வடைய நம் நாட்டில் கூடிய சீக்கிரத்தில் தொழில் அபிவிருத்தி ஏற்பட வேண்டும்.

மீண்டும் வளம் கொழிக்கும்

இந்தியாவில் முதன்முதலாக எஃகு நெடுங் குழாய்களையும், குழல்களையும் உற்பத்தி செய்து, வெளிநாடுகளுக்கும் ஏற்றுமதி செய்து சிரேஷ்டமான அந்நியசெலாவணி சம்பாதித்த பெருமை கலிங்கா ட்யூப்ஸைச்சார்ந்தது. கம்பெனியின் விஸ்தரிப்புத் திட்டம் நன்கு அமுலாகி வருகிறது. 1960க்குள் தற்போதைய வருஷாந்திர உற்பத்தி அளவான 40,000 டன்கள் 1,00,000 டன்களுக்கும் அதிகமாகப் பெருகும். பிரதி வருஷமும் 3,00,000த்துக்கு மேற்பட்ட கம்பங்களை உற்பத்தி செய்யவும் கம்பெனி எதிர்பார்க்கிறது.



கலிங்கா ட்யூப்ஸ் லிமிடெட்
33, சித்தரஞ்சன் அவென்யூ, கல்கத்தா-12
ஆலைகள்: சௌத்வார், கட்டாக், ஒரிஸ்ஸா



சஞ்சிகை ஒன்றைப் புரட்டிக் காண்பித்தாள். அது பெண்களுக்குரிய பத்திரிகை. நூல் வேலை, வீட்டு அலங்காரம், சமையல் நுணுக்குகள், குழந்தை வளர்ப்பு - இப்படி ரசமான செய்திகள் அதில் நிறைய இருந்தன.

அவன் தயங்கிய குரலில், "ஆகட்டும்! நாளைக்குக் கொண்டு போகிறேன்" என்று அவளிடமே சமாதானமாகக் கொடுத்துவிட்டான். ஆனால் அந்த 'நாளைக்கு' அப்புறம் வரவேயில்லை.

ஏதோ ஒரு சங்கத்தின் நிதிக்காக அவனுக்கு ஒரு டிக்கெட் வாங்கினார்கள். அன்று பிற்பகல், தன் டிக்கட்டையும் அவளிடமே கொடுத்து விட்டான் தேவராஜ்.

"ஏன்? உங்களுக்கு?"

"ஒன்று இருந்தால் ஒருவர்தானே போகலாம். நீங்கள் இருவரும் போய்விட்டு வாருங்கள்."

அவள் அவசரமாகக் கைப்பையைத் திறந்து தன் டிக்கட்டை எடுத்தாள். இரண்டையும் அவனிடமே கொடுத்து விட்டாள்.

"ஏன்?"

"அந்த இருவர் ஏன் நீங்களும் உங்கள் மனைவியுமாக இருக்கக் கூடாது?"

தான் காட்டிய காரணத்தைத் தன் மேலேயே திருப்பி விட்டதை உணர்ந்தபோது அவனுக்கு அசடு தட்டியது.

"டிக்கட் பணம், இந்தாருங்கள்!"

"அதற்குச் சிறிதும் அவசியமில்லை என்று நினைக்கிறேன்."

"ஏன்?"

"இந்த உதவி உங்களுக்குச் செய்ததில்லை; சங்கத்துக்காகச் செய்தது."

சங்கடத்தைச் சமாளிக்கப் பேச்சை மாற்றியே ஆகவேண்டும் போல் இருந்தது. அவன் சஞ்சலத்தை அவளும் நன்றாகத் தெரிந்து கொண்டு விட்டாள்.

"நீங்கள் தயங்க வேண்டாம். டிக்கெட் இருந்திருந்தாலும் நான் போயிருக்க மாட்டேன். எனக்கு இதில் எல்லாம் ஈடுபாடு இல்லை." அவள் குரல் அவனை அமைதிப் படுத்த முயல்வது போல் இருந்தது.

"நீங்கள் போகாவிட்டால் அவரும் போக மாட்டார் போலிருக்கிறது."

"அப்படித்தான் வைத்துக் கொள்ளுங்கள்!"

தனக்கே புரிந்த ரகசியத்தில் அவள் தலை குனிந்து சிரித்துக் கொண்டாள். கனிந்த ஆர்வத்தோடு அவள் பதில் சொன்ன விதம் அவன் மனத்தில் ஏதோ ஓர் இனந் தெரியாத உணர்வைத் தட்டி எழுப்பியது. அங்கிருந்து போய் விட்டான். பொறுமையா அது?

கிறிஸ்துமஸ் பண்டிகைக்கு ஒரு வாரம்கூட இல்லை. கடையில் வியாபாரம் ஒரே மும்முரம்.

அவன் மேஜையின் மேல் அவள் ஒரு சிறு பெட்டியைக் கொண்டு வந்து வைத்தாள்.

"என்ன இது?"

"உங்கள் மனைவிக்கு நான் கிறிஸ்துமஸ் பரிசாக இதைக் கொடுக்கலாம் என்று நினைக்கிறேன்" என்றாள் அவள்.

அவன் பெட்டியைத் திறந்தான். அது ஒரு வெள்ளி ப்ரூச்.

"எதற்காக இதெல்லாம்? விலை நிறைய இருக்குமே?"

அவள் பதில் சொல்லவில்லை. ஆனால் ஏதோ கேட்கத் தயங்குவது போல இருந்தது.

"என்ன யோசிக்கிறீர்கள்?"

"ஒரு யோசனை."

"என்ன அது?"

"உங்கள் மனைவியை நான் பார்க்க வேண்டும். இதை நானே கொடுக்க விரும்புகிறேன்."

அவள் பார்வையில் வினவாமல் சொல்லி அழைக்கும் ஒரு வினயம். அவன் தடுமாறிப் போனான். என்ன பதில் சொல்வதென்று தெரியவில்லை. இனி எதிர் நீச்சல்தான்.

"நானும் உங்கள் கணவருக்கு ஒரு 'டை' பரிசாகக் கொடுக்க நினைக்கிறேன். அவருக்கு எந்த மாதிரி இருந்தால் பிடிக்கும்?"

"இது ஏதாவது போட்டியா என்ன?"

"அப்படி இல்லை. இருந்தாலும் உங்களிடமிருந்து நான் தெரிந்து கொண்டதாகவே இருக்கட்டுமே!"

"அதற்குத் தேவை இல்லை."

ஆனால் அவள் சொல்லியபடியே ஒரு 'டை'யை வாங்கிக் கொண்டு வந்து விட்ட போது அவனால் மறுக்க முடியவில்லை. பதில் பேசாமல் அதை வாங்கிக்கொள்ளப் போனான்.

"இருக்கட்டும். நானும் உங்கள் கணவரைச் சந்திக்க விரும்புகிறேன்."

"எதற்கு?"

அவள் தயக்கம் அவனுக்கு ஆச்சரியமாக இருந்தது. அதுவே அவள் இயல்பை ஓரளவு

கருத்தொருமித்த காதலர்

"கட்புலனுக்கு எட்டாத சில விஷயங்களே உலகை இயக்குகின்றன. அவை உஷ்ணம், மின்சாரம், காதல்" என்றார் ஒரு மேனாட்டு அறிஞர்.

கண்ணுக்குப் புலனாகாத காதல் காரணமாக மாபெரும் சாம்ராஜ்யங்கள் அழிந்திருக்கின்றன! மாபெரும் யுத்தங்கள் நிகழ்ந்திருக்கின்றன. இக் காதல் அனேக சாம்ராஜ்யங்களை உண்டாக்கியும் இருக்கிறது. பல பெரும் போர்களைத் தீர்த்தும் வைத்திருக்கிறது. இந்தக் காதலின் சக்தியே சக்தி!

இந்தக் காதல் எப்பொழுது இன்பமாக மாறுகிறது என்பதை நமது அவ்வைப் பாட்டி வெகு அழகாகக் கூறுகிறார்.

"காதல் இருவர் கருத்தொருமித்து — ஆதரவு
பட்டதே இன்பம்"

இப்படிக் கருத்தொருமித்த காதலர்களை இவ்விதழ் அட்டையில் வண்ணச் சித்திரமாக அளிக்கிறார் நமது ஓவியர் கல்பனா.

புரிய வைப்பது போலவும் இருந்தது. அவள் கணவன் எப்படிப்பட்டவன்? தன்னை எப்படி அறிமுகம் செய்து வைப்பதென்று அவள் தயங்குகிருளோ?

அவள் விரல்கள் பரிசுப் பெட்டியின் மேல் தாளமிட்டுக் கொண்டிருந்தன.

அவன் "சரி, நாம் நால்வருமே சந்தித்து அவரவர் பரிசை அவரவரே கொடுத்து விடலாமே!" என்று சொன்னுன்.

அவன் திடீரென்று இப்படிப் பின்வாங்கியது அவளைத் திகைக்க வைத்தது. அவனுக்கு ஏன் தயக்கம்? அவன் மனைவி ஒரு சந்தேகப் பிராணியாக இருப்பாளோ? அவள் பார்வை அவனை ஒரு முறை அளந்தது.

"சரி! இருவருமே விட்டுக் கொடுத்து விடுவோம். ஞாயிற்றுக் கிழமை சாயங் காலம் ஆறு மணிக்கு ஏதாவது ஒரு ஹோட்டலில் சந்திக்கலாமே!"

அதற்குமேல் அவனுல் சமாளிக்க முடியவில்லை. ஆனுல் சொல்லிவிட்டதைச் செயலில் நிறைவேற்றுவது அவ்வளவு எளிதாக இல்லை.

அப்படித்தான் தோன்றியது அவனுக்கு, ஞாயிற்றுக்கிழமை மாலை ஹோட்டலின் வெளி மாடியில் காத்துக் கொண்டிருந்த போது. 'இனிமேல் எதையும் மறைப்பதற்கில்லை. இன்னும் சில நிமிஷங்களில் அவளுக்கு எல்லாம் தெரிந்துவிடும்' பக்கத்து நாற்காலியைத் திரும்பிப் பார்த்தான். அவனிடமிருந்து ஒரு பெருமூச்சு எழுந்து ஓய்ந்தது.

சரசரவென்ற புடவையின் சத்தம். அவன் திரும்பினுன். அவள் நின்றுகொண்டிருந்தாள்.



மறைவு: 19-5-59

எங்கள் அன்புத் தந்தையார்
குறிக்கரை
பாவா C. பஞ்சாபகேச முதலியார்
அவர்களின் ஞாபகார்த்தமாக

பாவா சொக்கப்பா
ராஜம் பாலசந்திரன
கே. பி. பங்கஜம்
சரோஜினி மருதநாயகம்
ஞானசௌந்தரி குஞ்சரம்

"நீங்கள் வெகு நேரமாகக் காத்துக் கொண்டிருக்கிறீர்களா?"

"இல்லை...இப்போதுதான்...கொஞ்ச நேரமாய்..." அவன் குரல் தடுமாறியது.

அவள் பக்கத்து நாற்காலியில் உட்கார்ந்து கொண்டாள். அவன் தன் பையிலிருந்த டையை எடுத்து மேஜையின்மேல் வைத்தான். ஏதோ கேட்க வாயெடுத்தான். அதற்குள் லீலாவே கேட்டுவிட்டாள்.

"உங்கள் மனைவி எங்கே?"

"அவள்...அவளுக்கு...அதாவது..."

அவள் முகம் கருங்கியது. தன் கையிலிருந்த பெட்டியை அவனிடமே கொடுத்துவிட்டாள்.

"சரி! நீங்களே கொடுத்து விடுங்கள்!"

அவன் டையை அவள் புறம் நகர்த்தப் போனுன். ஏனே அவளைப் பார்க்கவே பரிதாபமாக இருந்தது. அவள் கண்கள் கலங்கின.

"வேண்டாம்! இனிமேல் சொல்லிவிடுவது தான் நல்லதென்று நினைக்கிறேன். நான் கலியாணமாகாதவள். எங்கள் குடும்பத்துக்குத் தெரிந்த ஒருவர் மூலமாக இங்கே வேலைக்கு வந்தபோது அவர் சொன்னுர், மணமான பெண்களுக்கு வேலை கொடுப்பதற்குத்தான் முதலாளி சம்மதிப்பாரென்று. அவர் சொல்லிக் கொடுத்ததைத்தான் நானும் சொன்னேன். இப்படி ஒரு சோதனை வருமென்று அப்போது நான் நினைக்கவில்லை. உங்களை ஏமாற்ற வேண்டுமென்று நான் நினைக்கவில்லை. ஆனுல் எனக்கு மீள வேறு எப்படியும் வகை இல்லை. முதலாளியை ஏமாற்றி விட்டதாகவும் எனக்குத் தோன்றவில்லை. என்னையே நான் ஏமாற்றிக் கொண்டேன். அவ்வளவுதான். நான் உண்மையைச் சொல்லிவிட்டு நாளையோடு நின்றுகொள்ளத் தீர்மானித்திருக்கிறேன்" என்றுள் லீலா.

"ஏமாற்றிக் கொண்டேன் என்றீர்களே! உங்களுக்கு என்ன...ஏமாற்றம்?"

புரிந்தும் புரியாத உணர்ச்சிகளை வெளியிட இயலாமல் அவன் முகத்தில் அரை நிழலொளி பரவியது. அவள் பார்வை 'இதை நான் சொல்லித்தான் நீங்கள் புரிந்து கொள்ள வேண்டுமா?' என்று கேட்பதுபோல் இருந்தது.

அவள் அழகை எடுத்துக் காட்டும் அந்த மருண்ட நிலை அவனுக்குப் புரியாமல் இல்லை. 'பக்'கென்று அவன் சிரித்தது அவள் துயரத்தை மேலும் வளர்த்தது.

"எதற்காகச் சிரிக்கிறீர்களாம் இப்போது?"

அவள் உதடுகளில் கோபம் அழுகையாக நெளிந்தது.

"எங்கே உங்களுக்கு என்னைப் பற்றிய உண்மை தெரிந்து போய்விடுமோ என்றுதான் பயந்து கொண்டிருந்தேன்!" என்றுன் அவன்.

இருள் பிரிவதுபோல் அவளுக்கு எல்லாமே புரிய ஆரம்பித்தது. சந்தோஷத்தில் முகம் குழம்பியது. தலையைக் குனிந்துகொண்டாள்.

"இந்த பரிசை நீங்கள் எப்போது அணிந்து கொள்ளப் போகிறீர்கள்?" என்று அவன் கேட்டது அவள் காதில் தேனுக விழுந்தது.

"நீங்கள் அந்த டையை அணிந்து கொள்ளும்போது!" துணிச்சலுடன்தான் கூறினுள் லீலா. ஆனுலும் அந்தத் துணிவும் நாணத்தில் தேய, தலையைக் கவிழ்த்துக் கொண்டாள்.

இப்பொழுது

ப்ரூக் பாண்ட் தேயிலை



பாக்கெட்டுகள்
மெட்ரிக்
எடைகளில்







மேலே குறிப்பிட்ட, 500 கிராம், 250 கிராம், 100 கிராம், 50 கிராம் மெட்ரிக் எடைகளில் பருக் பாண்ட் தேயிலை பாக்கெட்டுகள் இனிமேல் கிடைக்கும். இவை சற்றேறக்குறைய—முன்பு இருந்த பாக்கெட்டுகளின் நிறைக்கு—முறையே 1 பவுண்டு, ½ பவுண்டு, பவுண்டு, 2 அவுன்ஸ்—இவைகளுக்குச் சமமானவை.

நீங்கள் வழக்கமாக வாங்கும் ப்ருக் பாண்ட் தேயிலையின் அளவை உங்கள் கடைக்காரரிடம் சொல்லுங்கள். அவர் அதற்குச் சரியான மெட்ரிக் எடையுள்ள பாக்கெட்டை உங்களுக்குக் கொடுப்பார். இம்மாற்றத்தினால், ப்ருக் பாண்ட் தேயிலையின் குணத்திலோ, புதுமையிலோ, ஒரு சிறிதும் மாறுதல் இல்லை என்பது நினைவிலிருக்கட்டும்.

உங்களுக்குப் பிரியமான

ப்ரூக் பாண்ட் தேயிலையை

மெட்ரிக் எடைகளிலேயே கேளுங்கள்

ப்ருக் பாண்ட் இந்தியா பிரைவேட் லிமிடெட்

JWTBB 375

மாடி வீட்டு மாப்பிள்ளை

"மாப்பிள்ளை 'மாடி வீட்டை'ச் சேர்ந்தவர்தானே?" என்று சிரித்தேன் நான்.

சீதாவின் முகம் நாணியது. ஆனால் அடுத்த கணமே அவ்வுணர்ச்சியை முற்றிலும் மறைத்து, "நல்ல ஆள் நீ! ஒண்ணு சொன்னா அதை ஆயுசுக்கும் மறக்கமாட்டே போல இருக்கே!" என்றாள்.

"என்ன சொல்றாள் சங்கர்? எது ஆயுசுக்கும் மறக்காது? யாருக்கு மறக்காது?" என்று கேள்விகளை அடுக்கியபடியே கூடத்துக்கு வந்தாள் ஜானகி மாமி.

"ஒண்ணுமில்லையம்மா! முதன் முதல்லே சங்கர் வரன் பார்த்துச் சொன்னானே, அப்ப நடந்ததைச் சொல்றான்!" என்று சீதா விளக்கம் தந்தாள்.

"ஓ! அதுவா......?" என்று எதையோ எண்ணத் தொடங்கிய ஜானகி மாமி, "ம்! யார் யாருக்கு எங்கெங்கே பிராப்தம் இருக்கிறதோ, அங்கேதானே நடக்கும்!" என்று முடித்தாள்.

கொஞ்சநேரம் பொறுத்து, "நீதான் எல்லாவற்றையும் செய்யணும் சங்கர்! ஆச்சு...இதோ இதுன்னு சித்திரை பிறந்துடும்! விக்னம் இல்லாமே கல்யாணம் நடக்கணும்!" என்று குரல் தழுதழுக்கச் சொன்னாள்.

"அவசியம் செய்யறேன் மாமி!" என்று கூறிவிட்டு, "வரேன் சீதா!" என்று அவள் பக்கம் திரும்பி விடை பெற்றேன்.

பஸ் ஸ்டாண்டை நோக்கி நடக்கையில் என் மனம் திருப்தியால் நிறைந்திருந்தது. கடைசியில் சீதாவின் மனத்துக்கேற்ப 'மாடி வீட்டு' மாப்பிள்ளையே கிடைத்து விட்டான்! போகட்டும், அவள் அதிர்ஷ்டசாலிதான்! இதற்குத்தான் எப்படித் தூக்கியெறிந்தாற்போல் விடுவிடுவென்று பேசிவிட்டாள் சீதா?

இட்டத்தட்ட நாலைந்து மாதங்களுக்குமுன் நடந்த நிகழ்ச்சி அது. கணவர் மறைவினால் ஏற்பட்ட துக்கம் காலச்சுவட்டில் மெல்ல மெல்லத் தேய்ந்தது. ஆனால் அதே சமயம் பெண்ணின் பருவமும் வளர்ச்சியும் ஜானகி மாமிக்குக் கவலையை அளித்துத் துக்கத்தை அதிகமாக்கின.

'மாமி மாமி' என்று கூப்பிடுவேனே ஒழிய அப்படியொன்றும் நெருங்கி உறவல்ல. இறந்துபோன சீதாவின் தந்தை எனக்கு ஒன்றோ இரண்டோ விட்ட மாமாதான். என்றாலும் சொந்த மாமாவுக்குமேல் எவ்வளவோ உதவிகள் செய்திருக்கிறார். படிப்புக்காக நான் இங்கு ஹாஸ்டலில் தங்கியிருந்த போது பலவிதங்களில் உபகாரமாக இருந்தவர். பெண்ணும், மாமியும் அவர் பாதையில் சற்றும் பிறழாமல் இருந்தார்கள். எங்கோ கண்காணாத தொலைவில் பல மைல்களுக்கப்பால் பெற்றோர்கள் இருக்க, நான் இங்கே வாழ்க்கைச் சகடத்தைக் கொஞ்சத்துக்குக் கொஞ்சமாவது அலுப்புத் தட்டாமல் ஓட்டி வருகிறேனென்றால் அதற்கு மூல காரணம் ஜானகி மாமியும் சீதாவுந்தான்.

மாமா போகுமுன் மனைவிக்கும் பெண்ணுக்கும் தங்கள் வயிற்றுப்பாட்டைக் கவனிக்கும் அளவுக்குச் சொத்து வைத்துவிட்டுப் போயிருந்தார். சீதாவை எஸ். எஸ். எல். ஸி.க்கு மேல் படிக்க வைக்காவிட்டாலும் தைரியத்தை — சுயமாகவே சம்பாதிக்கும் தைரியத்தை-அளித்து விட்டுப் போயிருந்தார்.

என்ன இருந்தாலும் மாமிக்கு இயற்கையான கவலை முளைத்தது. எத்தனை நாட்கள்தான் பெண் அலுவலகத்திலிருந்து திரும்பும் வரையில், வயிற்றில் நெருப்பைக் கட்டிக் கொண்டு உட்கார்ந்திருப்பது? எவனாவது ஒருவனுக்குக் கைப்பிடித்துக் கொடுத்து, சீதாவை அவனுக்காக வழிமேல் விழிவைத்திருக்க வழி செய்ய வேண்டுமே!' என்பதுதான் கவலை.



"என்ன போ சங்கர்! உனக்காவது வயசு கொஞ்சம் ஜாஸ்தியாயிருக்கப்படாதோ? பேசாமே உனக்கே கொடுத்து விடுவேன் சீதாவை!" என்று ஒருநாள் மாமி அலுத்துக் கொண்டாள். வயது வித்தியாசம் தவிர, நானும் சீதாவும் அண்ணன் தங்கைபோல் பழகி வருகிறோம் என்பதுமாமிக்

குத் தெரிந்திருந்தாலும், பெண்ணைக் கல்யாணம் செய்து கொடுக்க வேண்டுமே என்ற ஆதங்கம் அவளை அப்படிப் பேசச் செய்தது.

அருகிலிருந்த கீதா கலீரென்று சிரித்தாள். "நல்ல அம்மா நீ! நீ பார்க்கிற 'மாப்பிள்ளைப் பார்வை'யிலே தராதரமே இல்லாமல் பண்ணிடுவே போலிருக்கே!'' என்றாள்.

''ஆமாம் போன மாசமோ 'என்னவோ பெண் பார்க்க வருவதாகச் சொன்னீர்களே? என்ன ஆச்சு?'' என்று கேட்டேன் பேச்சுக் கொடுக்க வேண்டி.

''சொன்னா: இவ அதிர்ஷ்டம் மறு வாரமே 'பிள்ளைக்கு இப்போ அவசரமில்லே'ன்னு எழுதியும் விட்டார்கள்! வேலை வரவேண்டும் எதுக்கும்'' என்று சொல்லிப் பெருமூச்சு விட்டாள். ஏதோ இடீரென்று நினைத்துக் கொண்டாற்போல் ''உன் ஆபீஸிலேயே உனக்குத் தெரிஞ்சவர்கள் யாரேனும் பாரேன்: வரதட்சிணை சற்றுக் கூடமாட இருந்தாலும் கூடப் பரவாயில்லே!'' என்றாள்.

''பார்க்கிறேன்!'' என்று ஒப்புக்குச் சொல்லி விட்டு அகன்றேன்.

ஆனால் அடுத்த தரம் அங்கு போனபோது மாமி என்னைத் துளைத்தெடுத்து விட்டாள்.

'கொஞ்சம முனைப்பாகவே பாரடா! பணம் நிறைய இல்லாட்டாக்கூட கிடைக்கிற வரும்படியிலேயே யோக்கியமா குடும்பம் நடத்து பவனாயிருந்தா போதும். ம்...அவர் நிம்மதியாய்ப் போய்ச் சேர்ந்துட்டார், இந்தப் பாரத்தை என்மேல் சுமத்திட்டு!'' என்று கண்ணைத் துடைத்துக் கொண்டாள்.

என் மனம் நெகிழ்ந்தது. சற்றுத் தள்ளிப் புத்தகம் படித்துக் கொண்டிருக்கும் கீதாவின் மேல் என் பார்வை லயித்தது. அவள் முகத்தில் துலங்கின உணர்ச்சியை என்னவென்று சொல்ல? 'நமக்கும் கல்யாணமாகுமா?' என்ற ஏக்கத்தின் முழு பிரதிபலிப்பாக முகம் காட்சியளிப்பதுபோல்எனக்குத் தோன்றியது.

''என்னால் முடிஞ்சவரைக் கும் பார்க்கிறேன். மாமி.'' என்று உறுதிகூறிக் கீதாவை நோக்கினேன். ''கவலைப்படாதே கீதா! முதல்தர மாப்பிள்ளையாக நான் பார்த்துத் தரேன்!'' என்றேன்.


கீதா அப்போது என்னைப் பார்த்த பார்வையில் அலட்சியம்தான் இருந்தது. 'இவன் என்ன பார்த்துவிடப் போகிறான்!' என்ற நினைப்போ?

நான் சற்றுச் சுறுசுறுப்பாகவே அலைந்தேன். எவ்வளவோ உபகாரம் எனக்குச் செய்திருக் கிறாளே மாமி!

கையில் ஜாதகக்கட்டை வைத்துக்கொண்டு நான் இப்படித் திரிவது ஆபீஸ் சிநேகிதர்களுக்கெல்லாம் வேடிக்கையாயிருந்தது.

''என்னடா பெரிசாப் பெண்ணைப் பெத்தவன் மாதிரி அலையறே!'' என்று கிசுவம் கோட்டா பண்ணினான்.

''பெண்ணைப் பெத்தாத்தான் பொறுப்பா, அதுக்கும் மேலே நான்'' என்று தொடங்கி விளக்கினேன்.



அரைகுறையாகக் காதில் வாங்கிக்கொண்ட பாலு, "ஏன், நீயே கல்யாணம் செய்து கொள்வதுதானே! வயசாவது வெயசாவது! இந்தக்காலத்திலே எவனும் வயதைப் பார்க்கிறதில்லே" என்றான்.

"ஷட் அப்! அவள் என் தங்கை மாதிரி!"

பாலு உடனே அடங்கி விட்டான். அவன் கொஞ்சம் வாய்த்துடுக்கு. ஆனால் நல்லமாதிரி.

சிறிது நேரம் எதையோ யோசிப்பவன் போலிருந்தான். "என்னவோ நீ ஒரு கல்யாணத்தை முடிச்சு நல்ல பேர் வாங்கிக்கணும்னு பார்க்கிறே! ஆனா அவ்வளவு கஷ்டமில்லே!" என்று சொன்ன பாலு, "பெண்ணுக்கு எத்தனை வயசிருக்கும்?" என்ற கேள்வியைப் போட்டான்.

"ஏன், நீ மாப்பிள்ளை பிடிச்சுத் தரயா?"

"ஆமாம்பா ஆமாம்! எல்லாம் விவரமாச் சொல்லு! நமக்குத் தெரிஞ்சவர் நம்ம ஊர்க்காரர் இங்கே ஒரு கம்பெனியிலே வேலையாயிருக்கிறார்! பெயர் சுந்தரராமன்; மாசம் இருநூறு ரூபாய் சம்பளம். ஆனா ஒண்ணு, படிப்பு எஸ். எஸ். எல். சி.தான்!"

"பூ. இவ்வளவுதானே! இந்தக் காலத்திலே உத்தியோகம்தான் படிப்பையும் பட்டத்தையும் விட முக்கியம்!" என்றேன். எனக்கும் உற்சாகம் பொங்கி வழிய ஆரம்பித்து விட்டது. அப்போது காரியம் சித்தியாகிவிட்டது போன்ற பெருமிதத்தில் ஆழ்ந்தேன்.

மறு நாள் பாலுவே என்னைச் சுந்தரராமனிடம் அழைத்துச் சென்றான். அவன் ஆஜானுபாகுவாக விளங்கினான். வயது கொஞ்சம் அதிகமாயிருக்குமோ என்று தோன்றியது. பாதகமில்லே; மற்றதெல்லாம் நன்றாக அமைந்து விட்டால் சரிதான்.

"உங்க ஜாதகம்?" என்று கேட்டேன்.

"தூத்துக்குடியிலே என் அண்ணா மன்னி இருக்கா! எழுதிப் போடுங்கோ!"

"ரொம்ப வந்தனம்" என்று கூறி விடை பெற்றோம்.

ஜாதகம் கைக்கு வந்து பொருத்தம் பார்க்கிற வரையில் 'திக்திக்' கென்றுதானிருந்தது. நல்ல வேளையாகப் பொருந்தி விட்டது. ஜானகி மாமியிடம் சென்று பேசி, பெண்பார்த்தல் போன்ற மற்ற விவரங்களைத் தெரிவிப்பதாக அவளிடம் சொல்லிவிட்டுச் சென்றேன்.

எனக்குத்தான் எத்தனை சந்தோஷம்! என்னால் கடைசியில் கீதாவின் கல்யாணம் நடக்கப் போகிறது! அத்தனை மகத்துவம் எனக்கிருக்கிறதா! மாமியின் முகத்தில் தோன்றப் போகும் நன்றியும், கீதாவின் வதனத்தில் மின்னப் போகும் மலர்ச்சியும் கற்பனையிலேயே காட்சியளித்து என்னைப் புளகமுறச் செய்தன.

பீடிகை எல்லாம் போட்டு நிதானமாகத் தெரிவிக்க வேண்டுமென்று திட்டங்கள் வகுத்திருந்தாலும் அவர்கள் வீட்டை அடைந்த மாத்திரத்தில் உற்சாகம் பீறிட்டது. அடக்க இயலாமல் "ஒரு நல்ல வரன் பார்த்து விட்டேன், மாமி!" என்றேன்.

ஜானகி மாமி நன்றாக நிமிர்ந்து உட்கார்ந்தாள். "ஜாதகம் எல்லாம் பார்த்தாச்சோ? பையன் எப்படி?" என்றாள்.

"முதல்தரம்! ஜாம் ஜாம்னு கீதாவை வச்சுண்டு குடித்தனம் நடத்துவான். ஒரு பெரிய கம்பெனியிலே வேலை. இருநூறு ரூபாய் சம்பளம்! ஜாதகமெல்லாம் நன்றாகப் பொருந்தியிருக்கு. பெண் பார்த்து மேலே ஆக வேண்டியதுதான் பாக்கி" என்றேன் ஒரே மூச்சில்.

மாமி "ம்" என்றவாறே முகவாய்க் கட்டையைத் தடவினாள்.

"ஆமாம், கீதா எங்கே?" என்றுகேட்டேன்.

"ஆபிஸிலேருந்து வரலையே" என்ற வண்ணம் வாசற்புறம் பார்த்த மாமி "கீதா! உனக்கு நூறுவயசு இப்பத்தான் உன்னைக் கூப்பிட்டான் சங்கர்!" என்றாள்.

"கங்கிராசுலேஷன்ஸ்! பேஷான வரன் பார்த்து விட்டேன்! பெரிய கம்பெனியிலே வேலை. நல்ல உத்தியோகம்!" என்றேன் படபடப்பாக, அவளை உற்று நோக்கியபடியே.

கையில் கொண்டு வந்திருந்த ஆபீஸ் பைலைத் தொப்பென்று கீழே போட்டாள் கீதா. முகம் குபுகுபுவென ரத்தமேறிச் சிவந்து போயிற்று. அடுத்த விநாடியே சிரமப்பட்டுப் பாவனையை மாற்றிக்கொண்டு, "தேவலையே! எனக்காக ரொம்பச் சிரமம் எடுத்திருக்கே போலிருக்கே!" என்றாள்.

என் உற்சாகமெல்லாம் நொடியில் குன்றிச் சாம்பலாயிற்று. நான் எதிர்பார்த்ததென்ன? இங்கு நடப்பதென்ன! துளிக்கூட மனம் கலவாத எத்தனை அழகான உதட்டு உபசாரம்!

"என்ன கீதா உனக்குப் பிடிக்கவில்லையா?" என்று திகைப்புடன் ஜானகி மாமி கேட்டாள்.

கீதா சட்டென்று பதில் சொல்லவில்லை. அவள் மனம் எதையோ தீவிரமாகச் சிந்தித்துக்கொண்டிருந்ததை முகம் காட்டியது.

"ம்! மாப்பிள்ளையின் பெயரென்ன?" என்று என்னைப் பார்த்துக் கேட்டாள்.

"ஏன்? சுந்தரராமன்! பெயர் நன்றாக இல்லையோ?" என்று நான் கேட்டேன். அவள் காட்டிய சிறிது அக்கறை எனக்கு ஊக்கம் தந்தது.

"ம்... அவர் பட்டதாரியா?" என்று கண்களில் ஒளி வீசக் கேட்டாள்.

"பட்டதாரி இல்லாட்டா என்ன? நல்ல ஸ்டெடியான வேலை பிரபல கம்பெனியிலே. இப்போது எத்தனை பட்டதாரிகள் வேலையில்லாமல் திண்டாடுகிறார்கள்?" என்று அவளைச் சமாதானப் படுத்துவது போல் சொன்னேன். மெள்ள மெள்ளத் தெம்பு வருகிறாற் போலிருந்தது எனக்கும்.

ஆனால் கீதா சொன்ன பதில்!

"பூ! ஓட்டு வீடுதானா!" என்றாள் கீதா இளக்காரமாக. "இதோ பாரு சங்கர்! இந்த நாளிலே எஸ். எஸ். எல். சி. படிச்சவா ஓட்டு வீட்டுக்குச் சமானம்! பட்டம் வாங்கினவா மாடி வீடு போல! குறைந்தபட்சம் காலேஜிலே நுழைஞ்சிருந்தால் மொட்டை மாடியென்றாவது நினைக்கலாம்! பின்னால் கட்டடம் எழுப்ப வாய்ப்பு இருக்குமே!"

நான் அதிர்ந்து போனேன். கொஞ்ச நாழிகைக்குப் பின் சுதாரித்துக் கொண்டு, "பிடிக்கலைன்னு சுருக்கமாகச் சொல்லிவிடேன் கீதா!" என்றேன் சலிப்புடன்.

''பிடிக்கலேன்னு சொல்லலியே! சும்மா வரனே அலசிப் பார்த்தேன்!'' என்று சொல்லி விட்டுச் சிரித்தாள்.

அவள் சிரிப்பு என் கோபத்தை அதிகப்படுத் தவே செய்தது. ''நீ இப்போது இருக்கிறது ஒட்டு வீட்டிலேதான் சீதா! ஞாபகமிருக் கட்டும்'' என்றேன் ஆத்திரத்துடன்.

''இல்லேன்னு நான் மறுக்கல்லியே! ஆனால் அதுக்காகக் கல்யாணம் போன்ற முக்கியமான பிரச்னையில் மாடி வீடு போன்ற மாப்பிள் ளையை எதிர்பார்க்கக் கூடாதுன்னு எங்கே யாவது எழுதி வைச்சிருக்கா சங்கர்?''

நான் மௌனமானேன். இப்படி எதிர்த்து எதிர்த்துப் பேசும் திறன் சீதாவுக்கு எப்படி வந்தது? ஏன் வந்தது? எதுவும் புரியவில்லை' அலுப்புத்தான் மிஞ்சியது.

''நான் வரேன் மாமி. சீதாவின் மனசு புரியாமல் தெரியாத்தனமா நடந்துட்டேன்!'' என்று கூறி வாட்டத்துடன் எழுந்தேன்.

ஜானகி மாமிக்கு என் மேல் பரிதாபமாக இருந்தது போலும். ''என்னப்பா செய்யறது? இதெல்லாம் நம்ம கையிலே இல்லே. நீயும் வேறு வரன் பார்த்துக்கொண்டிரு! நீ இந்த விஷயத்தை மறந்தே போயிட்டியோ என்கிற தற்காக ஞாபகமூட்டினேனே தவிர இத்தனை அவசரமா பார்க்க வேணும்கிறதில்லை! மெள் ளப் பாரேன்! பிராப்தமிருந்தால் முடிகிறது!''

என்று அவளும் சமத்காரமாக மகள் பக்கம் சேர்ந்து பேசினுள்.

நான் எழுந்தேன். "போயிட்டு வரேன், கீதா! என்னைப் போல ஆணெல்லாம் இந்த மாதிரி விஷயங்களில் இறங்கினது ரொம்பத் தப்பு!" என்று சொல்லிப் பதிலை எதிர்பாராமல் கிளம்பினேன்.

அதற்கப்புறம் இரண்டு மாதங்கள் அந்தப் பக்கம் காலடி எடுத்து வைக்கவில்லை நான்.

ஓரிரண்டு மாதங்கள் கழிந்த பிறகு எனக்குக் காலம் சற்று ஆறுதலைக் கொடுத்தது. பழைய சம்பவமும் புண் ஆறித் தேறுவதுபோலிருந்தது. மாமி வீட்டுக்குச் சென்றேன்.

"என்ன சங்கர்! இன்றைக்குத்தான் என் மேலே உள்ள கோபம் தீர்ந்தது போலிருக்கு!" என்று புன்னகையுடன் வரவேற்றாள் கீதா.

என் மனம் அந்தக் கணத்திலேயே பாகாய் உருகியது. ஒவ்வொரு பெண்ணுக்கும் தனக்கு உரியவரைத் தேர்ந்தெடுக்கும் உரிமை கிடையாதா என்ன?

"கோபமொண்ணுமில்லே" என்று மழுப்பினேன்.

"யாரது சங்கரா? எட்டிக் கூடப் பார்க்க முடியாதபடி அவ்வளவு கோபம் போலிருக்கு! கீதா சொல்லிச் சொல்லி வருத்தப்பட்டுக் கொண்டிருந்தாள்" என்று கவாதினத்துடன் ஜானகி மாமி கடிந்தாள்.

நானும் மனஸ்தாபம் கோபம் எல்லாவற்றையும் மறந்து சகஜமாகப் பேசினேன். ஆனால் வரன் சமாசாரத்தை மட்டும் தொடவில்லை! நான் முனையாவிட்டால் கீதாவுக்கு வரனே கிடைக்காதா? ஒருதடவை அனுபவப் பட்டது போதுமே!

இந்த நிலையில்தான் திடீரென்று எனக்குப் 'போன்' செய்து கூப்பிட்டனுப்பினுள் மாமி.

கீதாவுக்குக் கல்யாணம் நிச்சயமாகி விட்டதாம். மாப்பிள்ளை 'ஸ்டேட் பாங்கி'ல் வேலையாயிருக்கிறராம். சித்திரை மாதம் கல்யாணமிருக்குமாம்.

மாமி சொன்ன விவரங்களையும், கீதாவின் முகமலர்ச்சியையும் உணர்ந்து கொள்ளவே எனக்கு இன்றையப்பொழுது சரியாயிருந்தது.

மறக்காமல், போகுமுன் "மாப்பிள்ளை ஓட்டுவீடா, மாடி வீடா?" என்று கேட்டு விட்டேன். பட்டதாரிதானும்; தேவலை, கீதா அதிர்ஷ்டசாலிதான்!

கல்யாணம் சித்திரை மாதத்தில் சுபமாக சிறப்பாக நிகழ்ந்தது.

"என்னவோப்பா! இருந்தது ஒரே பெண்! அவ மனசுப்பிரகாரம் நடத்தாச்சு! ஏதோ நீங்களெல்லாம் சிரமத்தைப் பார்க்காமல் ஒத்தாசை செய்த பலன்தான்!" என்று ஜானகி மாமி மனங்கலந்த நன்றியுடன் கூறினுள். கல்யாணத்துக்கு அடுத்த நாள். எல்லாரும் திருவிழா முடிந்தவுடன் கிளம்பு கிறவர்களைப்போல் இடம் பெயர்ந்து கொண்டிருந்தார்கள்.

"மனசு போலில்லாம! டிகிரி ஹோல்டராச்சே மாப்பிள்ளை!"

"நான் அதைச் சொல்ல...." என்ற மாமி வார்த்தையை முடிக்கு முன், "சங்கர்!" என்ற குரல் கேட்டது. கீதாதான் அழைத்தாள். "இப்படித் தனியாக வா!"

"என்ன?" என்று கேட்டபடி போனேன்.

என்னையே ஒரு கணம் பார்த்தாள் கீதா. ஏனே தெரியவில்லை. குப்பென்று நீர் பொங்கியது கண்களில். "என்னை மன்னிச்சுடு சங்கர்! உன்னிடம் பொய் சொல்லிவிட்டேன். 'அவர்' பட்டதாரி இல்லை! இண்டர்தான்!" என்றுள் தினறலுடன்.

அதைக் கேட்ட நான் திகைத்துப் போய் அவளைப் பார்த்தேன்.

"உங்கிட்ட இனிமேலும் சொல்லாட்டா என் மண்டை வெடிச்சுப் போயிடும் போலிருந்தது சங்கர்! ஏதோ வீம்புக்கு அப்போ அந்த மாதிரி சொல்லப்போகக் கடைசி வரை அப்படியே ஸ்தாபிக்க வேண்டியதாகி விட்டது!"

நான் இன்னமும் வாய் திறக்கவில்லை.

"எனக்கு இவரை முன்னாலேயே தெரியும். என் ஆபீசுக்குக் கொஞ்ச தூரம் தள்ளித்தான் இவர் 'பாங்க்'. அகஸ்மாத்தாக ஆரம்பித்த சந்திப்பு நாளடைவில் வளர்ந்தது. உண்மையான அன்புடன் பழகிவந்தார். உனக்கு ஞாபகமிருக்கா சங்கர், நீ வரன் பார்த்துச் சொன்னயே ஒரு நாள்? அன்றைக்குத்தான் நான் இவரிடம் எதிர்காலத்தைப் பற்றியெல்லாம் மனம் திறந்து பேசினேன். அம்மாவிடம் ஜாடைமாடையாகத் தெரிவித்து அவள் சம்மதத்தைப் பெற்றுவிட வேண்டுமென்ற நம்பிக்கையில் வீடு வந்த எனக்கு, நீ சொன்னது எப்படியிருக்கும்?"

என்னல் கீதாவின் நிலையை நன்கு ஊகிக்க முடிந்தது. "ம்...அப்புறம்?"

"அந்தச் சமயத்திலே எப்படியாவது நீ பார்த்த வரனை எதிர்க்கவேண்டுமென்ற நினைப்புத்தான் மேலோங்கியிருந்தது. அதோடு கூட நீ வேறு வரனை பார்க்க முடியாதபடி தடுத்தும் விடவேண்டும் என்ற ஆத்திரத்தில் உன் மனம் புண்படப் பேசி விட்டேன்! இன்னெரு காரணமும் உண்டு. 'இவர்' அப்போது தான் பிரைவேட்டா பி. ஏ. படித்துப் பரீட்சை எழுத முயன்று கொண்டிருந்தார். இவரைப் பற்றின கர்வம், அம்மாவைச் சரிக்கட்டவேண்டுமே யென்ற துடிப்பு, நீ வந்து சொன்னது எல்லாம் ஒன்று சேர்ந்தன...!"

"அதனால் என்ன? உன் மனத்துக்குப் பிடித்தவர் கிடைச்சாச்சே, அது போதும்" என்றேன் அவளைத் தேற்றும் எண்ணத்துடன்.

"இதிலே இன்னெரு வேடிக்கை என்னன்னு, நீ வந்து நிச்சயமான விவரத்தைக் கேட்டுவிட்டுப் போனயே அதுக்கு ரெண்டு நாள் முந்தி தான் இவர் ரிசல்ட் தெரிந்தது. ஒரு பார்ட் பெயில்! இருந்தாக்கூட விஷயம் தெரிஞ்சா நீ குத்திக் காட்டுவாயேன்னு நினைச்சு, மறைச்சுட்டேன்! ஆனா உங்கிட்ட உண்மையைச் சொல்லாத வரைக்கும் எனக்கு ஆறவே ஆறுது போலிருந்தது! ம்...அப்பாடா" என்று நிம்மதிப் பெருமூச்சு விட்டாள் கீதா.

நான் நேராகக் கீதாவை உற்று நோக்கினேன். "இண்டரானுல் பரவாயில்லை, கீதா! நீ சொன்னது போல அது மொட்டை மாடிக்குச் சமம்! மேலே கட்டடம் எழுப்ப வாய்ப்பு இருக்கு." கலகலவென்று சிரித்தேன்.

கீதாவும் கூடச் சேர்ந்து சிரித்தாள்.

நம் நாட்டு பெண்மணிகள் தங்களது அழகான நீண்ட கூந்தலைத் தொன்றுதொட்ட பழக்கப்படி வீட்டிலேயே தயாரிக்கப்பட்ட ஷாம்புவினால் சுத்தம் செய்கின்றனர். அது கூந்தலை மிகவும் நன்றாகவே சுத்தம் செய்யலாம். ஆனால் அது மிகவும் சிரமமான காரியம்.

ஷாம்பு எதற்கு?

வீட்டில் தயாரிக்கும் ஷாம்புவைவிட நல்ல தேங்காய் எண்ணெயினால் ஆலையில் தயார் செய்யப்பட்டு பாட்டிலில் கிடைக்கும் ஷாம்பு கூந்தலைச் சுத்தம் செய்ய வெகு சுலபமானது. டாடாவின் தயாரிப்பான இத்தகைய ஷாம்பு எளிதில் உபயோகிக்கக்கூடியது. நறுமணம் கொண்டது. அதன் மிருதுவான நுரை கூந்தலை நன்றாகச் சுத்தம் செய்து மயிர்க்கால்களிலிருக்கும் தூசி, அழுக்கு முதலியவைகளை அகற்றி கூந்தலை மிருதுவாகவும் பளபளப்பாகவும் இருக்கச் செய்கிறது.

பளபளப்பான கூந்தலுக்கு...

டாடாவின் ஷாம்பு



சவாரி

இதயன்


வேளை, மாலை. சென்னை மவுண்ட் ரோட் அந்த வேளையில் தனது சுறுசுறுப்பை டாக்ஸி பிடித்துக் கொடுக்கும் பொடியன்கள் மூலம் அளவெடுத்துக் கொண்டிருந்தது. அந்தப் பையன்களின் ஓட்டத்தையும் ஆட்டத்தையும் பரபரப்பையும் கண்டுவிட்டு, 'அடே சாமி! இந்த ஜனங்க அவசரத்துக்கு அந்தப் பையன் எங்கெங்கே அலையறான்? ஏனோ அந்தத் தலைவிதி? இந்த நேரத்தில் பள்ளி விட்டுப் பசங்க வீடு போகுதுங்க. உண்டானதைத் தின்னுட்டுப் பந்தோ, பம்பரமோ ஆடப் போகுதுங்க. இதோ, எத்தனை பிள்ளைகள் என்மீது ஊர்ந்து செல்கிறார்கள், பள்ளி விட்டு வீடு நோக்கி? அவனுக்கு என்னமோ அப்படி எழுத்து!' என்று கூட அது எண்ணியது. தலையெழுத்து அல்ல. வயிற்றெழுத்து அப்படி! ஓடியாடி அவன் ஆட்டோவையோ, டாக்ஸியையோ பிடித்துத் தருகிறான். அந்த ஓடியாடுதல்தான் அவனுக்கு ஆட்டம். ஆனால், என்ன ஆபத்தான விளையாட்டு?

இந்தப் பையன்களுக்கு மோப்பசக்தி மிகுதி. நடைபாதையில் நிற்கும் யாரிடமோ வந்து நிற்பான் அவன். ''டாக்ஸியா சார்? இதோ!'' என்று கால்களைப் பறக்க விட்டுக்கொண்டு கிளம்புவான். என்ன ஆச்சரியம்! அவன் யாரைக் கேட்டானோ, உள்ளபடியே அவருக்கு டாக்ஸி தேவைதான். இந்தப் பையன்களுக்காக நாமெல்லாம் வாசிக்க இயலாத லிபியில் தங்கள் டாக்ஸித் தேவையை அவர்கள் நெற்றியில் எழுதி ஒட்டிக் கொண்டிருக்கிறார்களோ?




அவருக்கு டாக்ஸி பிடித்துக் கொண்டு அந்தக் கறுப்புப் பையன் ஓடி வருகிறான். அவர் வீசிவிட்ட பணத்தை எடுத்துக் கொண்டு வேறு ஒருவருக்கு டாக்ஸி பிடிக்க இதோ ஓடுகிறான்! என்ன வாகவமாக மோதிச் சாடி ஓடிவரும் வண்டி வாகனுதிகள் இடையில், ஊடே ஊடே புகுந்து ஓடுகிறான். நடை பாதையில் நின்று அவனையே வேடிக்கை பார்ப்பவர்களுக்குப் பீதி உண்டாகிறது. ஆனால், அவனுக்கு அது இருக்க வேண்டுமே? என்னமோ தன் கால்களிலேயே கண்களையும், மூளையையும் வைத்திருப்பவன் போலத்தான் ஓடுகிறான். ஏதோ, ஒரு விபத்து நேரவேண்டுமே? கடவுளுக்கு நன்றி!

மவுண்ட் ரோட்டில் மாலை நேரம் என்றால் கூட்டம் நெருக்கி வழியும். அலுவலகங்களிலிருந்தும் தொழிற்சாலைகளிலிருந்தும், மாட்



டினி 'காட்சி முடிவு பெற்ற' சினிமாக் கொட்டகைகளிலிருந்தும், மாலையை உல்லாசமாகக் கழிக்க வீடுகளிலிருந்தும் கிளம்பி ஏகும் கூட்டம் சென்னையை எங்கும் நெரிசல் பட வைத்தது. ஒவ்வொருவருக்கும் கொள்ளை அவசரம். இந்தச் சமயம் பார்த்துத்தான் அவர்களைக் கழுத்தறுக்கின்றன பஸ்கள். ஒன்றிலாவது இடம் கிடைக்க வேண்டுமே? 'க்யூ' என்

கிற வரிசையைப் பார்த்தாலே 'தீர்ந்தது! போனாற் போலத்தான்' என்று உள்ளம் சப்பிட்டு விடுகிறதே! டாக்ஸியோ ஆட்டோவோ பிடிக்கலாம் என்றால், அடடா! இந்த நேரத்தில் அது ஆட்களை மதிக்காது விரைகிறதிமிரை என்னென்பது? ஏதும் கிட்டாது. நிற்பவர் கால் மாற்றி நிற்க வேண்டியதுதான்; தவம் புரிய வேண்டியதுதான். அவரைத்தான் பையன் இனம் கண்டுகொண்டு அணுகுகிறான். ''டாக்ஸியா சார்? இதோ!'' என்று கேட்டுவிட்டு ஓடுகிறான். சாலையில் மாயமாக மறைந்து விடுகிறான். தேடித் துழாவிப் பிடிவாதமாக ஒன்றைப் பிடித்துக் கொண்டே வந்து விடுகிறான். தவம் கிடந்தவர் வரம் பெற்று விடுகிறார். உரிய காலத்தில் ரவி



லைப் பிடிப்போம் என்று மகிழ்வோடு கிளம்புகிறார். பையனுக்குக் காலோ, அரையோ கிடைக்கிறது. இப்போது அந்தக் கறுப்புப் பையன் ஒரு பெண்மணிக்காக ஓடுகிறான். அவசரமாக அவள் ஆஸ்பத்திரிக்குச் சென்றாக வேண்டும். இன்னும் அரை மணி கழிந்தால் வெளிக் கதவைச் சாத்திவிடுவார்கள். அவள் பரபரத்துக்கொண்டு நிற்கிறாள். அவளுக்காக அந்தச் சிறுவன் ஓடியிருக்கிறான். ஓட்ட வேகத்தில் இயல்பான பரட்டைத் தலை பின்னும் பரட்டையாக விரிகிறது. முகத்தில் வந்து மூடி விழுகிறது. ஓர் அசைப்பு அசைத்து அதை அதன் இடத்துக்கு அனுப்பி வைக்கிறான். இப்படிச் செய்து செய்து அவனுக்குப் பழக்கம். மூடி விழாதபோது கூட அவன் தலையை வெற்றுக்காவது அசைத்துக் கொள்வான். அவனுடைய நிக்கர் பழுப்பு வண்ணமாக இருந்தது. உண்மையில் அதன் நிறம் அதை வல்ல. வேறு எந்த நிறமோ அது. அழுக்கால் அப்படி ஆகிவிட்டது. காது இடுக்கில் ஒரு பீடித் துண்டு சவாரி செய்தது. அவனுக்குக் கண்கள் இருந்தனவே — அவை மிகக் கூர்மையானவை. காலி டாக்ஸியைக் கண்டால் அது விரைந்து கொத்திக் கொண்டுவிடும். மொத்தத்தில் பார்ப்பவர்களுக்குப் பையன் பரவசம் தருகிறான். நமக்கு அவன் மீது மதிப்புக்கூட விழுகிறது. பாராட்ட மனம் ஓடுகிறது. இந்தச் சின்ன வயசில் தன் காலிலேயே அவன் நிற்கிறானே? அள்ளாமல் கொள்ளாமல், பொய் புரட்டு இல்லாமல், பிறருக்குப் பரோபகாரமாய் உத்தமப் பிழைப்புத்தானே பிழைக்கிறான் அவன்? எனவேதான் நாம் அவனை மெச்சிக் கொள்கிறோம்.

''நீ கெட்டிக்காரன்டா! இந்தா!'' என்று சந்தோஷத்தோடு கால் ரூபாயைப் பையனிடம் நீட்டிவிட்டுப் பெண்மணி டாக்ஸியில் ஏறுகிறாள். ஆஸ்பத்திரிக்கு விரைகிறாள். அந்தப் பையன் சமயத்தில் செய்த உதவியைப் பெரிதாக மதித்து அவனை வழி நெடுக வாழ்த்திக் கொண்டே செல்கிறாள் அந்தப் பெண்மணி.

அதோ, இளம் தம்பதிகள். ஜோடிக் கிளிகள்!

''இந்தாருங்கள், நான் சொன்னேனே, கேட்டீர்களா? மவுண்ட் ரோட்டில் இந்த நெருக்கத்தில் நமக்குப் பஸ்ஸோ, டாக்ஸியோ கிடைக்காது. நாம் இன்று மாம்பலத்துக்குச் சினிமா பார்க்கப் போனாற்போலத்தான். பேசாமல்


வயிற்று நோயா?
அவைகளைப்பற்றி நான் கேள்விப்பட்டதே இல்லை
என் அன்னை எனக்கு எப்பொழுதும்
உட்வர்ட்ஸ்
கிரைப் வாட்டரை
கொடுக்கிறாள்
GRIPE WATER
இது ஐம்பது வருடங்களாக புத்தி சாலிகளான தாய்மார்களால் உபயோகிக்கப்பட்டு வருகிறது.
Alvars-OP-47-TAM
அங்கீகரிக்கப்பட்ட ஏஜெண்டுகள்: கோமல் மானுபாக்சரிங் கெமிஸ்ட்ஸ் (பிரைவேட்) லிமிடெட், பம்பாய். எம். ஜி. ஷஹானி & கோ. (கல்கத்தா) பிரைவேட் லிமிடெட், கல்கத்தா. டி. கே. கிருஷ்ணமாச்சாரி & கோ. மதராஸ், எம். ஜி. ஷஹானி & கோ. (டில்லி) பிரைவேட், லிட்., டில்லி.

வீட்டுக்குத் திரும்பிப் போய்விடலாம். இங்கே நாலு பேர் நம் தவிப்பைக் கண்டு சிரிக்கப் போகிறார்கள்...'' —எள்ளி நகையாடுகிறது பெண் கிளி.

''ஆமாம்! வீட்டுக்குப்போனால் நாம் சினிமா போய் விட்டு வந்த அழகைக் கண்டு அவர்கள் சிரிக்க மாட்டார்களா? இன்னிக்கு என்ன ஆனாலும் சரி. மாம்பலம் போய் சினிமா பார்த்து விட்டுத்தான் வீடு திரும்பப் போகி றேன்...!'' ஆண் கிளிக்கு ஒரே பிடிவாதம்.

''நடக்கவே நடக்காது. நாம் கால் கடுக்க நிற்பதுதான் மிச்சமாகும்'' என்று அலுத்துக் கொள்கிறாள் அவன் அருமை மனைவி.

அதே சமயத்தில் அந்தப் பக்கம் வந்த பரட்டைத் தலைப் பையன், ''கவலைப்படாதிங்க, ஸார்! உங்களுக்கு டாக்ஸி பிடிச்சுக் கொடுக்காட்டா ஒரு ஆட்டோவாவது பிடிச்சுத் தரேன் ஸார்!'' என்று கூறி ஓடுகிறான். அவன் சொன்னபடியே காரியத்தையும் நிறைவேற்றித் தருகிறான்.

அவன் பிடித்துக் கொடுத்த ஆட்டோவில் சினிமாப் பார்க்க அவர்கள் மாம்பலத்தை நோக்கி ஓடுகிறார்கள். நிரம்ப மகிழ்ச்சி அவர்களுக்கு.

அதோ மவுண்ட் ரோட் தபால் ஆபீஸ் எதிரில் ஒரு சில்க் ஜிப்பாக்காரர்! அவர் மனைவி பட்டுப் புடவைக்காரி. இருவர் முகங்களிலும் பொலிவு இல்லை; வதங்கி, வாடிக் கிடக்கின்றன. மயிலாப்பூரில் அவர்கள் மகள் சாகப் பிழைக்கக் கிடக்கிறாள். ஒரு டாக்ஸி கிடைக்கவில்லையே அவசரத்துக்கு? பரட்டைத் தலைப் பையனும் ஆனமட்டும் தேடிவிட்டான். அவர்கள் துரதிர்ஷ்டம்: ஒன்று கிடைக்க வேண்டுமே! ''ஐந்து ரூபாய் தருகிறேன். சீக்கிரமாகப் பாரு ஒண்ணு'' என்றார் சில்க் சட்டைக்காரர்.

ஐந்து ரூபாய்!

பையன் தலைதெறிக்க ஓடுகிறான். ஐந்து ரூபாய் அவனை ஓட வைக்கிறது. அதோ ஒரு டாக்ஸி! ''டாக்ஸி.... டாக்ஸி'' என்று விளித்தபடியே சாலையைக் குறுக்கில் கடந்து பையன் பறக்கிறான். டாக்ஸி கிடைக்கவில்லை. பறந்துவிட்டது! பையன்? ச்சே! என்ன அநியாயம் .... மகா கோரம்!

இதையெல்லாம் சில்க் ஜிப்பாக்காரர் அறியார். அவர்பாட்டுக்கு எதிர்பாராத விதமாகக் கிடைத்த நண்பர் ஒருவர் காரில் ஏறி மகளைப் பார்க்கக் கிளம்பிவிட்டார்.

*　　　*　　　*

சில்க் ஜிப்பாக்காரர் அருமை மகளுக்கு மண்ணை வாரிப் போட்டுவிட்டு நிமிர்ந்தார். கண்ணீர் ஆறாகப் பெருகிற்று. பக்கத்தில் கிடந்தவர் அவரைத் தாங்கி நடத்திச் சென்றார். இடுகாடு பின் நின்றது.


வழியில் குடிசைகள் இருந்த இடத்தில் ஏக பிலாக்கணச் சத்தம் கேட்கிறது. ஒரு குடிசைக்கு முன்பு பரட்டைத் தலையனைப் படுக்க வைத்திருக்கிறார்கள். அவ்வுடலை அடையாளம் கண்டுகொள்ளுகிறார் சில்க் ஜிப்பாக்காரர்.


''இவன் நேத்து எனக்குச் சவாரி பிடிக்கப் போனான். இன்னிக்கு அவனுக்கே பிடிச்சுக் கொண்டான் போலிருக்கு'' என்றார் புலம்பல் குரலில். இன்றைக்கல்ல — நேற்றே அவன் சவாரி பிடித்துவிட்டான். அவருக்கென்ன தெரியும் அது? ஆனாலும் என்னவோ மனம் அடித்துக்கொண்டது; துடித்தது. ஓர் ஐந்து ரூபாயை நீட்டி அங்கிருந்தவரிடம் கொடுத்து, ''மாலை வாங்கிப் போடுங்க'' என்று கூறி விட்டு நடந்தார்.

வேண்டியதுதானே பரோபகாரப் பிள்ளைக்கு?

தலைநகரில் தியாக ப்ரம்ம விழா

சுந்தரத் தெலுங்கினில் பாட்டிசைத்துப் பக்திச் செல்வத்தை வளர்த்த மகான் தியாக ப்ரம்மம். அந்த மகானின் நினைவாகத் தில்லி விஞ்ஞான பவனத்தில் இதுவரை என்றும் கண்டறியாத முறையில் வெகு விமரிசையாக ஒரு பெருவிழாக் கொண்டாடினர் தேசிய கலாசார ஸ்தாபனத்தார். காருகுறிச்சி அருணாசலத்தின் நாதஸ்வரம் முழங்கப் பாரதப் பிரதமர் நேருஜி தியாகப் பிரும்மத்துக்குப் புஷ்பாஞ்சலி செய்தார். குமாரி கலையரசி நடன விருந்தளித்துச் சபையோரை மகிழ்வித்தார். இவ்விழா சிறப்புடன் நடைபெற ஜனாதிபதி, உபஜனாதிபதி, ராஜாஜி முதலியோரிடமிருந்து வாழ்த்துச் செய்திகள் வந்திருந்தன. இவ்விழாவை யொட்டித் தேசிய கலாசார ஸ்தாபனத்தார் தியாகராஜ ஸ்வாமிகளின் படங்களும், சரித்திர வரலாறும் அடங்கிய சிறு புத்தகமொன்றையும் வெளியிட்டிருக்கிறார்கள்.





திருமூலர் தவமொழி

ராஜாஜி — சோமு

7

சைவ நாயன்மார்கள் அறுபத்து மூவரில் ஒருவர் திருமூலர். சைவத் திருமுறைகள் பன்னிரண்டில் ஒன்று திருமந்திரம்.

வேதாகம சாரத்தைத் தமிழில் எடுத்தோத வந்தவர் திருமூலர் என்று பெரியோர்கள் முனிவரைப் பக்தி பரவசத்தோடு வணங்கித் துதித்தனர். நம்பி ஆரூரர் தமது திருத்தொண்டத் தொகையில்,

"நம்பிரான் திருமூலன்
அடியார்க்கும் அடியேன்"

என்று முனிவரை வணங்குகிறார்.

'பிரான்' என்று சொல்லிச் சைவ உலகம் துதி செய்கிற திருமூலதேவர் அணிமாதி சித்தி பெற்றவர். அவர் சைவ ஆசாரியர்கள் அனைவர்க்கும் ஆசாரியராக மதித்துப் போற்றப் படுகிறார்.

நம்பியாண்டார் நம்பிகள் திருமூலரைச் சிந்தித்து மெய்யும் உள்ளமும் உருகிப் போய்,

"......என் உச்சி
அடிமன்ன வைத்த பிரான்
மூலன் ஆகின்ற அங்கணனே!"

என்று திருமூலருடைய பாதத்தைத் தமது சிரத்திலே தரித்துக் கொண்டு பாடுகிறார்.

இப்படி யெல்லாம் சைவ சமயத் தலைவர்கள் அனைவரும் தலை வணங்கித் துதிக்கிற முனிவர், தம்முடைய திருமந்திர நூலை அவையடக்கத்தோடு தொடங்குகிறார்.

ஆரறி வார்எங்கள்
அண்ணல் பெருமையை;
ஆரறிவார் இந்த
அகலமும் நீளமும்!

எம்பெருமானுடைய பெருமையை யார்தாம் சரியாக அறிவார்கள்! இந்தப் பெருமையின் அகலத்தையும் நீளத்தையும் யாரே அளந்தறிந் தார்கள்? யாரால் அளந்து அறிய முடியும்!

திருமாலும் பிரமனும் அடிமுடி தேடிக் காணாது நின்ற பெருஞ்சுடர் என்று சைவ புராணங்கள் கூறும். கண்காணிப்பு, படைப்பு இரண்டுக்கும் அப்பாற்பட்டு நிற்கிறது பரம்பொருள். மனம் வாக்கு இரண்டினாலும் அளவிடமுடியாத பெருமை வாய்ந்த சுடர் அது!

பேரறி யாத
பெருஞ்சுடர் ஒன்று—

நாமம் கண்டு சொல்ல முடியாத பெரிய சுடர் அது!

பேரறி யாத
பெருஞ்சுடர் ஒன்று;அதின்
வேரறி யாமை
விளம்புகின் றேனே!

(அதின் வேரறியாமை விளம்புகின்றேனே—அதனுடைய வேரை அறியாமல் விளம்புகின்றேனே.)

உலகில் யாருமே அறிய முடியாத சுடர் அது. அதன் வேர் எங்கிருக்கிறது என்பதை நான் அறியேன்! அதை அறியவில்லை என்ற மெய்யறிவை இப்பொழுது எடுத்துச் சொல்லுகிறேன். அறிவுக்கு அப்பாற்பட்டது என்று உணர்ந்திருக்கிறேனே. அந்த உணர்வையே இப்பொழுது பேசுகிறேன்—என்கிறார் திருமூலர்

யாருமே அறியாத பெருமையும், அகல நீளமும் கொண்ட அண்ணலாகிய பெருஞ்சுடரின் ஆதிமூலத்தை தான் அறிந்து விட்டேன் என்று சொல்ல முடியுமா? இல்லை. அந்த அறியவொண்ணா நிலையைத்தான் விளக்கிச் சொல்லுகிறேன் என்று பணிவும் பக்தியும் நிரம்பிய நிலையிலே பாடுகிறார்.

தன்னால் அறிய முடியாத தன்மையுடையது என்று கூறி இறைவனின் எல்லையற்ற தன்மையையும், உயர்வையும் உணர்த்துகிறார்.


'அறிவுக்கு அப்பாற் பட்டவன் இறைவன்' என்று அனுபவமூலமாக அறிகிற அறிவுதான் பேரறிவு ஆகும். அறிவதற்கு முயன்று முயன்று, அறியாமை என்ற உணர்வுக்கு வந்து சேர்கிற யோக முயற்சியே, ஞானத்தில் எல்லாம் சிறந்த தவ ஞானம்! இந்தப் பேருண்மையை வெளிப்படையாகச் சொல்லாமல் அவையடக்கமாகச் சொல்லி உணர்த்துகிறார்.

"'அறிதல்' என்ற பிரக்ஞை மாறி, இறைவனுடைய பேரின்பத்திலே ஐந்து புலன்களும் ஒன்றி நின்று, எல்லாம் மறந்து நிற்கிற 'அறியாமை' நிலை என்பது, கிடைத்தற்கரிய ஆனந்தம்! அந்த ஆனந்த நிலையே தவங்களுக்கெல்லாம் இலட்சியம். ஆசாரியர்கள் ஓடர்களுக்கு உபதேசம் செய்வதெல்லாம் இந்த ஆனந்தத்தை அனுபவிக்க 'வேண்டும்' என்பதற்காகவே!

இறைவனுடைய ஆனந்தத்தில் தோயத் தோய, அந்த ஆனந்தம் எல்லையற்றுப் பரந்துசெல்வதை உணர முடியும். நீண்ட காலம் தவமிருந்து அந்தப் பேரானந்தத்திலே தோய்ந்து தோய்ந்து அழுந்தி, அதன் எல்லையற்ற தன்மையை உள்ளவாறு உணர்ந்து, அந்த உணர்வு நிலையிலே பேசுகிறார் திருமூலர், 'வேரறியாமை விளம்புகிறேன்' என்று

ஆரறி வாரெங்கள்
அண்ணல் பெருமையை :
ஆரறிவார் இந்த
அகலமும் நீளமும் !
பேரறி யாத
பெருஞ்சுடர் ஒன்றதின்
வேரறி யாமை
விளம்புகின் றேனே !

WEDDING



Sow. JAGADA

(Daughter of Sri P. M. N. Swamy, Secretary Indian Casablancas High Draft Co., Ltd., Bombay)

with

Chi. M. S. RAJAPPA, M.Sc.

on Sunday the 7th May 1961
at "Saraswathi Gardens"
Lloyds Road, Madras

பம்பாயில் ஸ்ரீ ரமண பக்தரும், தி இந்தியன் கசபிளாங்காஸ் கம்பெனியின் காரியதரிசியுமான ஸ்ரீ பி.எம்.என். சுவாமியின் குமாரத்தி செள. ஜகதாவுக்கும் சென்னை கஸ்டம்ஸில் வேலைபார்க்கும் ஸ்ரீ எம்.எஸ். ராஜப்பா, எம்.எஸ்ஸி. அவர்களுக்கும் சென்னை, லாயிட்ஸ் ரோடில் உள்ள "நல்வாழ்வு" என்ற கிருஹத்தில் மேமாதம் 7உ ஞாயிற்றுக்கிழமையன்று திருமணம் வெகு விமரிசையாக நடந்தேறியது. மாலையில் நடைபெற்ற வரவேற்பில் பல பிரமுகர்கள் கலந்துகொண்டனர். ஸ்ரீமதி ருக்மணி ராமசந்திரன் இன்னிசைக் கச்சேரியும் நடந்தேறியது.


வாயில்களும் வேஷ்டிகளும்
காற்றைப்போன்று
மென்மையானவை...
மபத்லால்
க்ரூப்
2 X 2
முழு வாயில்களும்
வேஷ்டிகளும்
ஷர்ராக், அஹமதாபாத், • நியூ ஷர்ராக், நாதியாத் • ஸ்டாண்டர்ட,
பம்பாய் • ஸ்டாண்டர்ட், டிவாஸ் • நியூ சைனு, பம்பாய் •
ஸஸ்ஸூன், பம்பாய் • நியூ யூனியன், பம்பாய் •
சூரத் காட்டன், சூரத் • மபத்லால் பைன், நவ்ஸாரி •
கல்பாய் ஜூட், கல்கத்தா • இந்தியன் டைஸ்டப், பம்பாய்.

மாமியாரும் ஒரு வீட்டு மருமகளே!



தலைப்பு நீளம்; படமும் நீளம். கதையும் பழசு. கருத்தும் பழசு. ஆதி காலத்து ''சாந்த சக்குபாய்'' படத்திலிருந்து கணக்கெடுத்தால் அந்தப் பழங் கதைப் பட்டியலும் நீளமாகத்தான் போகும்.

அப்பாவி அண்ணாசாமியின் தாயாருக்கும் மனைவிக்கும் ஓயாத ஒழியாத சண்டை. அண்ணாசாமி மகன் ரகுவினால் இந்தச் சண்டை முடிகிறது. ரகு சுசீலாவைக் காதலிக்கிறான். கல்யாணம் நடக்கிறது. குடும்ப ஒற்றுமைக்காகத் தந்தையும் மகனும் பெரிய திட்டம் வகுக்கின்றனர். தந்தை சாமியார் வேஷம் போடுகிறார். மகன் ரகு குடிகாரன் வேஷம் போடுகிறான்.

படம் 'சீரியஸாக'வும் இல்லை; தமாஷாகவும் இல்லை. பழங்கால நாடக மேடையிலிருந்து நம் தமிழ் சினிமாப் படம் சிறிதும் முன்னேறவில்லை என்பதற்கு இப்படம் தக்க சான்று. காரை 'ஸ்டார்ட்' பண்ணி விட்டு அது நகர முடியாதபடி 'பிரேக்'கையும் போட்டு விட்டால் எப்படியிருக்குமோ அப்படியிருக்கிறது!

எஸ். எஸ். ராஜேந்திரன் நிறைய நடிக்கிறார். ஆனால் புதிதாக ஒன்றுமே இல்லையே!

எம். என். ராஜமும் ராஜேந்திரனும் மிகவும் நெருங்கி நடிக்கின்றனர்! தாராளமாக நடித்திருக்கிறார்கள். கல்லூரி மாணவ, மாணவியாக வரும்போதே இருவருக்கு இடையேயும் மிகவும் நெருக்கம் ஏற்பட்டு விடுகிறது.

வி.கே. ராமசாமி ராஜேந்திரனின் தகப்பனாராக வந்து மாமியார்-மருமகள் சண்டையில் அகப்பட்டுக் கொண்டு விழிக்கிறார். 'அட முருகா, அட முருகா' என்று ஓயாமல் கதறுகிறார். போகிறவர், வருகிறவர்களிடமெல்லாம் விருத்தம் படித்துக் காட்டுகிறார். பாவம்! அவர் 'கொடுத்து வைத்தது அவ்வளவுதான்.'

மருமகளை வசப்படுத்த-மாமியார் பிசாசு பிடித்தவள் மாதிரி நடிப்பதும், எல்லோரும் அதைக் கண்டு ஆர்ப்பாட்டம் செய்வதும் அசட்டுத்தனத்திலும் அசட்டுத்தனம்! 'மல்லியம் மங்கள'த்தில் அட்டகாசம் செய்யும் மாமியார்தான் இதிலும் அட்டகாசம் செய்கிறாள்.

பாலாஜிக்கு வயலின் வாத்தியத்தினிடம் ஏன் அவ்வளவு கோபம்? அவர் ஏற்ற உதவாக்கரை சந்திரன் பாகம் உதவாக்கரையாகவே போய்விட்டது.

சாயிராமும், எம். சரோஜாவும் எல்லோரையும் சிரிக்க வைக்க முயல்கிறார்கள். ஆனால் பலன் பூஜ்யம்தான். 'மாஸ் அப்பீல்' என்று சொல்லி ஏன்தான் இப்படி அப்பீலுக்கு மாசு கற்பிக்கிறார்களோ?

மொத்தத்தில் கௌரவ நடிகர் சுப்பையா மட்டும்தான் கௌரவமாக நடித்திருக்கிறார்.


மாமியிடம் கொடுமைப்படும் மருமகளாக வரும் தேவிகா தன் குறைகளைத் தெய்வத்தினிடம் முறையிட்டுப் பாடும்போது நான்கு விரல்களால் தம்பூராவை மீட்டியும் சுருதி சப்தம் துளிக்கூட வரக் காணுமே! ஏன்?

கதைப் போக்கு, பாத்திரங்களின் உன்னத சிருஷ்டி, கதையின் மூலம் உருவாகும் உயர்ந்த கருத்து, நெஞ்சை நெகிழ வைக்கும் உணர்ச்சிமயமான கட்டங்கள், அடுத்து நிகழப்போவது என்ன என்ற ஆவலைத் தூண்டி விடும் அடுக்கடுக்கான சம்பவங்கள், மனித உள்ளங்களின் ஆசாபாசங்கள் ஆகிய சினிமாவுக்குத் தேவையான ஓர் அம்சங்கூட இல்லாத இந்த அசட்டுக் கதையை அனுபமா பிலிம்ஸார் ஏன் படமாக்கினார்கள்?

மாமி, மருமகளைக் கொடுமைப்படுத்தும் காலம் போய்விட்டது. ஆனால், நம் படாதிபதிகள் அதை வைத்துக் கொண்டு நம்மைக் கொடுமைப் படுத்துகிறார்களே!



விஞ்ஞானிகள் இடைவிடாமல் ஆராய்ச்சி செய்து கிருமி நாசினிகளைக் கண்டு பிடித்த வண்ணமாக இருக்கிறார்கள்; அவற்றையெல்லாம் பொருட்படுத்தாமல் பூச்சிகளும் ஏராளமாக உற்பத்தியாகின்றன; அதுபோல் கடுமையான கண்டனங்களையும் பொருட்படுத்தாமல் நம் நாட்டில் பல திரைப் படங்கள் கிளர்ந்து எழுகின்றன. அதில் இதுவும் ஒன்று. —காந்தன்





புல்லாணி எம்பெருமான்

தொ.மு. பாஸ்கரத் தொண்டைமான்

கொல்லணை வேல் வரிநெடுங்கண்
கௌசலைதன் குலமதலாய் !
குனிவில் ஏந்தும்

மல்லணைந்த வரைத் தோளா !
வல்வினையேன் மனமுருக்கும்
வகையே கற்றாய்

மெல்லணைமேல் முன்துயின்றாய் !
இன்று இனிப்போய்
வியன் கானமரத்தின்நீழல்

கல்லணைமேல் கண்துயிலக்
கற்றனையோ காகுத்தா !
கரிய கோவே !

என்று குலசேகரர் பாடுகிறார். தனயனை ராமன் காட்டுக்குப் புறப்பட்டான் என்றவுடனே, தந்தை தசரதன் புலம்புவதாகப் பாட்டு. அரண்மனையில் பிறந்து, அரண்மனையில் வளர்ந்து ஹம்ஸதூளிகா மஞ்சத்தில் உறங்கிய பிள்ளை இனி காட்டிலே கல்லையே அணையாகக் கொண்டல்லவா உறங்கப் போகிறான் என்ற உடனே உள்ளத்தில் எழும் தாபம் வெளிப்படுகிறது. ஆனால் இந்தப் பிள்ளை, கல்லை மாத்திரம்தானா அணையாகக் கொள்கிறான்? புல்லையுமேதான் அணையாகக் கொள்கிறான். கதை நமக்குத் தெரியும். சீதையை எடுத்துச் சென்று இலங்கையில் அசோகவனத்தில் சிறை வைத்து விடுகிறான்] இராவணன். அவள் இருக்கும் இடத்தை அறிந்து வந்து சொல்கிறான் அநுமன். உடனே ராமன் சுக்ரீவனது வானரப் படையின் துணையுடன் இலங்கை மீது படை எடுக்கிறான். இடையிலே இருக்கிறது கடல். கடல் கடந்துதான் இலங்கை செல்லவேணும். விபீஷணன் ஆலோசனைப்படி வருணனை வேண்டினால் அவன் வழியமைத்துக் கொடுக்கலாமே என நினைக்கிறான் ராமன். அதன்படியே வருணனை வழிபட முனைகிறான். அதற்காகத் தருப்பையையே சயனமாக்கி அதிலிருந்து வருணனை வேண்டுகிறான். இதைக் கம்பன் சொல்கிறான்.

தருண மங்கையை மீட்பது
ஓர் நெறிதருக என்னும்


பொருள் நயந்து நல்
நூல்நெறி அடுக்கிய புல்லில்

கருணை அம் கடல் கிடந்தது
கருங்கடல் நோக்கி


வருண மந்திரம் எண்ணினன்
விதிமுறை வணங்கி

என்று இப்படிப் புல்லணைமேல் கிடந்து வருணனை வேண்டிய தலம்தான் திருப்புல்லணை. அதனையே திருப்புல்லாணி என்கிறார்கள். அந்தத் திருப்புல்லாணிக்கே செல்கிறோம் நாம் இன்று.

திருப்புல்லாணி ராமநாதபுரத்துக்குத் தெற்கே கிழக்கரை செல்லும் பாதையில், ராமநாதபுரத்திலிருந்து ஆறு ஏழு மைல் தொலைவில் இருக்கிறது. திருச்சி—தனுஷ்கோடி ரயில் பாதையில் ராமநாதபுரம் ஸ்டேஷனில் இறங்கி, வண்டி வைத்துக் கொண்டு போகலாம். சொந்தக் கார் இருந்தால் 'ஜாம் ஜாம்' என்று காரிலேயே போய் இறங்கலாம். ஊர் மிகச் சிறிய ஊர். கோயில் பெரியதும் அல்ல, சிறியதும் அல்ல. 'கள்ளவிழும் மலர்க் காவியும், தூமடற்கைதையும் புன்னையும் அன்னற் பழனங்களும் சூழ்ந்த புல்லாணி' என்று அன்று மங்கை மன்னன் பாடியிருக்கிறான். இன்று அன்னற் பழனங்களையோ மலர்க் காவிகளையோ பார்த்தல் அரிது. கடற்கரையை ஒட்டிய கிராமம் ஆனதால் மணல் குன்றுகளுக்குக் குறைவில்லை. என்றாலும் கோயில் வாயில் சென்று சேரும் வரை நல்ல ரோடு இருக்கிறது. இங்குதான் புல்லார், கண்ணு



கல்யாண ஜகந்நாதன் - கல்யாணவல்லி



ராமர், லக்ஷ்மணர், சீதை

டிக்கிறவர்களை இகபர சுகங்கள் எல்லாம் பெறுவர் என்பது நம்பிக்கை.

இத் தலத்தில் கல்யாண ஜகந்நாதன் என்ற பெயரோடு பெருமான் கோயில் கொண்டிருக்கிறார். தாயார் திருநாமம் கல்யாணவல்லி. கோயில் விமானம் கல்யாண விமானம். கோயில் பிராகாரத்தில் ராமன் தர்ப்ப சயனனாகச் சேவை சாதிக்கிறான். பட்டாபிராமன் சந்நிதி வேறு இருக்கிறது. இங்குள்ள ஹேம தீர்த்தம், சக்கர தீர்த்தம் பிரசித்தமானவை. சகல பாபங்களையும் போக்கவல்லவை. இக் கோயிலில் சிலா வடிவங்கள் அப்படி ஒன்றும் பிரமாதமாக இல்லை. என்றாலும், கோயிலிலே செப்புப் படிமங்கள் பல பூசையில் இல்லாமல் இருக்கின்றன. ராமர், லக்ஷ்மணர், பரதர், சத்துருக்கனர் படிமங்கள் எல்லாம் இருக்கின்றன. எல்லாம் கவனிப்பார் அற்றுக் கிடக்கின்றன.;

வர், காலவர் முதலிய முனிபுங்கவர்கள் தவம் புரிந்து முத்தி பெற்றிருக்கிறார்கள். முனிவராம் புல்லர் விரும்பியபடியே ஜனார்த்தனன் தேவியர் மூவரோடும் சதுர்புஜத்தோடும், பஞ்சாயுதங்களோடும், ஸ்ரீவத்சம், கௌஸ்துபம் முதலிய மாலைகள் விளங்க, பீதாம்பரமும் அணிந்து திவ்யாபரணங்களும் தரித்து எழுந்தருளி யிருக்கின்றார். இன்னும் இத் தலத்திலே தேவலர் என்னும் முனிவர் தவம் செய்யும்போது சப்த கன்னியரும் வந்து அங்குள்ள திருக்குளத்தில் ஜலக்கிரீடை செய்திருக்கிறார்கள். அவர்கள் தம் தவத்தைக் கலைத்ததற்காக அவர்களை யக்ஷர்களாகப் போகும்படி சபித்திருக்கிறார். அவர்கள் சாப விமோசனம் வேண்டியபொழுது அவர்களைப் புல்லாரண்யத்தில் புல்லர் வழிபட்ட பெருமானை வழிபட்டுச் சாப விமோசனம் பெற அருளி யிருக்கிறார்.

இலங்கை செல்லும் இராமர் இங்கு தர்ப்ப சயனத்தில் கிடந்து வருணனை வேண்டியிருக்கிறார். பின்னர் இங்குள்ள எம்பெருமானையும் வணங்கியிருக்கிறார். அவரும் ராமனுக்கு வில் ஒன்றைக் கொடுத்திருக்கிறார். அது காரணமாக, புல்லாணி எம்பெருமானுக்குத் திவ்ய சரபன், தெய்வச் சிலைமன் என்ற பெயர் நிலைத்திருக்கிறது. பின்னர்தான் வருணன், ராமர் முன் வந்து கடலைச் சுவற அடிப்பதைவிட, சேது கட்டுதலே சிறந்தது என்று கூற அதன்படியே நளன் தலைமையில் சேது கட்டி முடிகிறது. இங்குதான் சேது கட்டத் தீர்மானம் ஆன காரணத்தால் இதனை **ஆதிசேது** என்றும் அழைக்கின்றனர். புல்லர் முதலான ரிஷிகள் ஜகந்நாதனைச் சரண் அடைந்து பரமபதம் பெற்றது இங்கேதான். இராவணன் தம்பி விபீஷணன் ராகவனைச் சரணம் புகுந்து இலங்கை அரசுக்கு உரியவனானதும் இங்கேதான். கடற் கடவுளும் தசரத புத்திரனைச் சரணடைய அவனுடைய கிருபைக்குப் பாத்திரனானதும் இங்கேதான். ஆதலால் இத் தலத்தில் சரணாகதி தருமத்தை அனுஷ்

இங்குள்ள தல விருட்சம் அசுவத்த விருட்சம் என்னும் அரசமரம். அதன் நிழலில் நாகப்பிரதிஷ்டை செய்வோருக்கு மக்கட்பேறு உண்டாகும் என்று நம்பிக்கை. இத் தலத்தில் இவ்விருட்சம் அமைந்ததற்கு ஒரு புராணக் கதை வழங்கி வருகிறது.

ஆதியில் படைப்புத் தொழில் பரந்தாமனிடத்திலேயே இருந்திருக்கிறது. முதலில் பிரம்மாவையும் பின்னர் நவப்பிரஜாபதிகள், இந்திரன் முதலியோரையும் படைத்துப் பின்னரே பிரம்மாவைத் தொடர்ந்து சிருஷ்டி செய்யுமாறு பணித்திருக்கிறார். படைத்தல் தொழிலைச் செய்வதற்குத் தெற்கு நோக்கிப் பிரம்மா வந்தபோது, கோடி சூரியப் பிரகாசத்தோடு ஒரு ஜோதி தோன்றி மறைந்திருக்கிறது. அந்த ஜோதியின் ரகசியம் என்ன என்று கேட்டபோது, பரந்தாமன், 'அதுவே போத ஸ்வரூபமான போதி மரம். அந்த மரத்தடியிலேதான் ஜகந்நாதன் தங்குகிறான்' என்று அருளியிருக்கிறான். அது காரணமாகவே போதி என்னும் அரசமரம் ஜகந்நாதனுக்கு நிழல் தரும் தருவாய் அங்கு அமைந்திருக்கிறது. (போதி மரத்தடியில் ஞானம் பெற்ற புத்தரையும் விஷ்ணுவினது அவதாரம் என்று கொள்வது இதனால்தான் போலும்.)

இத் தலத்துக்குத் திருமங்கை மன்னன் வந்திருக்கிறார்; இருபது பாசுரங்கள் பாடி மங்களாசாஸனம் செய்திருக்கிறார். அவர் பாடிய பாடல்கள் பல நாயக நாயகி பாவத்தில் அழகொழுகும் வண்ணம் இருக்கின்றன.

வில்லால் இலங்கை
மலங்கச் சரந்துரந்த
வல்லாளன் பின்போன
நெஞ்சம் வரும்அளவும்!

எல்லாரும் என்தன்னை
ஏசிடினும் பேசிடினும்
புல்லாணி எம்பெருமான்
பொய் கேட்டிருந்தேனே.

என்ற பாசுரம் பிரபலமானதொன்றாயிற்றே. அனைவரும் கேட்டுக் கேட்டு ரசித்ததாயிற்றே.

இந்த ஆதி சேதுவின் காவலரே ராமநாதபுரம் ராஜாக்கள். சேதுக் கரையையும் உள்ளடக்கிய பிரதேசத்தின் மன்னர்களாக இருக்கிற காரணத்தால் அவர்களைச் சேதுபதி என்று அன்று அழைத்தார்கள். திருப்புல்லாணிக் கோயில் எப்போது கட்டப்பட்டது என்று தெரியவில்லை. பரராஜசேகர ராஜா காலத்தில்தான் கோயில் கட்டியதாக வரலாறு கூறுகிறது. இருபத்தேழு கிராமங்கள் இக் கோயில் பராமரிப்புக்காகச் சேது சமஸ்தானத்தாரால் விட்டுக் கொடுக்கப்பட்டிருக்கின்றன. அதற்குத் தாமிர சாஸனங்களும் ஓலைச் சாஸனங்களும் உண்டு. கி. பி. பதினேழாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் சேதுபதியாக இருந்த கிழவன் சேதுபதி என்னும் ரகுநாத சேதுபதி அவர்கள் பதினொரு கிராமங்களை இந்தக் கோயிலுக்குத் தானம் வழங்கி யிருக்கிறார். இவருக்குப் பின் வந்த விஜய நெடுநாத சேதுபதி, முத்துராமலிங்க சேதுபதி முதலியவர்களும் பல நிபந்தங்கள் ஏற்படுத்தி யிருக்கிறார்கள். கோயிலுக்குச் சொந்தமாக நிறைய உப்பளங்கள் உண்டு. மன்னார் குடாக் கடலில் நடைபெறும் முத்துக் குளிப்பிலும் இந்தக் கோயிலுக்கு ஒரு பங்கு உண்டு என்று தெரிகிறது. எல்லாம் சொல்லி ஒன்று சொல்ல மறந்து விட்டேனே. இந்தத் தலத்தில் இரவில் நைவேத்தியமாகும் திருக்கண்ணமுது (பால் பாயஸம்) மிக்க சுவையுடையது. பகலில் போகிறவர்களும் ஞாபகமாகக் கேட்டால் அர்ச்சகர் எடுத்து வைத்திருக்கும் திருக்கண்ணமுது கிடைக்கலாம். இரவில் போனால்தான் கட்டாயம் கிடைக்குமே.

இத்தலத்துக்கு வந்த நாம் ராமநாதபுரத்துக்கு வடகிழக்கே ஏழு மைல் தூரத்தில் உள்ள தேவிபட்டணம் வரையில் சென்று அங்குள்ள பட்டாபிராமனையும் வணங்கலாம். இங்குதான் ராமர் வருணனுக்கு அபயம் அளித்தார் என்று வரலாறு. இங்கு பிரதான தேவதை மஹிஷாசுரமர்த்தினி. அதனாலே தான் தேவிபட்டணம் எனப் பெயர் பெற்றிருக்கிறது. இந்தத் தேவிபட்டணத்தை அடுத்தே நவபாஷாணம் என்னும் சமுத்திர தீர்த்தம் வேறே இருக்கிறது. இங்குதான் ராமர் நவக்கிரஹ பூஜை செய்திருக்கிறார். ஒன்பது குத்துக்கல்கள் கடலில் இருக்கின்றன. அந்த இடத்தில் அலை அடிப்பதில்லை. இந்தத் தீர்த்தத்தில் நீராடிப் பக்கத்தில் உள்ள கோயிலில் மங்களநாதர் மங்களேசுவரியையும் வணங்கினால் எல்லா நல்ல பலன்களும் சித்திக்கும் என்று நம்பிக்கை. அவகாசம் உள்ளவர்களெல்லாம் தேவிபட்டணம், நவபாஷாணம் எல்லாம் சென்றே திரும்பலாம். நல்ல பலன்கள் கிடைக்குமென்றால் தயக்கமில்லாமல் செல்வதற்கு மக்கள் முன் வருவதில் வியப்பென்ன?

தி இந்தியன் ஓவர்ஸீஸ் பாங்க் லிமிடெட்

★

எல்லா மக்களின் தேவைகளையும் பூர்த்தி செய்ய

ஒரு ரெக்கரிங் டெபாஸிட் திட்டத்தை

ஆரம்பித்திருக்கிறார்கள்

★

குறைந்தபட்சம் ரூ. 5/—லிருந்து அதிகபட்சமாக, அதன் பெருக்குத் தொகை ரூ. 500/— வரையில் டெபாஸிட்டுகள் ஏற்றுக்கொள்ளப்படும்

பிரதி மாதம் டெபாஸிட் செய்யும் தொகையான

	ரூ. 5	ரூ. 10	ரூ. 50	ரூ. 100
	கீழ்க்கண்டபடி பெருகும்			
34 மாதங்களில்	ரூ. 180	ரூ. 360	ரூ. 1,800	ரூ. 3,600
46 மாதங்களில்	ரூ. 250	ரூ. 500	ரூ. 2,500	ரூ. 5,000
85 மாதங்களில்	ரூ. 500	ரூ. 1,000	ரூ. 5,000	ரூ. 10,000

முழு விவரங்களுக்கு பாங்கின் எந்தக் கிளைக் காரியாலயங்களுக்காவது தயவு செய்து எழுதவும் :

எம். ஸிடி. முத்தையா
சேர்மன்

ஸி. பி. துரைக்கண்ணு
ஜெனரல் மானேஜர்



26. ஆறுமுக ருத்திராக்ஷம்

'யார்க்' நகரத்தின் புகை வண்டி நிலையத்துக்கு வந்து இறங்கியபோது காலை ஒன்பது மணி. அந்த நிலையத்தின் தோற்றமும், பரப்பளவும், சுருசுருப்பும் நகரத்தின் முக்கியத்தை அறிவுறுத்தின.

புகை வண்டி நிலையத்திலிருந்து நேரே விடுதிக்கு வந்தேன். வந்ததும் முதலாவது வேலையாகக் குளிக்கும் அறையிலே சென்று ஏதாவது அறிவிப்பு இருக்கிறதா என்று பார்த்தேன்! 'லீட்ஸ்' நகரத்து விடுதியிலே ஏற்பட்ட அனுபவம் இன்னும் நினைவிலே பசுமையாக இருந்தது!

நல்லவேளை; பத்தரை மணிக்கு முன்பு குளிக்கக் கூடாது என்றோ, அல்லது வேறு விதமாகவோ எவ்வித அறிவிப்பும் அங்கே இல்லை. அதோடு குளிக்கும் அறையில் விசாலமான தொட்டியும், மற்ற வசதிகளும் தாராளமாக இருந்தன! ஒரு பெரிய தீர்த்தக் கட்டத்துக்கே போய்ச் சேர்ந்தது போல் ஒரு திருப்தி மனத்தில் ஏற்பட்டது!

பதினொரு மணிக்கு 'யார்க்' நகரத்தின் புகழ்பெற்ற நூல் நிலையத்துக்கு, தொலைபேசி மூலம் பேசினேன். அந்த நூல் நிலையத்தின் நிர்வாகி மிஸ்டர் டாம்லின்ஸன் என்ற அறிஞரை நான் சந்திக்க வேண்டும என்று என்னுடைய நிகழ்ச்சித் திட்டத்தில் ஏற்பாடு செய்திருந்தார்கள்.


''பிற்பகல் மூன்று மணிக்கு இங்கே வந்து விடுங்கள். இந்த நூல் நிலையத்தைச் சுற்றிக் காண்பித்துவிட்டு, உங்களை இந்த நகரத்தின் லார்ட் மேயரிடம் அழைத்துச் செல்வதாக இருக்கிறேன். இன்று மாலை அவருடைய வீட்டில் ஒரு விருந்து ஏற்பாடு செய்திருக்கிறேன். இந்த நகரத்தின் ஷெரீபும் வருகிறார். சில உள்ளூர் எழுத்தாளர்களும் வருகிறார்கள்!'' என்று தொலைபேசியிலே விடை கூறினார் மிஸ்டர் டாம்லின்ஸன்.

பதினொரு மணியிலிருந்து மூன்று மணிவரை என்ன செய்வது என்று யோசித்தேன். விடுதியின் அதிபரிடம் சென்று அந்த ஊரின் முக்கிய இடங்களைப் பற்றிக் கேட்டேன். அவர் யார்க் நகரத்தின் கோட்டையிலே உள்ள பெரிய ம்யூஸியத்தைப் பற்றிச் சொன்னார். அவர் வர்ணிக்க வர்ணிக்க அந்த ம்யூஸியத்துக்குச் செல்லவேண்டும் என்ற ஆசை உண்டாயிற்று.

விடுதியிலிருந்து 'காஸில் ம்யூஸியம்' என்ற கோட்டைக் காட்சிச் சாலைக்குப் புறப்பட்டேன்.

'யார்க் நகரத்தின் சரித்திரம் இங்கிலாந்தின் சரித்திரமே' என்று ஒரு வசனம் சொல்லுகிறார்கள். இங்கிலாந்தின் வரலாற்றோடு அத்தனை தூரம் இணைந்து வளர்ந்த நகரம் யார்க். பல நூற்றாண்டின் சரித்திரம் யார்க் மண்ணிலே புதைந்து கிடக்கிறது. அங்குள்ள சரித்திரப் புகழ்பெற்ற கட்டடங்கள், பழமையான வீதிகள், பெருங் கோவில்கள், இவற்றிலே யெல்லாம் ஆங்கில நாட்டின் வரலாறு அப்படி அப்படியே நினைவுத் திரைகளோடு தொங்கிக் கொண்டிருக்கிறது.

ரோமானியர்கள் இந்த நகரத்துக்கு வந்தது கி. பி. முதலாவது நூற்றாண்டில். வந்து இந்த இடத்திலே மிகப் பெரிய கோட்டையைக் கட்டினார்கள். சுமார் மூந்நூற்றைம்பது ஆண்டுகள் ஆண்டார்கள். பிறகு ஸாக்ஸன்ஸ் இங்கே குடியேறினார்கள். மிகப் பெரிய கோயில் கட்டினார்கள். பெரிய பெரிய கல்விச்சாலைகள் நிர்மாணித்தார்கள். கிறிஸ்தவ மதத்தின் முக்கியமான இருத்தலமாக விளங்கியது இந்த நகரம். பிறகு ஒன்பதாம் நூற்றாண்டில் 'டேன்ஸ்' வந்தார்கள்.



பழைய கோட்டையின் மதில்

யார்க் நகரம் பெரிய வியாபாரத் தலமாக மாறியது. மக்கள் தொகையும் அதிகரித்தது! இன்றைக்கும் டேனிஷ் மக்கள் சூட்டிய பெயர்கள் யார்க் நகரத்தின் வீதிகளை விடாப் பிடியாகப் பிடித்துக் கொண்டுள்ளன! 'கேட்' என்றே ஒவ்வொரு தெருவுக்கும் பெயர். டேனிஷ் மொழியில் தெருக்களை 'கேட்' என்றே சொல்லுகிறார்கள்.

இந்த டேனிஷ் ஆட்சிக்குப் பிறகு இன்னும் பல மாறுதல்கள் ஏற்பட்டன! பதினோராம் நூற்றாண்டில் ஒரு பெரிய நெருப்புக்கு இரை யாகிற்றும் இந்த நகரம்! பிறகு 'நார்மன்ஸ்' புதிய நகரத்தை நிர்மாணித்தார்கள். இதன் பிறகு மீண்டும் பல மாறுதல்கள்! இத்தனை சரித்திரத்தையும் தன்னுள் அடக்கிக் கொண்டு இன்று ஒரு நவீன நகரமாகக் காட்சி தருகிறது யார்க்! இங்குள்ள கோட்டைக் காட்சிச் சாலையில் இந்த வரலாறுகளுக்கான சான்றுகள் பலவற்றையும் பார்க்கிறோம்.

இந்தக் காட்சிச்சாலை தோன்றிய விதமே ரசமானது! டாக்டர் ஜே. எல். கர்க் என்ப வர் ஒரு வரலாற்றுப் பித்தர்! அவர் தம் முடைய வீட்டில் யார்க் நகரத்தின் சரித்திரச் சான்றுகளையெல்லாம் மிகவும் அக்கறையோடு திரட்டிச் சேகரிக்க ஆரம்பித்தார்! நாளாக நாளாக இந்தப் பொருள்களின் எண்ணிக்கை ஆயிரக்கணக்காகப் பெருகி விட்டது! அவர் திரட்டி வைத்திருந்த பொருள்கள் ஒரு தனி மனிதரின் உடைமையாக இருப்பதைவிட ஒரு பொது இடத்தில் இருந்தால் எல்லா மக்களும் சென்று பார்ப்பதற்கு உதவியாக இருக்குமே என்று அவருடைய நண்பர்கள் கருதினார்கள். அதோடு இத்தனை பொருள் களையும் வைப்பதற்கு டாக்டர் கர்க் அவர் களின் வீட்டிலும் இடமில்லை! இதனால் டாக்டர் கர்க், நகராண்மைக் கழகத்தோடு ஓர் ஒப்பந்தம் செய்து கொண்டார்.

இந்த ஒப்பந்தத்தின் விளைவாக யார்க் நகரத்தின் கோட்டையிலே முற்காலத்தில் பெண் குற்றவாளிகளை அடைப்பதற்காக உபயோகித்த ஒரு சிறைக் கூடத்தைக் காட்சிச் சாலைக்கு வேண்டிய முறையிலே மாற்றி அமைத்தார்கள். இந்த இடத்திலேயே இப் பொழுது டாக்டர் கர்க்கும் அவருக்குப் பிறகு பல பொது மனிதர்களும் சேர்த்த காட்சிப் பொருள்களை நல்ல முறையிலே வரிசைப் படுத்தி வைத்திருக்கிறார்கள்!

அந்தக் காலத்தில் ஒரு விவசாயி எப்படி வாழ்ந்தான்? அவனுடைய குடிசை எப்படி இருந்தது? இதைக் காட்டுவதற்காக ஒரு சிறு குடிசையே செய்துவைத்து, விவசாயி வைத் திருந்த உடைமைகளை யெல்லாம் அங்கே காட்சியாக அடுக்கி யிருக்கிறார்கள்.

அந்தக் காலத்துப் போர்களிலே ஆங்கில வீரர்கள் எத்தகைய கவசம் அணிந்திருந் தார்கள், என்னென்ன படைக்கலங்கள் உப யோகித்தார்கள்? இவற்றை இப்பொழுது இந்தக் காட்சிச் சாலையிலே காண்கிறோம்!

பதினெட்டாம் நூற்றாண்டில் எத்தனை வித மான வண்ண ஓவிய விசிறிகள் இருந்தன? இளைஞர்கள் தங்கள் காதலியர்களுக்குக் கவி தைக் கடிதங்களினால் எப்படி இதயத்தை வழங்கினார்கள்? 'வாலென்டைன்ஸ்' என்று அழைக்கப்படும் இந்த அட்டைக் கடிதங்களின் சரித்திரம், 'வாலென்டைன் திருநாள்' என்ற பண்டிகையின் கேளிக்கைகள், இவற்றையெல் லாம் ஒரு தனிப் பகுதியாக வரலாற்றுக் குறிப்புக்களோடு வைத்திருக்கிறார்கள்.


பழைய ஆங்கில நாட்டுத் தெரு எப்படி இருந்தது? கடைகளெல்லாம் அந்தக் காலத் தில் எப்படித் தோற்றம் தந்தன? மக்கள் எங்கெங்கு சென்று என்னென்ன பொருள்கள் வாங்கினார்கள்? இதையெல்லாம் நாம் தெரிந்து கொள்வதற்காக இந்தக் காட்சிச் சாலைக் குள்ளே ஒரு பெரிய தெருவையே நிர்மாணித் திருக்கிறார்கள்! அதாவது அந்தக் காலத்தில் தெருவும் கடைகளும் எப்படி யிருந்தனவோ, அப்படியே ஒரு தெருவைக் கட்டி விட்டிருக் கிறார்கள். பாத்திரக் கடை, பொம்மைக் கடை, மருந்துக் கடை, ஆடை அணிகலன்கள், மூக்குப் பொடிக்கடை,—இப்படி வரிசையாக அந்தக் காலத்துப் பெயர்களோடு, அந்தக் காலத்தில் அங்கேயிருந்த வியாபாரிகளின் விலாசங்களோடு அப்படி அப்படியே கட்டி நிறுத்தி யிருக்கிறார்கள்! இந்த அதிசயமான கடைகளுக்கு மத்தியிலே ஒரு பழைய புத்தகக் கடை நிற்கிறது! இந்தக் கடையிலே இருந்த இரண்டு புத்தகத் தலைப்புக்கள் என்னைக் கவர்ந்தன! அவை என்ன தெரியுமா? 'வில்லி யம்வாக்கர் அன்ட் ஸன்' என்ற பிரசுரகர்த் தர்கள் வெளியிட்ட இரண்டு முக்கிய நூல்கள். அந்தக் காலத்தில் ஏராளமாக விற்பனையான புத்தகங்கள் அவை! ஒன்று "மனைவியைச் சொன்னபடி கேட்க வைப்பது எப்படி?" என்ற புத்தகம்; மற்றொன்று "கணவனை அடக்கி ஆள்வது எப்படி?" என்ற நூல்!



இன்று
வருகுதொரு சோப்பு, அதிலே...
அசல் வாதுமை எண்ணெய்...
அருமையான சந்தனச் சத்து...
MAHARANI
SANDAL SOAP
அடைந்திட்டோம்
அழகென்னும் குலச் செல்வம்...
மகாராணி
சந்தன சோப் : வெளிர் பொன்னிறம் மிளிரும் கனியென சிற்பம் கடைந்த சோப்...வாதுமை எண்ணெயும் சந்தனச் சத்தும் காதல் மணம் புரிந்த செல்வக் கலவை. பவழமல்லிகைப் பாங்கான மெல்லியல் மேனியும் சல்லாத் துகில் போன்ற சருமத் தெளிவும் அடைந்திடுவீர். வனப்பென்னும் செல்வம் நம் வசப்படவே......மகாராணி சந்தன சோப்...
அழகுசாதன சோப்புக்களில் அரசியார்க்கரசி
இந்துஸ்தான் லீவர் தயாரிப்ப
MHR. 1-X52 TM




ரெக்ஸ் அருந்தி ...
குளுமையுடன் இருங்கள்



ரெக்ஸ் ஆரஞ்சு ஸ்குவாஷிலுள்ள, புத்துயிரளிக்கும் ருசியான ரஸம் மிகுந்த பழுத்த ஆரஞ்சுகளின் மணத்தையும் மணத்தை நன்கு அனுபவியுங்கள். பெரிய டம்ளரில் கொஞ்சம் ஊற்றி, ஐஸ் துண்டுகளையும் போட்டு, தண்ணீரோ (அல்லது) சோடாவையோ சேர்த்து டம்ளரை நிரப்புங்கள். தாகத்தைத் தணிக்க இதுவே சரியான பானம்.


விருந்துகளுக்கும், உல்லாச பிக்னிக்குகளுக்கும், கடுமையான வேலை செய்த பின்பு தாகமெடுக்கும்போதும், இது நிச்சயம் அவசியப்படுகிற பானம். ரெக்ஸ் அதிசயமான பல வகைகளில் கிடைக்கின்றன—ஆரஞ்சு ஸ்குவாஷ், ஆரஞ்சு க்ரஷ், லெமன் ஸ்குவாஷ், லைம்ஜூஸ் கார்டியல், லெமன் பார்லி, மேங்கோ ஸ்குவாஷ், ஆரஞ்சு கான்ஸென்ட்ரேட், ரோஸ் ஸிரப், ராஸ்பெரி ஸிரப், பைனாப்பிள் ஸிரப், மற்றும் ஸ்டிராபெரி ஸிரப் முதலிய வகைகளில் கிடைக்கின்றன.



கார்ன் ப்ராடக்ட்ஸ் கம்பெனி (இந்தியா) பிரைவேட் லிமிடெட், பம்பாய்-1

இந்தத் தெருவிலே அங்கங்கே மக்கள் நிற்பதையும் பொம்மைகளிலே செய்து காட்டி யிருக்கிறார்கள். ஓர் இடத்தில் ஒரு பெரிய 'கோச்' வண்டி நிற்கிறது. இரண்டு குதிரைகள் பூட்டி நிற்கிறது! அந்த ரதசாரதியின் பார்வையும் அவனுடைய உடையும் அவனுடைய கம்பீரமான தோற்றமும் பார்த்தால் சற்று ஏமாந்தோமானால் அந்த வண்டி எந்த விநாடியும் நம்மீது சாடிவிடும் என்ற அச்சமே உண்டாகிறது.

இந்தத் தெரு முழுவதையும் ஆழமான பெரிய நிலவறைக்குள்ளே, பூமியின் கீழே அமைத்திருக்கிறார்கள். மாடியில் உள்ள பல பகுதிகளிலும் இந்தியர்களைக் கவரக்கூடிய சில விந்தைப் பொருள்கள் இருக்கின்றன!



யார்க் நூல் நிலையம்

யார்க் நகரத்தின் பழைய மேயர்களில் ஒருவராக விளங்கிய 'ஸர் ராபர்ட் பெல்ட்' என்பவருடைய சொந்த உடைமைகள் சில ஒரு கண்ணாடிப் பெட்டிக்குள்ளே இருக்கின்றன. இவற்றில் தமிழ் நாட்டுப் பொருள்கள் சிலவற்றைப் பார்த்தேன். ஓர் அருமையான தங்க அட்டிகை, சிவப்பு பதித்த ஜடைபில்லை, ஒரு முத்து மோதிரம், ஒரு வைடூரியக் கொண்டைத் திருக்கு முதலிய பல அணிகலன்கள் கண்ணாடிப் பெட்டிக்குள்ளேயிருந்து கொண்டு ஆறாயிரம் மைல்கள் தாண்டி வந்திருக்கும் இந்தத் தமிழனைப் பார்த்துக் கண் இமைகளை மூடி மூடி விழித்தன! இன்னும் நன்றாக அப் பெட்டியை ஆராய்ந்தேன்! என்ன ஆச்சரியம்! ஒரு ருத்திராக்ஷ மாலை. முப்பத்தெட்டு மணிகள் கொண்டது. ஒவ்வொரு ருத்திராக்ஷமும் ஆறு முகங்கள் கொண்ட வனப்பு மிக்க மணி! "ஷண்முக ருத்திராக்ஷம்" என்று சைவ மக்கள் அழைக்கிற புனிதமான ருத்திராக்ஷம் அது! இதன் கீழே சைவர்கள் தங்கள் மரபுப்படி ஒரு பெரிய ருத்திராக்ஷமோ அல்லது வேறு சிவச் சின்னமோ செய்து தொங்க விடுவது வழக்கம் அல்லவா! ஆனால் இந்த ருத்திராக்ஷ மாலையில் ஒரு விசித்திரம் கண்டேன். வெள்ளி முடிச்சுக்குப் பதிலாக ஆறு ருத்திராக்ஷங்களை நீட்டுப் போக்கிலும், ஐந்தைக் குறுக்காகவும் கோத்து ஒரு சிலுவையின் வடிவிலே அமைத்துத் தொங்க விட்டிருக்கிறது! இந்த மணிகளில் எல்லாம் தங்கம் பதித்திருக்கிறது!

இந்த ருத்திராக்ஷத்தை அணிந்தவரின் வரலாறு சம்பந்தமாக மேற்கொண்டு ஆராய்ச்சிகள் செய்தேன். இவர் ஒரு பெரிய வியாபாரி என்றும், கிழக்கிந்தியக் கம்பெனியோடு தொடர்பு கொண்டிருந்த ஆங்கில மூதாதையரின் வழியிலே வந்தவர் என்றும் தெரிந்து கொண்டேன். அவர் இந்த ருத்திராக்ஷத்தை உபயோகித்து வந்ததால், சிவச் சின்னத்துக்குப் பதிலாக ருத்திராக்ஷ மணிகளைக் கொண்டே சிலுவை செய்து தொங்க விட்டுக்கொண்டார் என்றும் புலனாயிற்று.

'தென்னாடுடைய சிவனே போற்றி எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி' என்று சைவ மரபுப்படி என் மனத்துக்குள் சொல்லிக் கொண்டேன். அந்த வார்த்தைகளுக்கு இப்போது ஒரு புதிய பொருள் ஏற்பட்டுவிட்டது.

அன்று பிற்பகல் டாம்லின்ஸன் அவர்களுடைய நூல் நிலையத்துக்குச் சென்றதும் இரண்டு பெரியார்களைப் பற்றிய வரலாற்றை மேலும் ஆராய்ந்தேன். ஒருவர் ரெவரெண்ட் ஜி.யூ. போப்! மற்றவர் ருத்திராக்ஷ மாலையை உபயோகித்து வந்த ஸர் ராபர்ட் பெல்ட்.

ஆராய்ந்தேன் என்றால் இவர்களைப் பற்றிய புத்தகங்கள் எங்கே இருக்கின்றன என்று ஓடி ஓடித் துருவித் தேடவில்லை. பெயர்களைச் சொன்னதும் புத்தகங்கள் வரிசை வரிசையாக வந்துவிட்டன. அத்தனை ஒழுங்காக நூல்களை வரிசைப்படுத்தி வைத்திருக்கிறார்கள் அங்கே!

'லெண்டிங் லைப்ரரி' என்ற பகுதியில் சுமார் ஒரு லட்சம் புத்தகங்கள் இருக்கின்றன. அங்கேயே இருந்து பார்ப்பதற்கான 'ரெபரென்ஸ் லைப்ரரி' என்ற பகுதியில் முப்பதினாயிரம் புத்தகங்கள் இருக்கின்றன! 'யார்க்' நகரத்தைப் பற்றிமட்டும் நாலாயிரம் நூல்கள் இருக்கின்றன. இக்காலத்து ஐரோப்பிய நடைமுறை வரலாறு பற்றி மூவாயிரம் புஸ்தகங்கள் வைத்திருக்கிறார்கள்.

நூல் நிலையக் கட்டடமும், போய் உட்கார்ந்து படிப்பதற்குரிய வசதிகளும் அந்த இடத்தின் சூழ்நிலையும், அமைதியும் நெஞ்சைக் கொள்ளை கொள்ளுகின்றன. அந்த நூல் நிலையத்தின் அதிபர் மிஸ்டர் டாம்லின்ஸனே ஒரு நடமாடும் நூல் நிலையமாகக் காட்சி தருகிறார். அங்கேயுள்ள தலைப்புக்கள் அத்தனையும் அவருக்கு மனப்பாடம்! அவருடைய கருகருப்பைப் பார்த்தால், அவருக்குள்ளே ஒரு மின்சார இயந்திரம் சுழன்று கொண்டிருப்பதுபோல் தோன்றும். அந்த மின்சாரச் சுழற்சியினால் இயக்கப்பட்டவனாக அங்கிருந்து மேயரின் வீட்டுக்குப் புறப்பட்டு விட்டேன்!

(தொடரும்)

4-1

அன்பே ஆரமுதே

அத்தியாயம் எட்டு

எலுமிச்சம் பழ சர்பத்தைக் கலந்து வந்து கொடுத்து விட்டு மறுபடியும் ஒரு மூச்சுப் பேசப் பிடித்துக் கொண்டார் பாகவதர். சர்பத்துகளைப் பற்றிப் பேசினார். பால்யத்தில், இப்பொழுதும்கூட, அவருடைய சங்கீத சகாக்கள் அமுங்கித் திளைத்த "தீர்த்த வாரி"யைப் பற்றிக் கால் மணி நேரம் பேசினார்.

"சங்கீத கோஷ்டிகளில் இதுக்குச் சுருதி என்று பேரு" என்றார்.

"எதுக்கு?"

"இதுக்கு" என்று விரல்களை மடக்கிக் கட்டை விரலைத் தண்ணீர் குடிக்கிறாற் போலக் காண்பித்து அர்த்தத்துடன் புன்சிரிப்புச் சிரித்தார் பாகவதர்.

"அப்படியா? சுருதிக்கும் அதற்கும் என்ன சம்பந்தம்?"

"சாப்பிட்ட மாத்திரத்தில் லயித்துப் போய் விடுகிறார்களோ இல்லையோ, தன்னை மறந்து. அதனால்தான் என்று நான் நினைக்கிறேன். இல்லாவிட்டால், 'சுருதிதான் இல்லையே. இதையாவது சுருதியென்று சொல்லித் திருப்திப் படுவோம்' என்று நினைக்கிறார்களோ, என்னவோ....?"

"இந்த உலகத்தில்தான் எத்தனை பரிபாஷைகள்! எத்தனை சங்கேதங்கள்!" என்று அனந்தசாமி சிரித்தார்.

"ரொம்ப சரி, நீங்கள் சொல்கிறது. எழுந்திருங்கள்."

"ஏன்?" என்ற பாவனையில் பார்த்தார் அனந்தசாமி.

"கார் வந்து கொண்டிருக்கிறது, ஸ்வாமி."

"எங்கே?"

"தெரு முனையில்.....சங்கேதம், பரிபாஷையென்றீர்களே. இப்பொழுது ஒரு ஹாரன் கேட்டதே. அதுதான் காசிலிங்கத்தின் கார். எழுந்திருங்கள். வந்து விடும்."

"எனக்குக் காதில் விழவில்லையே?"

"எனக்கு விழுந்தது.....பாருங்கள். இதோ வாசலில் வந்து நிற்கும்."

"நீங்கள் பேசுவதற்குத் தகுந்தாற் போல் எல்லாம் வளைந்து வந்து சேர்கிறதே. அதைச் சொல்லுங்கள்" என்று எழுந்து கொண்டார் அனந்தசாமி.

கார் ஹாரன் கேட்டது.

"பார்த்தீர்களா?"

வாசலில் பளபளவென்று பெரிய கார் ஒன்று வந்து நின்றது. புத்தம் புதிய கார். எல்லாக் கார்களுக்கும் இரண்டு நாலு ஆறு விளக்குகள்கூட இருக்கும். இந்தக் காருக்குத் தலை, மார்பு, முதுகு, பக்கங்கள் எங்கு பார்த்தாலும் விளக்குகள். உள்ளே திரை. முன்னால் ஒரு தொங்கு பொம்மை - மூக்கில் நாலைந்து பச்சை, மஞ்சள், சிவப்பு நாடாக்கள், நடனமாடுகிற வெள்ளைக்காரச் சிலை— பொங்கல் மாடு போல், பழைய மோஸ்தர் பணக்காரப் பெண்டுகளைப் போல், இப்படி அணியும் ஆபரணமுமாகச் சுமந்து கொண்டு வந்து நின்ற வாகனத்தைப் பார்த்தார் அனந்தசாமி.

"என்ன சிரிக்கிறீர்கள், ஸ்வாமி?" என்றார் பாகவதர்.

"இல்லையே."

"உங்களுக்கு எப்பொழுதுமே சிரித்த முகம். அது சிரிக்கிறது புதிதாகப் பார்க்கிறவர்களுக்குத் தெரியாமல் இருக்கலாம். சிரிப்போடு சிரிப்பாக எனக்குக் கூடவா தெரியாது?"

"சிரிக்கவில்லை. கவலைப்பட்டேன்."

"என்ன?"

"இத்தனை விளக்குகளும் எரிந்தால் தெருவில் போகிற மற்றவர்கள், மற்ற கார்கள் எல்லோருக்கும் சிரமமாக இருக்காதா என்று நினைத்தேன்."

"எழுத்துக்கு எழுத்து சரி. அது ஒரு சின்னம்."

"எதுக்கு?"

"காசிலிங்கத்தின் புகழைக் கண்டு எல்லோருக்கும் சிரமமாயிருக்கிறது. அவனுக்கு அடிக்கிற யோகம் இந்த எல்லா விளக்குகளும் எரிகிறாற் போல் மற்றவர்களுக்குச் சிரமமாகத்தான் இருக்கிறது. கண்ணைக் கூசுகிறது. கோபம், பொறாமை எல்லாம் படுகிறார்கள். இப்பொழுது அவனுக்குக் கண் தெரியவில்லை. இடத்துக்குத் தகுந்த வெளிச்சம் இருந்தால் பார்க்கும்படியாக இருக்கும். இந்தச் சின்ன அறையில் ஆயிரம் 'வாட்' பல்பைப் போட்டால் நமக்குக் கண்எப்படித்தெரியும்? தகுதிக்கு ஏற்ற புகழ் வேணும். இல்லாவிட்டால் கண்ணைமறைத்து விடுகிறது."

தி. ஜானகிராமன்

"பாகவதர்வாள்! இப்படிச் சுற்றிச் சுற்றிப் பேசி என் கண்ணை மறைக்கிறீர்களே" என்றார் அனந்தசாமி.

"என்னப்பா, பங்காரு! ஐயாவுக்கு ஒண்ணும் புரியலியாமே" என்று வாசலில் வந்து நின்ற டிரைவரைக் கேட்டார் பாகவதர்.

"அவுகளே பாத்தாகன்னா தெரியுது" என்றான் பங்காரு.

"பார்த்தீர்களா! எஜமான் மேலே விழுகிற வெளிச்சம் இவன் மேலும் விழுகிறது. தவிக்கிறான் ஆசாமி, அந்த உஷ்ணம் தாங்காமல்."

"அதை ஏன் கேட்கிறாய்? நல்லா உறங்கி நாலு வருசங்கள் ஆவப் போவுது" என்று அவர்கள் பின்னால் நடந்தான் அவன்.

கார் புறப்பட்டது.

"இது பூதக் கண்ணாடி யுகம்" என்று தொடர்ந்தார் பாகவதர்.

"எப்படி?"

"துளியூண்டு திறமை யிருக்கும். பழைய காலத்தில் பத்துப் பேர் பார்ப்பார்கள். ரயிலும் கிடையாது. தபாலும் கிடையாது. அந்த நல்ல பேரு நாய்க் குட்டி மாதிரி நம்ம காலேயே, உள்ளூரையே சுற்றிச் சுற்றி வந்துகொண்டிருக்கும்! இப்பொழுது 'ம்' என்றால் பத்திரிகையில் போட்டு விடுகிறார்கள். தொட்டுத் தொட்டு அது பெருகிக் கொண்டே வருகிறது. கடைசியிலே அந்த ஆசாமி 'அடேடே, நாம் இவ்வளவு பெரியவனா? இத்தனை நாட்களாகத் தெரியாமல் போய்விட்டதே' என்று மார்பைப் பார்த்துக் கொள்ளுகிறான். க்ஷவரக் கடையில் எதிரும் புதிருமாக இரண்டு கண்ணாடிகள் வைத்திருப்பார்கள். நடுவில் உட்கார்ந்திருக்கிறவனுக்கு அவன் தலை ஒன்றன்பின் ஒன்று என்று நூறாகத் தெரியும். அங்கே ஒரு விளக்கை வைத்தால் நூறு விளக்குகளாகத் தெரியும். இருக்கிறது என்னமோ ஒரு விளக்குத்தான், ஒரு தலைதான்!"

பாகவதர் சொல்வதெல்லாம் சுவாரசியமாகத்தான் இருந்தது. அவர் எப்பொழுதுமே வாயாடி. ஆனால் அர்த்தமில்லாமல் பேச மாட்டார். ஏன் இப்படிப் பேசுகிறார் என்று அனந்தசாமிக்குப் புரியவில்லை.

கார் போய்க் கொண்டிருந்தது.

"விளக்குக் கம்பம், சுவர்கள்—ஒன்றையும் விடாமல் பார்த்துக் கொண்டு வாருங்கள் சுவாமி. என் சிஷ்யப்பிள்ளையாண்டானின் முகத்தை நவரசங்களிலும் பார்க்கலாம். அதோ பார்த்தீர்களா, சோகம்; இதோ இங்கே பாருங்கள் சிருங்காரம்; அதோ, அங்கே அங்கே.... ம்...அந்த ஹோட்டல் வாசலில் அந்த டீக்கடை வாசலில் வைத்திருக்கிறதே கலர் படம் அம்...அதுதான்...அது வீரம். அந்த மரக்கிளையில் ரௌத்ரம்,...எங்கும் உள்ள பரம்பொருளாகி விட்டான் என் அப்பன் காசிலிங்கம்!"

"சிஷ்யனுக்கு இவ்வளவு பெருமை வந்தால் குருவுக்குத்தானே பெருமை?"

"சந்தேகமில்லாமல்."

தூரத்தில் மாடிகள், சார்ப்புகள் மீதெல்லாம் சூட்டலை நெளிந்தது. தார்ச் சாலையின் கானல் நீரில் மனித நிழல்களும் வாகன நிழல்களும் தலைகீழாய்த் தெரிந்து மறைந்து கொண்டிருந்தன.

கடலோரச்சாலையில் திரும்பி மீண்டும் சற்று தூரம் விரைந்து ஒரு பெரிய வீட்டின் தோட்டப்பாதையில் வண்டி திரும்பியது. கேட்டுக்கு வெளியே பரட்டைத் தலையும், நல்ல தலையும், கிழிசல் சட்டையும் நல்ல சட்டையுமாக ஒரு சிறு கும்பல் யாரையோ எதிர்பார்ப்பது போல் நின்று கொண்டிருந்தது.

"என் சிஷ்யப்பிள்ளையின் பக்தர் குழாம். ரசிகர் குழாம்!"

கார் நிற்கும் முகப்பிலும் அங்கங்கே சின்னச் சின்னக் குழுவாக யார் யாரோ உட்கார்ந்திருந்தார்கள். வண்டி நின்றது. வாசல் முன் தாழ்வாரத்திலும் கூட்டம்.

"வாங்க வாங்க" என்று ஓர் ஆள் அவர்களை வரவேற்று இரண்டு கட்டுத் தாண்டிப் பின் கட்டில் உள்ள ஹாலில் உட்கார வைத்துவிட்டுப் பக்கவாட்டிலுள்ள அறைக்குப் போய்விட்டு வெளி வந்தான். "இதோ வர்ரேன்னுங்க. கொஞ்சம் இருங்க. ஏதாவது சாப்பிடறீங்களா? காப்பி, டீ, கூல் டிரிங்க்?..."

"எல்லாம் ஆகி விட்டதப்பா!"

"பரவாயில்லே. கொஞ்சம் ஆரஞ்சு ஜூஸ் மட்டுமாவது சாப்பிடுங்க" என்று உள்ளே போனான்.

அனந்தசாமி சுற்றுமுற்றும் பார்த்தார். ஹால் நாலு சுவரும் கையிடம் இல்லாமல் புகைப்படங்களாக மாட்டியிருந்தன. நாலு சுவர் மத்தியிலும் ஓர் ஆள் உயரத்துக்கு அருண்குமாரின் படங்கள் நாலு. 'ஆயில்' சித்திரங்கள். கீழே எல்லாம் புகைப்படங்கள். மாலைகள் போட்ட அருண்குமார்கள். கும்பிடுகிற அருண்குமார்கள். கைகுலுக்குகிற அருண்குமார்கள். விமானங்களில் ஏறுகிற அருண்குமார்கள். சிரிக்கிற அருண்குமார்கள்.

விசிறி சுற்றியது.


"இந்தக் குரல்கூட அவன் குரல்தான்" என்றார் சுப்பராம பாகவதர். அனந்தசாமி கவனித்தார்.


உங்கள்
டார்ச்சில்
எஸ்ட்ரெலா
பொருத்தி
இரவில்
சூரிய
பிரகாசத்தைப்
பெறுங்கள்
ESTRELA
YOUR GUIDE
IN DARKNESS
எஸ்ட்ரெலா
ப்ளாஷ் லைட் பாட்டரிகள
டார்ச்கள் மற்றும் பல்புகள்
TAM






நான் இவ்வளவு
திறமையாக
வேலை செய்வதற்கு
சக்தியளித்தது



Cadbury's

BOURN-VITA

சக்திக்கும் வலிமைக்கும்



மோதிலால் நேரு நூற்றாண்டு விழாக் குழுவின் சார்பில் புதுதில்லியில் மே 4-ம் தேதி ஆரம்பமான டி. கே. எஸ். சகோதரர்களின் நாடக விழாவில் 'ராஜ ராஜ சோழன்' நாடகத்துக்குத் தலைமைவகித்த பாரதப் பிரதமர் பண்டித நேருவும், திரு ஷண்முகம், திரு பகவதி ஆகியோரும்.

"நீ மாத்திரம் அப்பகூட இருந்திருந்தே அனுதிருப்பே, தம்பி. இந்தமாதிரி தான், இந்த இடத்திலே தான் ப்ரண்ட்ஸுங்களோட உட்கார்ந்து பீர் கீர் சாப்பிட்டுக்கிட்டு ஜாலியாப் பேசிட்டிருக்கிறேன். நாலஞ்சு வெள்ளைக்கார ப்ரண்ட்ஸுங்க வேற கூட இருக்கிறாங்க. திடீர்னு நுளஞ்சாரு பாரு வேம்பு பிள்ளை-நம்ம மானேஜரு. முதலியாரு மோசம் பண்ணிட்டாருங்க என்று சொல்லிட்டே ஒரு கடுதாசை நீட்டினாரு. இங்கிலீசிலே எழுதியிருந்திச்சு. என்னய்யா, சொல்லேன்னேன். படத்தை ரிலீஸ் பண்ணப் படாதுன்னு கோர்ட்டிலே தடையுத்தரவு போட்டிருக்காங்கன்னாரு. அப்படியே ஷாக்கடிச்சாப்பல ஆயிடுச்சு. முத நாளன்னிக்கே பாராட்டுக் கூட்டம் போட்டு எனக்குக் கேடயம் கொடுக்கறதாக விளம்பரமெல்லாம் பண்ணிட்டாங்க. டிக்கெட்டெல்லாம் வித்துப் போயிடுச்சு. எப்படியிருக்கும்? நீ என்னை அப்ப பாத்திருந்தா அனுதிருப்பே தம்பி. அப்புறம் உளுந்தடிச்சு ஓடிப் பணத்தைக் கொடுத்திட்டு ரிலீஸ் உத்தரவு வாங்கி வந்தேன் தம்பி. அப்படி பண்ணினாரு உங்க சிநேகிதரு. லட்ச ரூபாய்க்கு ட்ரஸ்ஸுங்க வாங்கியிருந்தேம்பா அவருகிட்ட இந்தப் படத்துக்கு. படம் வெளி வந்ததுக்கு முன்னாலே பில் பணம் கொடுக்கலியாம். கடாசி நிமுஷத்திலே கழுத்திலே வச்சிட்டாருய்யா உங்க சிநேகிதரு. இந்த லட்சம்லாம் வந்து எனக்குத் தண்ணி சாப்பிடறாப்பல. இப்படிக் கண்ணைக் காட்டினேன்னா நூறு லட்சம் இல்லே, ஆயிரம் லட்சம் வரும், தம்பி. நம்மை அப்படி ஷாக் பண்ணாரே...நீ அனுதிருப்பே தம்பி என்னைப் பாத்திருந்தா... இதைப் பாரு. நான் அதை மறந்து போயிடலேன்னு சொல்லு. இந்த நாட்டிலியே இருக்க முடியாம பண்ணிடுவேன் தம்பி.மறக்க முடியாது என்னாலெ, மறக்க மாட்டேன்னு நீ சொல்லணும். என்ன சொல்லுவியா.....சரி.....அப்புறம் பார்க்கலாம். என்ன? அதுவா? எல்லாம் நான் பாத்துக்கறேன். கவலைப்படாதே... அப்ப வர்றியா?"

குரல் அருகே வந்தது.

பாகவதரும் அனந்தசாமியும் அறை நிலையைப் பார்த்தார்கள். அனந்தசாமிக்கு மூணுக்கென்றது. நிலையிலிருந்து ரங்கன் வெளியே வந்தான். சந்திராவைக் காரில் ஏற்றி ஏற்றி அலைந்த ரங்கன்தான்!

"ஐயாவா, வாங்க, வாங்க...வணக்கம்..." என்று அவர்களுக்கு வரவேற்புக் கூறிவிட்டு, "வா, தம்பி, கவலைப் படாதே" என்று ரங்கனுக்கு விடை கொடுத்தான் அருண்குமார். ரங்கன் வாசல்படி தாண்டினான். அவன் போவதைப் பார்த்துக் கொண்டே சற்று நின்றான் அருண்குமார். அவன் வயிறும் மார்பும் இரண்டு முறை குலுங்கின. உதட்டில் ஒரு புன்சிரிப்பு. "அட பைத்தியம்!" என்று சொல்லுகிறாற் போலிருந்தது இரண்டும்.

களிப்பே அறியாத அனந்தசாமியின் புருவம் சற்றுச் சுளித்தது.

"ரொம்ப நேரம் காக்க வச்சிட்டேனா?" என்று பாகவதரிடம் சொல்லிக் கொண்டே அனந்தசாமியைப் பார்த்தான் அருண்குமார்.

"அதெல்லாம் இல்லை. அஞ்சு நிமிஷம் தான் ஆச்சு வந்து. இவர்களைத்தான் அழைத்து வருவதாகச் சொன்னேன். குழந்தையைப் பார்க்க!"

"ஐயா தானா! ரொம்ப மகிழ்ச்சி. ஐயா ரொம்பச் சொல்லி யிருக்காங்க. ஆண்டவன் குறைவு வைக்காமல் நடத்திக்கிட்டு வர்றாரு. ஆனால் இந்தக் குழந்தையை இப்படிப் பண்ணவேண்டாம்."

"இனிமேல் கவலையே படவேண்டாம். எப்ப ஸ்வாமி வந்தாச்சோ, குழந்தைக்கு உடம்பு சரியாகிவிட்டது என்று அர்த்தம்."

"நான் ஒண்ணையும் சட்டை பண்ண மாட்டேன். இப்ப பாருங்க. இப்ப

கூடப் பேசிட்டிருந்தேன். ஒரு மாசம் முன்னுலெ குழியை வெட்டி, நம்மை இறக்கணும்னு பார்த்தாரு ஓர் ஆளு. சமாளிச்சுப் பிட்டான். நீங்க வரப்ப இந்த ஆளோட அதைத்தான் சொல்லிக்கிட்டிருந்தேன்.ஏவ்'' என்று ஏப்பம் விட்டான் அருண்குமார்.


அந்த ஏப்பம் கனிந்து புளித்துப் போன வாழைப்பழ நெடியோடு வந்து தாக்கிற்று. அனந்தசாமி மூச்சை அடக்கி அந்த வாடை மூக்குக்குள் போய்விடாமல் ஜாக்கிரதை செய்து கொண்டார். அருண்குமாரின் கண் கோவைப் பழமாகச் சிவந்து கிடந்தது.

''நான்கூட அவரை அடிக்கடி பார்த்திருக்கிறேன்'' என்ருர் அனந்தசாமி.

''உங்களுக்குத் தெரியுமா ?''

''சிநேகிதர்கள் வீட்டில் பார்த்திருக்கிறேன். அதிகப் பழக்கமில்லே.''

''நல்ல வெடையான ஆளு. பிஸினெஸெல்லாம் படா ஜாலக்கோட செய்வாரு. புலிப்பால் வேணும்னுலும் கொண்டாருவாரு. ஆனு ஆண்டவன் யாரை விடருன் ? எப்



போர்ப்பட்ட சூரப்புலியையும் கொஞ்ச நேரம் பைத்தியமா அடிச்சுப் பார்க்காம இருக்க முடியுங்களா அவனாலெ! என்னங்க நான் சொல்றது! ஐயாவுக்கில்ல!"


"ஆமா ஆமா ஆமா" என்றார் சுப்பராம பாகவதர்.

"அவருக்கு நம்ம மாதிரி இருக்கணும் என்று ஆசை. நாம என்னமோ ராத்திரி கிடையாது, பகல் கிடையாதுன்னு அலையறோம். எத்தினியோ ஓர்ரீஸ்— எத்தனையோ பிடுங்கல். கொஞ்ச நாள் எல்லாத்தையும் மறந்திட்டிருக்கணும்னு ஏதாவது செய்யறோம். ஐயாவுக்கில்ல, நான் ரொம்ப அரிச்சந்திரன், பிரகலாதன் என்றெல்லாம் சொல்லிக்கத் தயாராயில்லே. தப்பாக்கூட ஏதாவது செஞ்சிடறோம். அப்படியாப்பட்ட நிலைமை. அந்த மாதிரி, நீ ஏன் இருக்கணும்னு நினைக்கிறே?"

"ஆமா ஆமா ஆமா."

அனந்தசாமிக்கு என்ன ஏது என்று கேட்டுவிட வேண்டும் போல் துடித்தது. வாய் வரவில்லை. வந்ததும் வராததுமாக யாரோ மூன்றாம் மனிதனைப் பற்றி இவ்வளவு அக்கறை ஏன் காட்ட வேண்டும்? தானாக அவன் ரங்கனைப் பற்றிச் சொல்லட்டும் என்று கேட்டுக்கொண்டே நின்றார்.

"ஒரு உதாரணத்துக்குச் சொல்றேன் பாருங்க. அவரு ஒரு வேட்டி கட்டிக்கிட்டிருந்தாரே கவனிச்சீங்களா, மயில்கண் வேட்டி?- இந்த மாதிரி" என்று



தான் கட்டியிருந்த மயில் கண் வேட்டியைக் காட்டிக் கொண்டே மேலும் சொன்னான் அருண்குமார். "என் வேட்டி மாதிரியே கட்டியிருக்கீங்களே நீங்களும்னாரு. இது வேற தம்பீன்னேன். கரையென்னமோ ஜரிகைதான். ஒரே அகலம்தான். ஆனா இது வேற. அதை ஜாடையாச் சொன்னா சரின்னு கேட்டுக்க மாட்டாரு? அது எப்படி? நானும் சேலத்திலேதானே வாங்கினேங்கிறாரு. அதுக்கப்பறம், இந்த உடை வேற. இது அமெரிக்கன் பருத்தியிலேர்ந்து நூத்த நூலே ஸ்பெஷலா வாங்கி, சேலத்திலே ஒரு தறிகாரர் கிட்ட கொடுத்து, சூரத்திலேர்ந்து வெள்ளி, செம்பு கலப்பில்லாம, அசல் தங்க ஜரிகையே போடச் சொல்லி வாங்கி, அதையும் அந்தத் தறிகாரர் கிட்ட கொடுத்து நெய்யச் சொன்ன வேட்டி. ஒரு வேட்டிக்கு ஜரிகை மட்டும் நானூறு ரூவா ஆவுதுன்னு சொன்னதுக்கு அப்புறம்தான் அப்படியான்னாரு.

"ஒரு உதாரணத்துக்குச் சொன்னேன். எல்லாத்திலியும் இப்படி இருக்கணும்னு பார்க்கறாரு."

அந்த எல்லாம் என்பது என்னென்ன என்று அனந்தசாமி வாயைத் திறவாமல் அரற்றிக் கொண்டார். 'அந்தச் சந்திராவை நான் பத்து வயது முதல் பார்த்துக் கொண்டிருக்கிறேன். என் குழந்தை மாதிரி அவள். அவளை வாட வாட விட்டு இந்தப் பயல் அலைகிறான். எங்கே அலைகிறான், ஏன் அலைகிறான் என்று எனக்குத் தெரிய வேண்டும்' என்று கத்த வேண்டும் போலிருந்தது அவருக்கு. 'நாகம்மாள் இது விஷயமாக உதவி செய்ய வேண்டும் என்று வெளிப்படையாக என்னைக் கேட்கவில்லை. ஆனால் நான் உதவி செய்யக் கடமைப் பட்டிருக்கிறேன். இந்த ரங்கன் ஏன் இப்படி முகர்ந்து கொண்டேயிருந்த பூவை வெயிலில் போட்டுவிட்டுப் போனான்? எங்கே போனான்? ஏன் போனான் என்று நான் தெரிந்து கொண்டாக வேண்டும்' என்று அவர் மனசு கத்தியது. ஆனால் நாக்கு தான் சுருட்டிக் கொண்டு கிடந்தது.

"ஏன், உங்கள் மாதிரி சினிமாவில் நடிக்க வேண்டும் என்று ஆசைப்படுகிறாரோ?" என்று சாதாரணமாகக் கேட்பது போல் சிரித்துக்கொண்டு கேட்டார்.

"அட, அதை விடுங்க..." என்று சிரித்தான் அருண்குமார். "ஸ்டெடியா இருக்கிறவர்களையும் ஆண்டவன் ஆட்டி வைப்பான்கிறதைச் சொல்றதுக்காக வல்ல சொன்னேன். உள்ளார வாங்க. குழந்தையைப் பார்க்கலாம்" என்று கூறி அந்த ஹாலின் மத்தியிலிருந்த நிலை வழியாக உள்ளே போய் மாடிப்படியேறினான் அவன்.

ரங்கனைப் பற்றி ஒன்றையும் சொல்ல மாட்டேன் என்கிறான் இந்தப் பையன். 'நான்' 'நான்' 'நான்' என்று 'நான்' லேயே இப்படி மூழ்கிக் கிடக்கிறான். தன் வேட்டியைப் பற்றியே பத்து முழம் நீளம் பேசிவிட்டான். அதுமட்டுமில்லை. தப்புப் பண்ணுகிறதைக்கூட இவ்வளவு கௌரவமாகச் சொல்லிக்கொள்கிறானே. தான் செய்வதால் அந்தத் தப்புக்கூட நல்ல காரியமாகி விடும் என்றமாதிரியல்லவா பேசுகிறான்? என்று வியந்து கொண்டே மாடிப்படியேறினார் அனந்தசாமி. இவன் செய்ய வேண்டும் என்று அந்தத் தப்புகள் தவங்கிடக்கிறாற்போல் பேசுகிறானே என்று நினைக்கும்பொழுது அவருக்குத் தலை சுற்றியது. அர்த்த ராத்திரியில் குடைபிடிக்கிற குலமா, தடித்தனமா, குழந்தைத்தனமா என்று புரியாமல் தவித்தார்.

கடைசிப்படி ஏறியதும் சற்று நின்றார் அனந்தசாமி. மீண்டும் அந்தக் காட்சி அவர் கண்ணை உறுத்தியது - ரங்கனுக்கு விடை கொடுக்கும்போது காசிலிங்கத்தின் மார்பு இலேசாகக் குலுங்கி, கபடப் புன்னகையாக வந்த அந்தக் காட்சி. அவர் போக்கைக்கூடச் சற்று தடை செய்தது அது. மனத்தில் எழுந்த கசப்பை எரித்துவிட முயன்றார் அவர். 'சிவோஹம் சிவோஹம்' என்று நாலு தடவைகள் உள்மனம் முணுமுணுத்தது. 'நானே இறைவன். நானே இறைவன், நானும் காசிலிங்கம்தான். அவன்தான் நான்' என்று தம்மையே காசிலிங்கமாக, தம்மையே பிரபஞ்சமாகப் பாவித்துக் கொண்டார் அவர். எப்பொழுதாவது, யார்மீதாவது கசப்புத் தோன்றினால், இதைச் சொல்லிச் சொல்லி அவர் உலுப்பிக் கொள்கிற வழக்கம். உலையில் மாட்டிக் கொண்ட சக்கரத்தைத் தள்ளி ஏற்றுவதுபோல் தம்மை உயர்த்திக் கொள்ளுகிற வழக்கம்.

"வாங்க!" என்றான் காசிலிங்கம்.

"என்ன நின்று விட்டீர்கள்?" என்றார் சுப்பராம பாகவதரும். மேலே நடந்தார் அனந்தசாமி.

ஒரு நிலையைத் திறந்து கொண்டு உள்ளே நுழைந்தான் காசிலிங்கம். 'ம்ம்' என்று சுருதி கூட்டினாற்போல் ஒரு சத்தம். அந்த ஹால் முழுவதும் குளிர் செய்யப்பட்டிருந்தது. மீண்டும் ஒரு கதவு. அப்புறம் ஒரு கதவு. பிறகு ஒரு ஹால். அங்கேயும் குளிர்.

அவர்களைக் கண்டதும் ஸோபாவில் உட்கார்ந்திருந்த ஒரு பெண் எழுந்து நின்றாள். (தொடரும்)





டாடாவின்
ஓ டி
கோலான்
சோப்




ஓ டி கோலானும் சேர்த்து தயாரிக்கப்பட்டு பொன்னிற உறையில் பொதியப்பட்டுள்ளது.

TESY-14


நரிவேட்டை
7
கதை: ஜெயந்தி
சித்திரம்: விநு
தகப்பன் டெஸிமோ கொலையுண்டதையும் அதற்காகத் தன் காதலன் குமார் கைது செய்யப்பட்டிருப்பதையும் எண்ணி, வருத்தமும் மனக்கசப்பும் மிக லின்யி தூக்கம் பிடிக்காமல் தவிக்கையில், டெஸிமோவின் உடைமைகளைத் திருடிக் கொண்டு போகிறார்கள் இருவர்...
காயா? பழமா?
... அவர்கள் வருகையை எதிர் பார்த்திருக்கிறான் ஒற்றர் தலைவன் லாஷா.
காரியம் வெற்றிதான்! ஆனால் லின்யி மட்டிலும் கொஞ்சம் இடைஞ்சலாக இருந்தாள்.
பொல்லாத பெண்! உங்கள் பார்வையிலிருந்து அவள் அகலவே கூடாது! புரிந்ததா?
மறுநாள் காலையில்
அடப் பாவமே என்னம்மா இது?
வேலைக்காரி கட்டுகளை அவிழ்த்து விட...
நேற்றிரவு இரண்டு கொள்ளைக்காரர்கள் புகுந்து...
நல்ல வேளை! இந்தப் பணம் மட்டும் அவர்கள் கண்களில் படவில்லை!
இதோ, அப்பா மேஜைமேல் நான் வைத்திருந்த கடிகாரத்தையும் அவர்கள் கவனிக்கவில்லை!
இருந்தாலும் உனக்கு இப்படித் துன்பத்துக்கு மேல் துன்பமாக நேர்ந்து கொண்டிருக்க வேண்டாம்!
அப்பாவின் நினைவாக இந்த ஓட்டலைத் தொடர்ந்து நல்லபடியாக நடத்தத் தீர்மானித்திருக்கிறேன். எனக்கு உதவுவாயா?



சிறிது நேரத்துக்குப் பிறகு....
நான் போலீஸ் ஸ்டேஷன் வரை போய் வருகிறேன். விருந்தினர் முகம் கோணாமல் பார்த்துக் கொள்.
இன்ஸ்பெக்டர்! டெஸிமோவின் வீட்டைச் சோதனையிட்டீர்களா?
என் கடமை என்னவென்று எனக்குத் தெரியும் நீ சொல்லிக் கொடுக்கத் தேவையில்லை.
வின்யி அங்கு வருகிறாள்.
இன்ஸ்பெக்டர் ஸார்! நேற்று ஓட்டலில் நடந்த ஒரு திருட்டை 'ரிபோர்ட்' பண்ண விரும்புகிறேன்.
அதோ லாக்-அப்பில் இருக்கிறாரே, அவருடையது இது. சேர்ப்பித்து விடுங்கள்!
வின்யி! அவ்வளவு ஆணவமா உனக்கு?
இன்ஸ்பெக்டர், ஸார்! இவருடன் பேசுவதற்கு நான் வரவில்லை... அப்பாவுடைய மதிப்பு மிக்க பொருள்கள் ஏதும் கொள்ளை போகவில்லை. குப்பைக் காகிதங்கள் சில தான்...
செல்வத்தைக் கொள்ளையடிக்க அவர்கள் வரவில்லையே! அவர்களையும் உன் அப்பாவையும் காட்டிக் கொடுத்து, தேசத்துரோகிகள் என்று ருசிப்பிக்கக் கூடிய சாட்சியங்களைத்தானே திருட வந்தார்கள்!
நான் வருகிறேன்!
நான் ஏமாந்து தான் போனேன். டெஸிமோவின் அறையை இனி சோதனையிட்டும் பயனில்லை.



POST & TEL
உண்மையில் அப்பாவைக் கொன்ற பாதகர்களைக் கண்டு பிடிக்கத் தான் குமார் முயன்று வருகிறாரோ? அவர் மனத்தைப் புண படுத்தி விட்டேனே?
கண்ணே ஆபத்து சூழ்ந்தால் தந்தி கொடுக்கச் சொன்னாரே, குமார்! மறந்து போனது மன்னிக்க முடியாத குற்றம் தான்.
தயவு செய்து இந்தத் தந்தியை உடனடியாக அனுப்பி விடுங்கள்.
சில வினாடிகளுக்குப் பின்னர்.
இப்போது ஒரு பெண் தந்தி கொடுக்கச் சொன்னாள் அல்லவா? அதை ஒரு நிமிஷம் நான் பார்க்க வேண்டுமே!
இந்தாங்க 'ஸம் திங்' உங்களுக்கு ரொம்ப சிரமம்.
ஷியாமாவுக்கு லின்யி அனுப்பும் தந்தியைப் படித்தவர்கள் இன்னுமொரு தந்தியும் எழுதுகிறார்கள்.
இந்தாருங்கள், அத்துடன் இந்தத் தந்தியையும் கொடுத்து விடுங்கள்.
டில்லியில் தந்திகளைப் பெறும் குமாரின் மனைவி ஷியாமாவும் ஸாஷாவினுடைய கையாளும் வெவ்வேறு உணர்ச்சிகளுக்கு ஆளாகிறார்கள்.


கனவு நனவாகியது...
கந்தனுக்கு வயது 25. இந்த நிலத்தைக் குத்தகைக்குப் பயிரிடும் ஏழை உழவன் அவன். இலட்சியமெல்லாம் அவனுடையது. தினந்தோறும் நிலத்தில் நிற்பது உண்டு
"இந்த நிலம் எனக்குச் சொந்தமில்லை. என்றாவது ஒரு நாள் எனது மகனுக்கு இது உரிமையாக வேண்டும். எப்படி?"
விருப்பத்திற்கு விடைகாண்பதே போல் ஒரு நிகழ்ச்சி நடந்தது. ஒரு நாள் கிராம மக்கள் எல்லோரும் ஒன்றுகூடினர்.
ஆயுள் இன்சூரன்சு பற்றிய திரைப்படங்கள் பார்த்தனர். அவை நிலம் வாங்கப் போதிய பணம் பெறுவது எப்படி என்று விளக்கின.
"ஒரு ஆயுள் இன்சூரன்சுப் பாலிசி எடுப்பதன் மூலம் ஒருவர் முதுமைக் காலத்திற்குப் பாதுகாப்பு ஏற்பாடு செய்ய முடியும். இடையிலேயே இவர் இறக்க நேர்ந்தாலும் குடும்பத்திற்குப் பணம் கிடைக்கும்."
உடனே, கந்தன் ஒரு ஆயுள் இன்சூரன்சுப் பாலிசி எடுக்க முடிவு செய்தான். இதற்காக சிறுகச் சேமித்தான். 20 ஆண்டுகள் முடியும் போது ரூ 3000 அடைவதற்காக மாதா மாதம் சேமித்தான்.
இன்று கந்தனுக்கு இந்த நிலம் சொந்தமாகிவிட்டது. ஆயுள் இன்சூரன்சு தந்த பணம் அதற்கு உதவியது. மகனுக்காகக் கந்தன் கண்ட கனவு நனவாகியது.
ஆயுள் இன்சூரன்சு
ஆருயிர் நண்பன் போன்றது
ASRLIC.R.9

சியாமளாவின் நீண்ட மெல்லிய அழகிய விரல்கள் துடித்தன. அவை இடுக்கியிருந்த கடிதமும் துடித்தது. அந்தக் காதல் கடிதத்தை எவன் அவளுக்கு எழுதினனே, தெரியாது. சந்தேகமில்லாமல், டைப் அடிக்கப்பட்டிருந்த அந்தக் கடிதம் அவளுக்குத்தான் எழுதப்பட்டிருந்தது. அப்போது சியாமளா என்ற பெயருள்ள வேறு ஒருத்தியும் கல்லூரியில் இல்லை.

'காதல் செய்யக் கல்லூரிக்கு வரவில்லை. கல்லூரியானது கரும்பு வில்லேந்திக் காமன் விளையாடும் காடல்ல; கலைமகள் கோயில் கொண்டிருக்கும் திருப்பதி. எவன் எனக்குத் தைரியமாக இதை எழுதினன்?' என்று அவளுக்குச் சினமே மூண்டது.

அவளுக்கு எந்த மாணவன் மனத்திலும் கிளர்ச்சி உண்டாக்கும் வகையில் நடந்து கொண்டதாகத் தெரியவில்லை. பகட்டில்லாது உடையணிந்து பவ்யமாகவே அவள் நடந்துகொண்டாள். பல மாணவர்களின் குரல் அவளுக்குத் தெரியுமே தவிர அவர்கள் முகம் கூட அவளுக்குத் தெரியாது. தான் உண்டு தன் படிப்பு உண்டு

அந்தக் கடிதம் தான்



என்றுதான் அவள் இருந்து வந்தாள். பெண்கள் நடந்து கொள்ள வேண்டிய முறையைப் பற்றிப் புரட்சிகரமான மேல் நாட்டு நவீனக் கருத்துக்களைக் கடைப் பிடித்த இதர மாணவிகள் புராணத்தில் வரும் கதாநாயகி போலச் சியாமளா நடந்து கொள்வதைப் பழித்தனர்.

அன்று கல்லூரி நூலகத்திலிருந்து சியாமளா எந்தப் புத்தகத்தை வீட்டுக்கு எடுத்துக்கொண்டு போவாள் என்பதை ஒருவன் ஊகித்து. அதற்குள் அந்தக் காதல் கடிதத்தை வைத்திருந்தது அவளுக்குப் பெருத்த ஆச்சரியத்தை விளைவித்தது. அவளுக்கே நூலகத்துக்குள் நுழையும் வரை எந்தப் புத்தகத்தை எடுத்துப்போவது என்று தெரியாது. நூலகத்தில் நுழைந்த பின்தான், ஜெர்மானியன் ஒருவன் சங்கரபாஷ்யத்தைப் பற்றி எழுதியிருந்த நூல் அவளுடைய கண்ணில் பட்டு மனத்தைக் கவர்ந்தது. அத்துவைதத்தில் ஞானமும் கலையும் இருப்பவர்கள்தான் அதைப் படித்துப் புரிந்து கொண்டு அனுபவிக்க முடியும். சாதாரணமாகக் கல்லூரியில் தத்துவம் படிப்பவர்கள் யாரும் அந்த நூலை அண்டுவதில்லை.

புத்தகத்தை அலமாரியிலிருந்து விலக்கித் தூசியைத் தட்டி விட்டு லைப்ரேரியனிடம் கொண்டு வந்தாள். அவர் புத்தகத்தின் தலைப்பைப் பார்த்துவிட்டுச் சியாமளாவின் முகத்தையும் ஒரு முறை ஏற இறங்க நோக்கி விட்டுப் புத்தகத்தைப் பதிவு செய்துகொண்டு அவளிடம் கொடுத்தார்.

புத்தகத்தைப் பெற்றுக்கொண்ட சியாமளா நூலகத்தை விட்டு வெளியே நடந்து கொண்டே அதைப் பிரித்தாள். சியாமளா என்று டைப் எழுத்தில் விலாசமிடப்பட்டிருந்த கடிதம் ஒன்று உள்ளே இருந்தது. அதைப் பிரித்துப் படித்தாள். கண்ணியமான வசனங்களில் காதல் கடிதம் வரையப்பட்டிருந்தது.

சியாமளா சுற்று முற்றும் பார்த்தாள். விஷமக்காரக் கல்லூரிப் பெண்கள் யாராவது அருகிலிருந்து ஓடிவந்து என்ன கடிதம் என்று கேட்டால் என்ன செய்வது என்று பயம். அவள் நிரபராதியானாலும் இப்போது கடிதமும் கையுமாகப் பிடிபட்டால் வம்புக்காரப் பெண்கள் இவளுடைய அச்சமும் நாணமும் பாசாங்கு என்று பறைசாற்றிவிட மாட்டார்களா? பரீட்சை தவறாமல், தான் முதல் மார்க்கு வாங்குவதால் மற்றப் பெண்களுக்குப் பொங்கும் பொறாமையைத் தீர்த்துக் கொள்ளக் கடிதம் இடம் கொடுத்துவிடுமே என்று நடுங்கினாள் சியாமளா. கடிதத்தைக் கிழித்துக் கசக்கி போடும்போது யாராவது சட்டென்று வந்துவிட்டாலும் ஆபத்துதான். ஆகையால் அதை பவிக்கைக்குள் உடனே பதுக்கிக் கொண்டு விட்டாள். அவளைக் கேலி செய்ய வேண்டும் என்று யாராவது பெண்களே அக்கடிதத்தை எழுதி வைத்திருக்கலாமோ என்ற சந்தேகம் வேறு எழுந்தது.

பல எண்ணங்கள் அல்லல்படுத்தவே, வகுப்பில் அவள் மனம் பாடத்தில் செல்லவேயில்லை. ஆசிரியர் கேட்கும் கேள்விகளுக்கு அனாயாசமாகப் பதில் சொல்லும் சியாமளாவுக்கு அன்று கேட்கப்பட்ட கேள்விகளின் பொருளே புரியவில்லை.

கடிதத்தைப் பிரின்ஸிபாலிடம் கொடுக்கலாமா என்ற யோசனை அவளுக்கு உதித்தது. கையெழுத்து இல்லாத கடிதம். எழுதினவனைக் கண்டு பிடிக்கப் பிரின்ஸிபால் விசாரிப்பது என்று ஆரம்பித்தால் சியாமளாவின் நிலை தர்மசங்கடமாகி விடுமே!

சியாமளா வீடு சென்றபோது என்றும் உள்ள புன்முறுவலை அவள் முகத்தில் காணோம். அது அவளுடைய தகப்பனாரைத் திடுக்கிடச் செய்தது.

சியாமளாவின் அன்னை இறந்து பதினைந்து வருடங்கள் ஆகின்றன. ஆனாலும் வேதசாரம் அய்யர் மறுமணம் செய்துகொள்ளவில்லை. சியாமளாவுக்காகத் தம் வாழ்க்கையை அவர் தியாக வாழ்வாக நடத்தி வந்தார். அவளுடைய மனம் கோணக்கூடாது, முகம் கணங்கக் கூடாது என்று சியாமளாவைச் செல்வமாக நடத்தினார்.

''என்ன சியாமளா, இன்று ஒரு மாதிரியாக இருக்கிறாய்'''' என்று வேதசாரம் கேட்டார்.

செய்யாத குற்றத்தைச் சொல்லிக் கொள்ள முடியாத உணர்ச்சியின் காரணமாகத் தன் முகம் மாறியிருக்கிறது என்பது அகவேதனை கொண்ட சியாமளாவுக்குத் தெரியும். அவளுக்கு உண்மையைத் தன் தகப்பனாரிடம் மறைக்க இஷ்டமில்லை. ஆனால் விஷயம் தெரிந்தவுடன், அவள்தான் ஒரு பையன் கடிதம் எழுதும் அளவுக்கு அவனிடம் நடந்து கொண்டு விட்டாள் என்று அவர் சந்தேகப்பட்டால்.....? என்ன செய்வது என்று புரியாமல் தயங்கினாள் சியாமளா.

''உடம்பு சரியாக இல்லையா?'' என்று தகப்பனார் பரிவுடன் வினவினார்.

மனத்தில் உள்ள கோளாறை உடம்பின் மேல் பழி சுமத்தித் தப்பிக் கொள்ளச் சியாமளா விரும்பவில்லை. அது அவள் இயல்பும் அல்ல.

"உடம்புக்கு ஒன்றும் இல்லை, அப்பா!"

"பின்னே ஏன் இப்படித் துவண்டுபோய் வந்திருக்கிறாய்?"


"நான் நாளை முதல் கல்லூரிக்குப் போகப் போவதில்லை."

"ஏன்?"

அவள் உடனே பதிலளிக்கவில்லை. தலைகுனிந்து நிற்கத்தான் அவளால் முடிந்தது.

"ஏன் போகவில்லை?" என்று தகப்பனார் திரும்பவும் வியப்புடன் கேட்டார்.

சியாமளாவின் செவ்விய கன்னங்கள் வழியே கண்ணீர் வழிய ஆரம்பித்தது.



"அவ்வளவு அழகான ஊரில் நீங்கள் பார்வையிட வந்தபோது உங்கள் கண்ணில் முதலில் என்ன பட்டது?"

"பக்கத்தில் நின்றவரின் குடைக் காம்புதான்!"

"யாரோ பையன் எனக்குக் கடிதம் எழுதியிருக்கிறான்" என்றாள் சியாமளா விம்மல் விக்கலுடன்.

"இவ்வளவுதானே? இதற்காக அழலாமா? அசடே! அழாதே!" என்றார் வேதசாரம்.

இரண்டு கணங்கள் இருவரும் பேசவில்லை.

"ஆணையும் பெண்ணையும் சேர்த்துப் படிக்க வைப்பது சரியல்ல. அப்படிச் சேர்த்துப் படிக்க வைத்தால் அதனால் விளையும் பயனை ஏற்றுத்தான் ஆக வேண்டும். மனம், ஆசை இரண்டையும் கட்டிப் போடத் தும்போ, அணையோ கிடையாது. உனக்கு எழுதினவன் மேல் விருப்பமில்லாவிட்டால் நீபாட்டுக்கு இரேன். அதற்காகக் கல்லூரியை விடுவானேன்?" என்றார் வேதசாரம் தொடர்ந்து.

"இப்படித் தினம் கடிதம் வந்தால் எப்படிப் பாடத்தை மனத்தில் வாங்குவது? முதல் இடத்திலிருந்து நழுவி ஒப்புக்குப் படிப்பதில் பலன் இல்லை. ஒன்று படிக்கும்போது படிக்க வேண்டும்; இல்லை, ஒழுங்கான குடித்தன வாழ்க்கையில் ஈடுபட வேண்டும். இரண்டும் கெட்டானாக இருப்பது தப்பு" என்றாள் சியாமளா, தீர்மானம் தொனிக்கும் குரலில்.

"அந்தக் கடிதம் எங்கே? கொடு, பார்க்கலாம் — உனக்கு ஆட்சேபணை இல்லாவிட்டால்" என்றார் வேதசாரம்.

"எனக்கு என்ன ஆட்சேபணை? உங்களிடம் மறைக்க என்ன இருக்கிறது?" என்று கூறியபடி, சியாமளா, தகப்பனாரின் விசாலமான மனத்தையும் தாராளமான குணத்தையும் மனத்துக்குள் மெச்சிக்கொண்டாள்.

வேதசாரம் கையை நீட்டினார். சியாமளா கடிதத்தை அவர் கையில் கொடுத்தாள்.

வேதசாரம் அதைப் பிரித்தார். படித்தார். அவர் நோக்கு நடைமுதல் உலகத்தில் நிகழ் கால எல்லைகளைத் தாண்டிச் சென்றுவிட்டது. கையில் இருந்த கடிதத்தை அவர் தம்மையறியாமலே கையினால் கசக்கினார்.

"என்ன அப்பா இது? நான் ஒன்றும் அந்தப் பையன் எனக்கு எழுதும்படி நடந்து கொள்ளவில்லை. என்னை நம்புங்கள் அப்பா" என்றாள் சியாமளா. அவளுக்கு அழுகை முட்டிக் கொண்டு வந்தது.

"சியாமளா! நான் அப்படி நினைக்கவில்லை. உன் மேல் எனக்கு நம்பிக்கையுண்டு."

"பின் ஏன் அப்பா உங்கள் முகம் மாறி விட்டது!"

"என் முகம் ஒன்றும் மாறவில்லையே! இந்தக் கடிதாக பழைய கடிதாக; இருபது வருஷங்களுக்கு முன் எழுதியது. கவனித்தாயா?" என்றார்.

அவர் மனக் கண்ணெதிரே பழைய நினைவு விரிந்தது!

வாழ்க்கையில் இளமைப் பருவம் குதூகலமும் மகிழ்ச்சியும் பொங்கித் ததும்பும் காலம். கல்லூரியில் பயிலும் நாட்கள் என்றும் மனத்தில் பசுமையான நினைவுகளைப் பதித்துச் செல்கின்றன. வேதசாரம் கல்லூரியில் பயின்ற காலத்தில் அவர் உள்ளத்தைக் கவர்ந்தவள் சியாமளா. அவரது இதயக் கோயிலிலே அவள் நிரந்தர இடம் பெற்றுவிட்டாள். தன் அருமைக் காதலிக்கு வேதசாரம் எழுதிய கடிதம் அது. அவரும் அவளும் கொண்ட காதல் கடிதத்தோடு நின்று கைகூடாக் காதலாகிவிட்ட பொழுதிலும் அவளிடம் கொண்டிருந்த அன்பு சிறிதும் குறையவில்லை. அது காரணமாகத்தான் தம் மகளுக்கு அவள் பெயரை வைத்திருந்தார்.

"உனக்கு எப்படி அம்மா இந்தக் கடிதம் கிடைத்தது?" என்று கேட்டார் வேதசாரம் தம் அருமை மகளிடம்.

"நூலகத்துப் புத்தகம் ஒன்றிலிருந்து கிடைத்தது. யாரோ எனக்காக வைத்திருக்கிறான் என்று நினைத்தேன்" என்று பதில் அளித்தாள் சியாமளா. தன்மீது தந்தைக்குச் சந்தேகம் ஏதாவது ஏற்பட்டுள்ளதோ என்று அவர் கண்களை ஊடுருவிப் பார்த்தாள்.

'சந்தேகமில்லை. அந்தச் சியாமளாதான் இதை மறதியாக லைப்ரரிப் புத்தகத்தில் வைத்திருக்க வேண்டும்!' இப்படி எண்ணியவருக்கு, அவளும் தம் மகளைப் போல் தத்துவ நூல்தான் படிப்பாள்; ஒருவருக்கும் விளங்காத, ஒருவரும் தீண்டிக்கூடப் பார்க்காத புத்தகங்களிடம்தான் அவளுக்கும் அலாதிப் பற்றுதல் என்பது நினைவு வந்தது. அதனால்தான் கடிதம் இருபது ஆண்டுகளாக ஓரே புத்தகத்தில் இன்றுவரையில் இருந்திருக்கிறது என்றும் தீர்மானித்துக் கொண்டார் வேதசாரம். ஆனால் அதைத் தம் மகளிடம் எப்படி விண்டு சொல்வது?

இருபது ஆண்டுகள் கழித்து அந்தக் கடிதம் அவர் மகளின் கையில் கிடைத்து அவள் மனத்தை இப்படியா குழப்ப வேண்டும்? விதியின் செயல் வேடிக்கைதான்!

மணிபல்லவம்

38 - உள்ளத்தில் ஒரு கேள்வி

பரிவும், ஏக்கமும், பசியும், குளிருமாகக் கழிந்த அந்த நீண்ட இரவுக்குப் பின் கப்பல் கரப்புத் தீவில் பொழுது புலர்ந்தபோது மங்கல நீராடி எழுந்த கன்னிகை போல் தீவு முழுதும் புத்தழகு பூத்திருந்தது. மழை இரவுக்குப் பின்னர் விடியும் காலை நேரத்துக்கு எப்போதுமே மிகுந்த வனப்பு உண்டு. தண்மையும் மலர்ச்சியுமாக விடிந்த அந்தக் காலைப் போதில் இளங்குமரனும், சுரமஞ்சரியும் ஒருவருக்கொருவர் பேசிக் கொள்ளவில்லை. வெளியே எங்கும் குளிர்ச்சி, எங்கும் மலர்ச்சி. அவர்கள் இருவர் நெஞ்சங்களில் மட்டும் வெம்மையும், பிணக்கும் விளைந்திருந்தன. முதலில் இளங்குமரன்தான் துயில் நீங்கிக் கண் விழித்து எழுந்திருந்தான். அப்போது சுரமஞ்சரி எதிர்ப்புறமிருந்த வேறொரு மரத்தடியில் உட்கார்ந்தபடியே சாய்ந்து கண்மூடித் தூங்கிக் கொண்டிருந்தாள். அவளை எழுப்புவதற்காக அருகில் சென்று நின்று கொண்டு இரண்டு கைகளையும் சேர்த்துத் தட்டி ஓசையுண்டாக்கினான் இளங்குமரன். அந்த ஓசையைக் கேட்டு வாரிச் சுருட்டிக் கொண்டு எழுந்து நின்றாள் அவள். எதிரே அவனைப் பார்த்ததும் கோபத்தோடு முகத்தை வேறு பக்கமாகத் திருப்பிக் கொண்டாள். சிறு குழந்தையைப் போல் சீற்றம் கொண்டாடும் அந்தப் பெண்ணின் நிலையைக் கண்டு தனக்குள் மெல்லச் சிரித்துக் கொண்டான் அவன்.

அவளுடைய கோபத்தையும், பிணக்கையும் பொருட்படுத்தாமல் நகரத்துக்குச் செல்லும் கப்பல் களைக் கூவியழைத்து ஏதாவதொரு கப்பலில் இடம் பெற்றுக்



நா. பார்த்தசாரதி

கொள்ள முயல்வதற்காக மேட்டில் ஏறினான் இளங்குமரன். விரைவில் அவனது முயற்சி பயனளித்தது. வலை களையும், பட்டுக்களையும் ஏற்றிக் கொண்டு சீன தேசத்திலிருந்து பூம்பு கார்த் துறைமுகத்தை நோக்கி வந்து கொண்டிருந்த சீனத்துக் கப்பல் ஒன்று இளங்குமரனின் கூப்பாட்டுக்குச் செவி சாய்த்தது. மாதக் கணக்கில் கடற் பயணம் செய்து துறைமுகத்தை அடை வதற்கிருந்த அந்தக் கப்பலில் சுரமஞ்ச ரிக்கும், இளங்குமரனுக்கும் இடம் கிடைத்தது. கப்பலுக்குள் ஏறிய பின்பும் இளங்குமரனும், சுரமஞ்சரியும் ஒரு வரோடொருவர் பேசிக்கொள்ளாமல் முகத்தைத் திருப்பிக் கொண்டுதான் இருந்தார்கள்.

கப்பலின் தலைவன் மிகவும் இளகிய மனமுள்ளவனாக இருந்தான். நனைந்தும், கசங்கியுமிருந்த அவர்கள் ஆடைகளைக் கண்டு மனம் இரங்கி, "இவற்றை அணிந்து கொண்டு பழைய ஆடைகளைக் களைந்தெறியுங்கள்" என்று புத்தம் புதிய பட்டாடைகளைக் கொண்டுவந்து அளித் தான் அந்தச் சீனத்துக் கப்பலின் தலைவன்.

"பட்டுக்களின் மென்மையை அநு பவித்துச் சுகம் காணும் பழக்கம் இது வரை எனக்கு இருந்ததில்லை. இனி மேலும் இருக்கப் போவதில்லை. தயை கூர்ந்து என்னை விட்டு விடுங்கள். ஆனால் இதோ என் அருகில் நிற்கும் இந்தப் பெண்ணுக்குப் பட்டாடை என்றால் கொள்ளை ஆசை. இவளுடைய வீட்டில் மிதித்து நடந்து செல்வதற்குக் கூடப் பட்டு விரிப்பைத்தான் பயன்படுத்து வார்கள். இவளுடைய உடலுக்குப் பட்டாடையும், கைகளுக்குப் புதிய வளையல்களும் நிறையக் கொடுத்தால் காவிரிப்பூம்பட்டினத்திலேயே பெருஞ் செல்வராகிய இவள் தந்தையின் நட்பும் உங்களுக்குக் கிடைக்கலாம்" என்று புன்னகையோடு கப்பல் தலைவனுக்கு மறுமொழி கூறினான் இளங்குமரன். அப் போது சுரமஞ்சரி கண்களில் சினம் பொங்க அவனை எரித்துவிடுவது போலப் பார்த்தாள்.

சுரமஞ்சரியின் தந்தையைப் பற்றி யும், அவருடைய கப்பல் வாணிகத்தின் பெருமை பற்றியும் இளங்குமரன் இனஞ் சொல்லி விளக்கிய பின்பு கப்பல் தலைவ னின் மனத்தில் அவள்மேல் மதிப்பு வளர்ந்தது. உடனே விதவிதமான பட்டு ஆடைகளையும், வளையல்கள், ஆரங்கள் ஆகியவற்றையும், அவளுக்கு முன்னால் கொண்டுவந்து குவித்து, 'இதைப் பாருங்கள், அதைப் பாருங்கள்' என்று வேண்டிக் கொள்ளத் தொடங்கி விட்டான் அவன்.

"நான் ஒன்றையும் பார்க்க வேண் டாம். முதலில் நீங்கள், உங்கள் வேலை யைப் பாருங்கள்" என்று சுரமஞ்சரி சீற்றத்தோடு கூறியபின்பே அந்தக் கப்பல் தலைவனின் ஆர்வம் நின்றது.

கப்பல் காவிரிப்பூம் பட்டினத்துத் துறைமுகத்தை அடைந்தபோது அதன் தலைவனுக்கு நன்றி கூறிவிட்டுக் கீழே இறங்கினான் இளங்குமரன். அவனை அடுத்துக் கீழே இறங்கிய சுரமஞ்சரி அவனிடமோ, கப்பல் தலைவனிடமோ, சொல்லி விடைபெற்றுக் கொள்ளாமலே வேகமாக முன்னால் நடந்து செல்ல லானாள். இளங்குமரனும் விரைவாக அவளைப் பின்தொடர்ந்து அருகிற் சென்று நின்றுகொண்டு, "பெண்ணே! இப்படிச் சினத்தோடு முகத்தை முறித் துக்கொண்டு போவதனால் ஒரு பயனு மில்லை. என்னுடைய உதவியை இப்போ தும் நான் உனக்கு அளிப்பதற்குச் சித்தமாயிருக்கிறேன். நீ விரும்பினால் உன்னுடைய மாளிகைவரை உனக்குத் துணை வருவேன்" என்றான். இதைக் கேட்டபின்பும் சுரமஞ்சரியின் முகம் மலரவில்லை; மனம் நெகிழவில்லை.

"என்மேல் அன்பு செலுத்துகிறவர் களின் உதவிதான் எனக்கு வேண்டும். என்னை 'எவளோ ஒரு அப்பாவிப் பெண்' என்று நினைத்து வெறும் கருணையை மட்டும் காண்பிக்கிறவர்களிடம் நான் உதவியை எதிர்பார்க்கவில்லை. என்னு டைய மாளிகைக்குப் போய்ச் சேருவ தற்கு வழி எனக்குத் தெரியும்" என்று அவன் முகத்தை நிமிர்ந்து பாராமலே எடுத்தெறிந்து பேசிவிட்டு முன்னைக் காட்டிலும் வேகமாக நடந்தாள் சுரமஞ்சரி. அவள் அவனிடம் இப்படிக் கடுமையாகப் பேசிவிட்டுச் செல்வதைக் கண்டு அருகில் நின்ற சிலர் பெரிதாகச் சிரித்தனர். தன்னை ஏளனம் செய்கிற தொனியில் அவர்கள் சிரிப்பு ஒலித்தா லும் இளங்குமரன் அதைக் கேட்கா தவன்போல் வேறு பக்கமாகத் திரும்பி நடந்தான். ஏற்றுமதி செய்வதற்குக் குவித்த பொருள்களும், இறக்குமதி செய்து குவித்த பொருள்களுமாக அம் பாரம் அம்பாரமாய்ப் பல்வேறு பண் டங்கள் நிறைந்திருந்த துறைமுகப் பகுதி களைக் கடந்து வெளியே வந்தான் இளங்குமரன். அன்று காலையிலிருந்தே அவன் மனமும், எண்ணங்களும் சுறு சுறுப்பாயிருந்தன. அங்கே துறைமுக வாயிலில் இருந்த 'பார்வை மாடம்' என் னும் மேடையில் ஏறி நின்று பார்த்தால் பூம்புகாரின் அக நகரும், புற நகரும், கட

லுக்குள் கண்ணுக் கெட்டிய தொலைவுவரை தெரியும். பெரிதும், சிறிதுமான கப்பல்களும் காட்சியளிக்கும். ஏறிப் பார்ப்பதற்காகவே அமைந்திருந்த மாடமாகையால் அது பார்வை மாடம் என்று அழைக்கப்பட்டு வந்தது. பார்வை மாடத்தில் ஏறி நின்று பார்த்த இளங்குமரனுக்கு முதல்நாள் மழையில் நனைந்திருந்த நகரும், சுற்றுப் புறங்களும் அற்புதமாய்த்தோன்றின. எல்லையற்ற பெருநீர்ப் பரப்பினிடையே குளிர்ந்த வைகறைப் போதில் பனித்துளி புலராது தலைதூக்கி மலர்ந்து கொண்டிருக்கும் பெரும் பூவைப்போல் மழையில் நனைந்திருந்த நகரத்தில் பகல் பிறந்து விரிந்து கொண்டிருந்தது. அதைப் பார்த்த போது இளங்குமரன் மனத்தில் விசித்திரமானதோர் ஆவல் அரும்பியது. அப்போதே நகரத்தின் ஒவ்வொரு பகுதியிலும் கால் போகும் போக்கில் நடந்து சுற்றிவிட்டு வரவேண்டும் போலிருந்தது அவனுக்கு. இப்படிப் பல சமயங்களில், மழையிலும், வெயிலிலும், காரணமும், நோக்கமுமின்றி அநுபவத்தைத் தேடும் அநுபவத்துக்காக ஊர் சுற்றியிருக்கிறான் அவன். கப்பலிலிருந்து இறங்கி வந்த போது புறவீதியில் வளநாடுடையார் வீட்டுக்குச் சென்று சிறிது நேரம் தங்கியபின், அங்கிருந்து நேரே படைக்கலச் சாலைக்குப் போய்விட வேண்டுமென்று நினைத்துக் கொண்டிருந்த அவன் இப்போது அந்த எண்ணத்தை மாற்றிக் கொண்டான். உற்சாகத்தோடு ஊர் சுற்றிப் பார்க்கப் புறப்பட்டான். ஒவ்வோர் இடமாகப் பார்த்து விட்டுப் பௌத்தப் பள்ளியும், புத்தர் பெரு



மானுக்குரிய ஏழு பெரிய விகாரங்களும் அமைந்திருந்த 'இந்திர விகாரம்' என்னும் பகுதிக்கு வந்து சேர்ந்திருந்தான் அவன். தூபிகளோடு கூடிய வெண்ணிற விமானங்கள் ஏழும் தோட்டத்துக்கு நடுவே தூய்மையின் வடிவங்களாகத் தோன்றின. புத்த விகாரங்களுக்கு முன்னால் அங்கங்கே சிறு சிறு கூட்டங்களுக்கு நடுவே நின்று கொண்டு பௌத்த சமயத்தைச் சார்ந்த துறவிகள் அறவுரைகளைப் பகர்ந்து கொண்டிருந்தார்கள். இன்னும் சில துறவிகள் 'எங்களை எதிர்த்துச் சமயவாதம் புரியும் திறமையுள்ளவர்கள் வரலாம்' என்று அழைப்பது போல் தத்தம் கொடிகளைக் கம்பங்களின் உயரத்தில் பறக்க விட்டுக் கொண்டு வெற்றிப் பெருமிதத்தோடு நின்று கொண்டிருந்தார்கள்.

அந்தப் புத்த விகாரங்களுக்கு முன்னால் சமயவாதிகளின் திறமையான பேச்சில் மயங்கிக் கூடியிருந்த கூட்டத்துக்குள் இளங்குமரனும் புகுந்து நின்று கொண்டான். இளைத்த தோற்றத்தையுடைய நெட்டையான பௌத்த சமயத் துறவி ஒருவர் புத்த ஞாயிறு தோன்றும் காலத்தில் உலகுக்கு விளையும் நன்மைகளைப் பற்றிச் சொல்லிக் கொண்டிருந்தார்:

'புத்தஞாயிறு தோன்றும் காலத்தில் கதிரவனும், சந்திரனும் நீங்கின்றி விளங்குவார்கள். நாளும், கோளும், நலிவின்றி நல்லனவாய் நிகழும். வானம் பொய்யாது. வளங்கள் குறையாது. உலகத்து உயிர்கள் துன்பமின்றி இன்பமே நுகரும். மலைகளும், கடலும் பெரும் பயன் நல்கும். பசுக்கள் கலம் நிறையப் பால் பொழியும். உலகத்தில் நோய்களே இல்லாமற் போய்விடும். கொடிய விலங்குகளும் பகை நீங்கி வாழும். கூனும், குருடும், ஊமையும், செவிடும் போன்ற அங்க ஈனர்களை எங்குமே காண முடியாது. உலகமே இன்ப மயமாக மாறிவிடும்...'' என்று தாமரை மலர்போன்ற வலக் கையை ஆட்டி உயர்த்திப் பேசிக் கொண்டிருந்த அந்தத் துறவிக்கு மிக அருகிற் சென்று அவருடைய வலது கையை எட்டிப் பிடித்துக் கொண்டு விட்டான் இளங்குமரன். ''எனக்கு ஒரு சந்தேகம். அருள்கூர்ந்து அதைத் தெளிவாக விளக்கியபின் நீங்கள் மேலே பேசலாம்.''

''ஆகா! அப்படியே செய்கிறேன் அப்பா. உன் சந்தேகத்தைச் சொல்'' என்று அவன் பிடியிலிருந்து தம் கையை விடுவித்துக் கொள்ளாமலே கேட்டார் அவர். அவனுடைய செய்கையால் அவர் சிறிதும் அதிர்ச்சியோ, அச்சமோ அடைந்ததாகவே தோன்றவில்லை. அமைதியாக நகைத்துக்கொண்டுதான் நின்றார்.

''புத்தஞாயிறு தோன்றுங் காலத்தில் உலகத்தில் பசி, பிணி, துன்



பம் ஒன்றுமே இல்லாமற் போகும் என்று சற்று முன் நீங்கள் கூறியது மெய்தானா அடிகளே?"

"மெய்தான்! இதில் உனக்குச் சந்தேகம் ஏன்?"

"அப்படியானால் இப்போது என்னோடு நான் கூப்பிடுகிற இடத்துக்குவாருங்கள், அடிகளே!" என்று கூறிக்கொண்டே அவரைப் பரபர வென்று இழுத்துக் கொண்டு விரைந்து நடந்தான் இளங்குமரன். அவனுடைய வேகத்துக்கு ஈடு கொடுத்து நடக்க இயலாத துறவி அவனுடன் இழுபடுவது போல் தட்டுத் தடுமாறி விரைந்தார். இந்த வம்பு எதில் போய் முடிகிறதென்று காணும் ஆவலினால் கூட்டத்தில் சிலரும் அவர்களைப் பின்தொடர்ந்தார்கள். இளங்குமரனுக்கும், துறவிக்கும் பின்னால் ஒரு பெரிய கூட்டமே தொடர்ந்து நடந்து வரத் தொடங்கியிருந்தது. உலக அறவியின் பொது அம்பலத்துக்குள் நுழைந்து அங்கே பசிப் பிணியாலும், வறுமை வேதனைகளாலும் நொந்து கூடியிருந்த ஏழ்மைக் கூட்டத்தை அந்தத் துறவிக்குச் சுட்டிக் காண்பித்தான் இளங்குமரன்.

"இவர்களைப் போன்றவர்களைக் கண்டு, இவர்களைப் போன்றவர்களின் துன்பங்களிலிருந்துதான் உங்கள் புத்தருக்கு ஞானம் பிறந்தது. ஆனால் இவர்களைப் போன்றவர்களின் பசியும், நோயும் தீர வழிதான் இன்னும் பிறக்கவில்லை. இவர்களைப் போன்றவர்கள் தலைமுறை, தலைமுறையாக இன்னும் உலகத்தில் இருக்கிறார்கள். நோயும், நொடியும், பசியும், பாவமும், இவர்களோடு வழிமுறை வழிமுறையாக இருக்கின்றன. நீங்களோ இந்திரவிகாரத்து வாயிலில் நின்றுகொண்டு புத்தஞாயிறு தோன்றும் காலத்தில் உலகமே சுவர்க்க பூமியாக மாறிவிடும் என்று கதை அளந்து பாமரர்களை ஏமாற்றிக் கொண்டிருக்கிறீர்கள். இப்போது சொல்லுங்கள். இவர்களுடைய இருண்ட வாழ்க்கையில் புத்த ஞாயிறு தோன்றிப் புத்தொளி பரப்பாதது ஏன்? இவர்களுடைய குழிந்த வயிறுகளில் சோறு குவியாதது ஏன்? ஒளியிழந்த கண்களில் ஒளி தோன்றாதது ஏன்?" —என்று ஆவேசம் கொண்டவன் போல் உணர்வு மயமாக மாறி அவரைக் கேட்டான் இளங்குமரன். அவர் அவன் முகத்தைக் கூர்ந்து நோக்கினார். பதில் கூறாமல் மெல்லச் சிரித்தார். தம்மையும், அவனையும், சுற்றிக் கூடியிருந்த கூட்டத்தை நன்றாக நிமிர்ந்து பார்த்தார்.

சிறிது நேரம் ஏதோ சிந்திப்பவர்போல் அமைதியாக நின்றார். பின்பு இளங்குமரனை நோக்கிக் கூறலானார்:


"தம்பீ! உன் கேள்விகள் மிக அழகாக இருக்கின்றன. சார்வாக மதத்தைச் சேர்ந்தவர்களுக்குத்தான் இவ்வளவு அழகாகப் பேசவரும். அவர்கள்தான் இப்படிப் பொருளற்ற கேள்விகளைக் கூட அழகான சொற்களால் கேட்பார்கள். இறைவன் என ஒருவன் இல்லை என்பார்கள். நல்வினை தீவினைகளின் விளைவை ஒப்புக் கொள்ள மாட்டார்கள். தங்கள் இன்ப துன்பங்களுக்குத் தங்களுடைய வினைகளே காரணமென்று புரிந்து கொள்ளாமல் இறைவனை காரணமென்று மயங்கி அவனைப் பழிப்பார்கள்."

"அடிகளே! நான் யாரையும் எதற்காகவும் பழிக்கவில்லை. இவர்கள் இப்படி வாழ நேர்ந்ததன் காரணத்தைத் தெரிந்து கொள்ள ஆசைப்படுகிறேன்" என்றான் இளங்குமரன்.

"நல்லது! அதைத் தெரிந்து கொள்வதற்கு நீயும், நானும், சிறிதுநேரம் விரிவாகப் பேசி வாதமிட வேண்டும். இதோ இங்கே என்னையும், உன்னையும் சுற்றிக் கூடியிருக்கும் காவிரிப்பூம் பட்டினத்துப் பொதுமக்கள் சாட்சியாகக் கேட்கிறேன். சமயவாதம் புரிகிற இருவரும் ஒத்த அறிவுடையவராக இருக்க வேண்டியது நியாயம். என்னோடு சமயவாதம் புரிவதற்கு நீ தகுதி உடையவனா என்று முதலில் நான் தெரிந்து கொண்டு விடுவது நல்லது. நீ எந்தெந்த நூல்களைக் கற்றிருக்கிறாய் என்று சொல் பார்க்கலாம்."

"வில்வித்தை, யானையேற்றம், குதிரையேற்றம், வாட்போர்....." என்று சில பெயர்களை வரிசையாக அடுக்கினான் இளங்குமரன். துறவியும், கூடியிருந்தவர்களும் கொல்லென்று சிரித்துக் கை கொட்டி ஏளனம் செய்தார்கள்.

"தம்பீ! உன்னுடைய வாட்டசாட்டமான உடம்பையும், முரட்டுத் தோற்றத்தையும் பார்த்தாலே நீ பெரிய வீரன் என்பது தெரிகிறது. ஆனால் நான் இப்போது கேட்கும் கேள்வி உன் உடம்பின் வளர்ச்சியைப் பற்றி அல்ல; மனத்தின் வளர்ச்சியைப் பற்றித்தான் கேட்கிறேன். மனம் வளர்வதற்காக நீ என்னென்ன நூல்களைக் கற்றிருக்கிறாய்? சமயங்களையும், தத்துவங்களையும் பற்றி என்னென்ன தெரிந்து கொண்டிருக்கிறாய்? என்னென்ன புரிந்து கொண்டிருக்கிறாய்?" என்று நிமிர்ந்து நின்று கை நீட்டி வினவும் அந்தத் துறவிக்கு முன் இளங்குமரனின் தலை தாழ்ந்தது. வாழ்க்கையிலேயே முதல் முறையாக உடலின் பலத்தால் எதிர்க்க முடியாத ஓர் எதிரிக்கு முன் தலை குனிந்து நின்றான் அவன். என்ன பதிலை அவருக்


அறிமுகப்படுத்துகிறோம்...
பாமாலிவ்
லவண்டர் டால்க்
பெருமிதமும்... வசீகரமும் தரும் பிரசித்தி பெற்ற லவண்டரின் நறுமணம் இப்பொழுது உங்களுக்குப் பிடித்தமான பாமாலிவ் டால்க் மூலம் கிடைக்கிறது இந்த மிக நுண்ணிய சேர்த்தியான டால்க் உங்கள் சருமத்தில் பரவி நாள்முழுவதும் நீடித்திருந்து. உங்களைப் புத்துணர்ச்சியுடனும் பரிமள அழகுடனும் வைத்திருக்கும் சேர்த்தியை நீங்கள் பெரிதும் விரும்புவீர்கள்.
லவண்டர்
பெருமிதமும்...வசீகரமும் தரும் மணமுடையது
டீ லக்ஸ்
17 மயக்கும் ஸெண்டுகளின் அற்புதக் கலவை
PALMOLIVE
Lavender
TALC POWDER
PALMOLIVE
Talcum Powder
DE LUXE
பாமாலிவ்
டால்கம் பவுடர்
PTG.5 T.

டாக்டர்கள் மில்க் ஆப் மக்னீஷியாவையே சிபாரிசு செய்கிறார்கள் — மிதமாக பேதி ஆவது, அமிலத்தை எதிர்த்து பூர்ண நிவாரணமளிப்பதில் சக்தி வாய்ந்தது.

உலகத்திலுள்ள ஆயிரக்கணக்கான டாக்டர்களையும், சிசு வைத்திய நிபுணர்களையும், பிரசவ வைத்தியர்களையும், ரண சிகிச்சை வைத்தியர்களையும் "நீங்கள் உங்கள் நோயாளிகளுக்கு பிலிப்ஸ் மில்க் ஆப் மக்னீஷியாவை சிபார்சு செய்கிறீர்களா?" என்று கேட்டதற்கு அவர்களில் அனேகர் "ஆம்!" என்று பதிலளித்தார்கள்.

ஆம், குழந்தைகளுக்கும், பிரசவம் மற்றும் ரண சிகிச்சை பெற்ற நோயாளிகளுக்கும் கூட பிலிப்ஸ் மில்க் ஆப் மக்னீஷியா மிகவும் பலன் தரக்கூடியது என்று டாக்டர்கள் கருதுகிறார்கள்.

இதில் ஆச்சர்யமொன்றுமில்லை!



பேதி மருந்து ஆனாலும் பிலிப்ஸ் மில்க் ஆப் மக்னீஷியா நிதானமாகவும், செம்மையாகவும், இதமாகவும் வேலை செய்கிறது; ஜீரண உறுப்புகளை பலவீனப்படுத்துவதில்லை. அமிலங்களை அடக்கும் பிலிப்ஸ் மில்க் ஆப் மக்னீஷியா வயிற்றுக் கோளாறு, வாயு, நெஞ்செரிச்சல் மற்றும் மலச்சிக்கலுடன் வரும் இதர அமில உபாதைகளிலிருந்தும் நிவாரணமளிக்கிறது.

எந்தவிதமான பேதி மருந்தும் இம்மாதிரி சுகமான பரிபூரண நிவாரணமளிக்காது!

உங்கள் டாக்டரைக் கேளுங்கள்! ஒவ்வொரு வீட்டிலும் கட்டாயம் இருக்கவேண்டியது

பிலிப்ஸ் மில்க் ஆப் மக்னீஷியா

REGD. TRADE MARK



இரைப்பையில் மித மிஞ்சிய அமிலத்தால் ஏற்படக்கூடும் அஜீரணத்திலிருந்து உடனடியாக நிவாரணம் பெற எங்கும், என்றும் இலபமான, இனியபான பிலிப்ஸ் மில்க் ஆப மக்னீஷியா வில்லைகளை உட்கொள்ளுங்கள். 4 வில்லைகள் கொண்ட கையடக்கமான பாக்கெட்களிலும், 75, 150 கொண்ட புட்டிகளிலும் கிடைக்கும்.



பூரண விநியோகஸ்தர்கள்:

டேஸ் மெடிகல் ஸ்டோர்ஸ் பிரைவேட் லிமிடெட்

குக் கூறுவதென்று அவனுக்குத் தெரியவில்லை. சர்வநாடியும் ஒடுங்கித் தளர்ந்து போர் தொடங்கு முன்பே எதிரிக்குத் தோற்றுப் போய் நிற்கும் பேதை போல் நிற்பதைத் தவிர வேறொன்றும் செய்யத் தோன்றவில்லை அவனுக்கு.

"புத்தமதத்தைப் பற்றியாகிலும் உனக்கு ஏதாவது தெரியுமா?"

'உங்களைப் போன்ற மொட்டைத் தலை சாமியார்கள் அந்த மதத்தில் நிறைய இருக்கிறார்கள் என்பது மட்டும் தெரியும்' என்று முரட்டுப் பதிலாகக் கூறி அவரை மடக்கலாமா என நினைத்தான் இளங்குமரன். ஆனால் உடல் குன்றிப் போய் அத்தனை பேருக்கு முன் அவமானப்பட்டு நின்ற அந்தச் சூழ்நிலையில் வாய் திறந்து பேசும் துணிவையே இழந்திருந்தான் அவன்.

'உனக்கு என்ன தெரியும்? உனக்கு எதைப் பற்றி ஞானம் உண்டு?' என்று அவன் உள்ளத்தில் பெரிதாய் எழுந்து இடையறாமல் ஒலிக்கலாயிற்று ஒரு கேள்வி. அந்தக் கேள்வியில் அவன் உள்ளத்தின் செருக்கெல்லாம் துவண்டு ஒடுங்கியது.

சுற்றிக் கூடியிருந்த கூட்டத்திலிருந்து வாய்க்கு வாய் தன்னை ஏளனம் செய்து இகழ்ந்து பேசும் குரல்கள் ஒலிப்பதை அவன் செவிகள் கேட்டன. அந்தக் கணத்தில் அவன் உடம்பும் மனமும், அதற்கு முன் எப்போதுமே அடைந்திராத கூச்சத்தை அடைந்தன. வெட்கத்தை உணர்ந்தன. வேதனையை அனுபவித்தன.

இந்திர விகாரத்தின் வாயிலில் இருந்து அந்தத் துறவியைக் கைப் பிடித்து இழுத்துக் கொண்டு வந்த போது தன்னிடமிருந்த மிடுக்கும், கம்பீரமும் போன இடம் தெரியாமல் பொலிவிழந்து நின்றான் இளங்குமரன்.

"மறுபடி எப்போதாவது என்னிடம் கேள்வி கேட்க வந்தால் இப்படி வெறுமையான மனத்தோடு, வெறுங் கையை வீசிக் கொண்டு வராதே, தம்பி! மனம் நிறைய ஞானத்தோடு வலது கையில் சமய வாதம் புரிவதற்கான கொடியை உயர்த்திப் பிடித்துக் கொண்டு ஞான வீரனாக வந்து சேர். மற்போர் வீரனைப் போல் உடம்பை மட்டும் வலிதாகக் காண்பித்துக்கொண்டு வந்து நிற்காதே" என்று அவனுக்குக் கேட்கும்படி உரத்த குரலில் கூறிவிட்டுக் கூட்டத்தை விலக்கிக் கொண்டு திரும்பி நடந்தார் அந்தப் பௌத்த சமயத் துறவி

39 - மனம் மலர்கிறது

உலக அறவியில் பௌத்த சமயத் துறவியிடம் தோற்று, அங்கே கூடியிருந்தவர்களின் இகழ்ச்சியையும் ஏற்க நேர்ந்த பின், நடைப் பிணம் போல் தளர்ந்து படைக்கலச் சாலைக்குப் புறப்பட்டிருந்தான் இளங்குமரன். மனமும், நினைவுகளும், தாழ்வுற்று வலுவிழந்திருந்த அந்த நிலையில் தெரிந்தவர்கள், அறிந்தவர்கள், எவரையும் எதிரே சந்திக்காமல் இருந்தால் நல்லதென்றெண்ணி ஒதுங்கி மறைந்து நடந்தான் அவன். முதல் நாள் இரவு கப்பல் கரப்புத் தீவின் தனிமையில் சுரமஞ்சரி என்னும் பேரழகியைச் சிறிதும் பொருட்படுத்தாமல் நிமிர்ந்து நின்ற செருக்கும், தன்மானமும், இன்று எலும்பும், தோலுமாய் இளைத்துப் போன துறவி ஒருவருக்குமுன் தோற்றுத் தாழ்ந்து விட்டதென்பதை நினைத்த போது அவன் மனம் தவித்தது.

'என் மனம், என் மனம்' என்று அவன் மற்றவர்களிடம் பெருமை பேசித் தருக்கிய அதே மனத்தில் 'என்ன இருக்கிறது?' என்று கேட்டு விட்டார் அந்தத் துறவி. முரட்டுத் திமிரையும், வறட்டு ஆணவத்தையும் தவிர இருப்பது வேறு ஒன்றுமில்லை என்றும் நிரூபித்து விட்டார். பலர் நகைத்து இகழும்படி நிரூபித்து விட்டார்.

'அப்படியில்லை! ஒருபோதும் அப்படியில்லை. என் மனத்தில் கருணையும் இருக்கிறது. ஓவியன் மணிமார்பனுக்கும், சுரமஞ்சரி என்ற பெண்ணுக்கும், துன்பம் நேர்ந்த காலங்களில் நான் கருணை காட்டியிருக்கிறேன். உலக அறவியிலும், இலஞ்சி மன்றத்திலும் உள்ள ஏழைகள் மேலும், இளைத்தவர் மேலும் இரக்கம் கொண்டிருக்கிறேன். பிறருக்கு உதவுவதில் பெருமை கொண்டிருக்கிறேன். இயலாதவர்களுக்கு உதவுவதில் இன்பம் கண்டிருக்கிறேன்.'

'இருக்கலாம்! ஆனால் 'நம்மால் பிறரிடம் கருணை காட்ட முடியும்' என்ற ஆணவ நினைப்புத்தான் உன்னுடைய கருணைக்கும் காரணம். 'இரக்கப்பட முடியும்' என்ற பெருமைக்காகவே இரக்கப் படுகிறவன் நீ! கருணைக்காகவே கருணை செலுத்தவும் இரக்கத்துக்காகவே இரங்கவும், உனக்குத் தெரியாதுதானே?'

இப்படி அவன் மனத்துக்குள்ளேயே அவனைப் பற்றி வாதப் பிரதிவாத நினைவுகள் எழுந்தன. தன்னைப் பற்றிய நினைவுகளைத் தானே தனக்குள் எண்ணி மெய்யின் ஒளியைத் தேட முயன்று தவிக்கும் ஆத்மாநுபவத் தூண்டுதலை அவன் அடைந்தான். அந்தத் தூண்டுதல் ஏற்பட ஏற்பட மனத்தின் கனங்களெல்லாம் குறைந்து மனமே மென்மையானதொரு பூவாகிவிட்டது போலிருந்தது அவனுக்கு. தன் மனத்தின் குறிக்கோள் இப்போது புதிய திசையில் திரும்புவதையும் அவன் உணர்ந்தான்.

பதினெட்டு வயதில் இளமையின் நுழை வாயிலில் அவன் மனத்தில் ஏற்பட்டு ஆறிய ஆசைப் பசிகள் இரண்டு. ஒன்று, உடம்பை வலிமையாகவும், வனப்பாகவும் வைத்துக்கொண்டு எல்லாருடைய கவனத்தையும் கவர வேண்டுமென்பது. மற்றொன்று விற்போரும், மற்போரும், போன்ற படைக்கலப் பயிற்சிகளில் எல்லாம் தேறித்தேர்ந்த வீரனாக விளங்கவேண்டுமென்பது. இந்த இரண்டு ஆசைகளும் நிறைவேறி மறந்து போன பின் தன்னுடைய தாய் யார், தந்தை யார்-தனக்கு உறவினர்கள் யார் என்று அறியும் ஆசை எழுந்தது. நிறைவேறாத அந்த ஆசையில் நைந்து நைந்து அது இறுதியில் தாயை மட்டுமாவது காணும் விருப்பமாகக் குறைந்தது. அருட்செல்வ முனிவரின் மறைவுக்குப் பின் அந்த ஆசையும் நிறைவேறும் வழியின்றித் தவிப்பாக மாறி மனத்திலேயே தங்கி விட்டது.

இன்றோ, முப்பதாவது வயதுக்கு இன்னும் சிறிது காலமே எஞ்சியிருக்கக் கூடிய முழுமையான இளமையின் கனிவில் நிற்கிறான் அவன். அவனுடைய சுந்தர மணித் தோள்களிலும், பரந்த பொன் நிற மார்பிலும், ஏறுபோன்ற நடையிலும், எடுப்பான பார்வையிலும், மெல்லியலார் சொல்லிப் புகழுகிற இளநலம் மலரும் பருவம் இது. இந்தப் பருவத்தில் இன்று அவனுக்கு ஏற்பட்ட ஆசையோ விசித்திரமானதா யிருந்தது. இலக்கண இலக்கியங்களையும், மகா காவியங்களையும், மிகப் பெரிய ஞான நூல்களையும், சமய சாத்திரங்களையும், தத்துவங்களையும் முற்றிலும் முறையாகக் குறைவின்றிக் கற்று, காலையில் இந்திர விகாரத்தில் சந்தித்த துறவியைப்போல் ஞான வீரனாக நிமிர்ந்து நிற்க வேண்டுமென்னும் ஏக்கம் அவன் மனத்தில் ஏற்பட்டிருந்தது. வெறும் ஏக்கமாகத் தோன்றிய இது அவன் வாழ்க்கையின் புதிய திசையில் பிறந்த புது வழியாகவும் அமையும் போலிருந்தது. உடம்பை வல்லமையாகவும், வனப்பாகவும் வளர்த்ததைப் போலவே மனத்தையும் வளர்க்க ஆசைப்பட்டான் அவன். 'சோற்றுக்கு இல்லாமையும், துணிக்கு இல்லாமையும், பெரிய ஏழ்மையல்ல; மெய்யான ஏழ்மை அறிவின்மைதான் மெய்யான செல்வம் அறிவுடைமைதான்' என்ற புதிய உணர்வு என்றுமில்லாமல் இன்று தன் மனத்தில் ஆழ்ந்து தோன்றுவதற்குக் காரணமென்ன என்பது இளங்குமரனுக்கே பெரும் புதிரா யிருந்தது.

இந்திர விகாரத்தில் அந்தத் துறவியைச் சந்தித்து அவரோடு வம்புக்குப் போக நேர்ந்திராவிட்டால் இப்படியொரு தவிப்பைத் தான் உணர இடமில்லாமற் போயிருக்குமோ என்று சிந்தித்தான் அவன். அந்தச் சிந்தனையின்போது தன் வாழ்வில் மலர்வதற்கிருந்த அல்லது மலரவேண்டிய ஓர் அழகிய பருவத்துக்குத் தூண்டுதல்போலவே இந்திரவிகாரத்துத் துறவியின் சந்திப்பு வாய்த்திருக்க வேண்டும் என்ற எண்ணம் அவன் மனத்தில் உறுதிப் பட்டது.

மனம் சென்ற போக்கில் சிந்தித்தவாறே கால்கள் சென்ற போக்கில் சுற்றிவிட்டு அவன் படைக்கலச் சாலையை அடைந்தபோது நேரம் நண்பகலுக்கு மேல் ஆகியிருந்தது. நீலநாக மறவர் திருநாங்கூரிலிருந்து திரும்பி வந்திருந்தார். ஆனால் மீண்டும் எங்கோ புறப்படுவதற்குச் சித்தமா யிருக்கிறார் என்பதற்கு அடையாளமாக வாயிற்புறத்தில் அவருடைய தேர் குதிரைகள் பூட்டப்பெற்றுப் பயணத்துக்குரிய நிலையில் நின்று கொண்டிருந்தது. வழியனுப்புவதற்கு நிற்பதுபோல் மாணவர்களும் சூழ்ந்து நின்றுகொண் டிருந்தார்கள். களைப்புத் தீர நன்றாக நீராடித் தூய்மை பெற்றபின் உண்பதற்காகப் படைக்கலச் சாலையின் உணவுக் கூடத்துக்குப் புறப்பட்டுக் கொண்டிருந்த இளங்குமரனை நீலநாக மறவர் உடனே கூப்பிடுவதாக ஒரு பணியாள் வந்து தெரிவித்தான். வயிற்றில் மிகுந்த பசியாயிருந்தாலும், அவரைச் சந்தித்து விட்டுப் பின்பு உண்ணச் செல்லலாமென்று அந்தப் பணியாளுடன் சென்றான் இளங்குமரன்.

"உன்னை எதிர்பார்த்துத்தான் காலையிலிருந்து காத்துக் கொண்டிருக்கிறேன், இளங்குமரா! நேற்றிரவுதான் திருநாங்கூரிலிருந்து திரும்பினேன். மறுபடியும் இப்போது திருநாங்கூருக்கே புறப்படுகிறேன். நீயும் என்னுடன் அங்கே வர வேண்டும். நாங்கூர் அடிகள் உன்னைச்

காண்பதற்கு ஆவலோடிருக்கிறார். உடனே புறப்படலாம் அல்லவா?'' என்று நீலநாகமறவர் கேட்டபோது, ''நான் இன்னும் உண்ணவில்லை'' என்பதைச் சொல்வதற்குக் கூசிக்கொண்டு ''புறப்படலாம், ஐயா! நானும் வருகிறேன்'' என்று கூறி உடனே இணங்கினான் இளங்குமரன்.

நீலநாக மறவர் தேரில் ஏறுவதற்கு முன் தேர்த்தட்டின் படியில் ஒரு காலும், தரையில் ஒருகாலுமாக நின்றுகொண்டு, மீண்டும் இளங்குமரனிடம் கூறினார்:-

''தம்பி! சோழ நாட்டிலேயே சான்றாண்மை மிக்கவரும், பெரிய ஞானியுமாகிய அடிகளின் அருள் நோக்கு உன் பக்கம் திரும்பியிருக்கிறது. முக்காலமும் உணரவல்ல அருமை சான்ற பெரியவர்களுடைய அன்பும் ஆதரவும் வலுவில் ஒருவனைத் தேடிக்கொண்டு வருவது பெரும் பாக்கியம். அந்தப் பாக்கியம் இப்போது உனக்குக் கிடைக்க இருக்கிறது! நன்றாகப் பயன்படுத்திக் கொள்வது உன் பொறுப்பு.''

நாத் தழுதழுக்க அவர் இவ்வாறு கூறியதைக் கேட்டபோது இளங்குமரனுக்கு என்ன காரணத்தாலோ மெய் சிலிர்த்தது. அவரை உள்ளே அமரச் செய்து தேரை அவனே செலுத்திக் கொண்டு சென்றான். தேர் புற வீதிக்குள் நுழைந்து வளநாடுடையார் இல்லத்தைக் கடந்தபோது வாயிலில் நின்று கொண்டிருந்த முல்லை கையை உயரத் தூக்கி ஏதோ சொல்லிக் கூப்பிட்டதை இளங்குமரன் கவனித்தும் அவளுக்காகத் தேரை நிறுத்தவில்லை. அதேபோல் நாளங்காடியின் திருப்பத்தில் எதிரே மிக அருகில் வந்த மற்றொரு தேரில் சுரமஞ்சரியும், வானவல்லியும், வசந்தமாலையும் அமர்ந்திருந்ததைக் கண்டும் அவன் தன் தேரை நிறுத்தவில்லை. ஆனாலும் அந்த விநாடியில் தேர்களின் வேகத்தையும் மீறிச் சுரமஞ்சரியின் முகத்தில் தன்னைப் பார்த்ததால் ஏற்பட்ட சிறிது மலர்ச்சியை அவன் கவனிக்கும்படி நேர்ந்தது. காலையில் துறைமுகத்தில் தன்னிடம் கோபித்துக் கொண்டு பிணங்கி ஓடியபோது அவள் இருந்த நிலையையும், இப்போது எதிரே தேரில் சந்தித்தபோது இருந்த நிலையையும் ஒப்பிட்டு நினைத்தான் இளங்குமரன். மிகவும் அழகிய பெண்களின் மனத்துக்கு அழகைப் போலவே பலவீனங்களும் மிகுதி என்று தோன்றியது அவனுக்கு. தேர் காவிரிப்பூம் பட்டினத்தின் அழகிய பகுதிகளை ஒவ்வொன்றாகக் கடந்து திருநாங்கூரின் மரங்களடர்ந்த சாலைக்குள்

புகுந்தது. திருநாங்கூருக்குச் செல்லும் வழியில் இளங்குமரனுக்குப் பல அறிவுரைகளைக் கூறிக் கொண்டு வந்தார் நீலநாகமறவர். நாங்கூர் அடிகள் என்ன நோக்கத்தோடு இளங்குமரனை அழைத்திருக்கக் கூடும் என்பதையும் விளக்கிக் கூறினார். இளங்குமரனுக்கு அவற்றைக் கேட்டு மிகவும் பூரிப்பு உண்டாயிற்று. "ஐயா! ஊழ்வினை என்பது ஒரு மனிதனுடைய வாழ்க்கையின் நிகழ்ச்சிகளை எத்துணைத் தொடர்பாகக் கோவைப் படுத்துகிறது, பார்த்தீர்களா? இன்று காலையில்தான் எனக்கே ஞான நூல்களைக் கற்கவேண்டு மென்ற தீராப் பசி எழுந்தது. உடனே யாரோ சொல்லி வைத்ததுபோல் நீங்கள் என்னைத் திருநாங்கூருக்கு அழைத்தீர்கள். எல்லாம் எவ்வளவு இயைபாகப் பொருந்தி வருகின்றன; பாருங்கள்!" என்று நன்றியோடு அவரிடம் கூறினான் இளங்குமரன். இந்திரவிகாரத்துத் துறவியிடம் அவமானப்பட்டதையும் மறைக்காமல் அவரிடம் சொல்லி விட்டான் அவன்.

"இதை யெல்லாம் அவமானமாக நினைக்கலாகாது தம்பீ! நோயும், மூப்பும், மரணமுமாக, உலகில் மனிதர்கள் நிரந்தரமாய் அடைந்து கொண்டிருக்கிற அவமான இருளில்தான் புத்தஞாயிறு பிறந்து ஒளி பரப்பியது" என்று அவர் மறுமொழி கூறினார்.

அவர்களுடைய தேர் நாங்கூர் அடிகளின் பூம்பொழிலை அடைந்தபோது, தற்செயலாக நிற்பவர்போல் நாங்கூர் அடிகளே வாயிலில் நின்று கொண்டிருந்தார்.

ஆயிரம் கதிர் விரிக்கும் ஞாயிற்றொளி அலைகடற் கோடியில் மேலெழுவதுபோல் அலர்ந்திருந்த அடிகளின் முகத்தைப் பார்த்தபோது இளங் குமரனின் உள்ளத்தில் பணிவு குழைந்தது. அவருடைய பாதங்களில் வீழ்ந்து வணங்கினான். நீலநாகமறவரும் வணங்கினார். அடிகளின் கண்கள் இளங் குமரனையே பார்த்துக் கொண்டிருந்தன.

சிறிது நேர அமைதிக்குப் பின் "நீ மிகவும் பசித்துக் களைத்துப் போயிருக்கிறாய்" என்று இளங்குமரனைநோக்கிச் சிரித்தவாறே கூறினார் நாங்கூர் அடிகள். அவருடைய சிரிப்பில் எதிரே இருப்பவர்களின் அகங்காரத்தை அழித்துவிடும் ஆற்றல் இருப்பதை இளங்குமரன் உணர்ந்தான்.

"இவன் பசித்திருப்பது மெய்தான்! ஆனால் அந்தப் பசி சோற்றினாலும், நீரினாலும் தீராத பசி. ஞானப் பசி. நீங்கள் தான் அந்தப் பசியைத் தீர்த்தருள வேண்டும்" என்றார் நீலநாகமறவர். அடிகள் முகம் மலர நகைத்தார். பின்பு மெல்லக் கேட்டார்: "பசி தீர்க்கிறவர்களுக்கு இந்தப் பிள்ளை என்ன விலை கொடுப்பானோ?"

"மனம் நிறைய அறியாமையையும், ஆணவத்தையும் தவிரக் கொடுப்பதற்கு வேறொன்றும் நான் கொண்டு வர வில்லையே ஐயா!" என்று அவர் முகத்தை ஏறிட்டுப் பார்த்துக் கொண்டே பதில் கூறினான் இளங்குமரன். அப்போது அவன் கண்களில் நீர் நெகிழ்ந்தது. அழுகிறாற்போல் குரல் நைந்து ஒலித்தது.


அடிகள் இளங்குமரனுக்கு அருகில் வந்து அவனைத் தழுவிக் கொண்டார்.

"நீ வேறு ஒன்றும் விலை தர வேண்டாம். உன்னையே எனக்குக் கொடு. என்னுடைய ஞானத்தைப் பயிர்செய்யும் விளைநிலமாக நீ இரு. அதுவே போதும்."

"என் பாக்கியம்" என்று கூறியவாறே மீண்டும் அவர் பாதங்களில் வீழ்ந்து வணங்கினான் இளங்குமரன்.

"இந்தப் பாதங்களை நன்றாகப் பற்றிக் கொள். இவற்றை விட்டுவிடாதே. உன் அறியாமையும், ஆணவமும் இவற்றின் கீழ்த்தாமே கரைந்துபோகும்" என்று கூறிவிட்டுத் தேரில் ஏறினார் நீலநாகமறவர். மறுகணம் அவருடைய தேர் திரும்பி விரைந்தது. நாங்கூர் அடிகள் இளங்குமரனின் கைகளைப் பற்றிக் கொண்டார். மகிழ்ச்சியோடு அவனிடம் கூறலானார்: "என்னுடைய மனத்தில் உதயமாகும் காவியம் ஒன்றிற்கு நாயகனாவதற்கு முழுமையான மனிதன் ஒருவனை நான் தேடிக் கொண்டிருந்தேன். அவன் இன்று எனக்குக் கிடைத்து விட்டான்! அந்தக் காவியம் உருவாகஇனித் தடையில்லை."





நீங்கள் அறிய மகிழ்ச்சியடைவீர்கள்....

2 புதிய


நேஷனல் எக்கோ

ரேடியோக்கள்

உங்களுக்கு இணையிலா இசை இன்பத்தை அளிக்கும்

இதோ இரு நேர்த்தியான புதிய ரேடியோக்கள் ... நேஷனல்-எக்கோவினால் மிகச் சிறந்த முறையில் தயாரிக்கப்பட்ட இந்த ரேடியோக்கள் உங்களுக்கு இனிய இசை விருந்தளிக்கும் ... ஒன்று மின்சார சக்தியால் இயங்குகிறது, மற்றொன்று பாட்டரியினால் இயங்குகிறது. இவ்விரண்டும் அழகான வினியர் காபினெட்கள் கொண்டவை ... ஹை-பை லௌட் ஸ்பீக்கர்களும், கவர்ச்சியான டயல்களும் கூடியவை ... தொனியை தத்ரூபமாக அளிப்பவை! மேலும் இவைகள் முற்றிலும் மான்ஸுனைஸ் செய்யப்பட்டவை!

இன்றே உங்கள் அருகாமையிலுள்ள நேஷனல்-எக்கோ ரேடியோ டீலரிடம் இவைகளை இலவசமாக இயக்கிக் காண்பிக்கச் சொல்லுங்கள்!



மாடல் U-755:
ஏஸி/டிஸி மின்சார சக்தி கொண்டு இயங்குகிறது. 6-வால்வுகள், 3 பாண்டுகள். டோன் கன்ட்ரோல். விலை ரூ. 325.00. எக்ஸைஸ் மற்றும் உள்ளூர் வரிகள் தனி.

மாடல் B-755:
பாட்டரியினால் இயங்குகிறது. 5 வால்வுகள், 3 பாண்டுகள். டோன் கன்ட்ரோல். பாட்டரி மிகக் குறைவாக செலவாகிறது. விலை: ரூ. 325.00. எக்ஸைஸ் மற்றும் உள்ளூர் வரிகள் தனி.

நேஷனல்-எக்கோ
ரேடியோக்கள் சிறந்தவை—
அவைகள் மான்ஸுனைஸ்
செய்யப்பட்டவை!

ஜெனரல் ரேடியோ அண்ட் அப்ளையென்ஸஸ் லிமிடெட்
பம்பாய் • கல்கத்தா • மதராஸ் • டில்லி
பாட்னு • பெங்களூர் • ஸெகந்திராபாத்

GRA-2259 (a)

கால்கேட் பேபி பவுடர்



குழந்தைகளின் சருமத்திற்கு அதிக சுகமூட்டுகிறது!

சிறந்த வாசனையோடு இதமளிக்கிறது என்று பல ஆயிரக்கணக்கான தாய்மார்களால் புகழப்படுவது !

'அனஸின்'

நான்கு மருந்துகள் அடங்கியுள்ளதால்

வலி நிவாரணத்திற்கு மிகச் சிறந்தது

1. 'அனஸின்' அதிவிரைவில் வலிகளுக்கு சமனமூட்டுகிறது. ஒரு டாக்டர் குறித்துக் கொடுக்கும் பாதுகாப்பான மருந்துக்கு ஒப்பாக இதில் விஞ்ஞான முறையில் நான்கு மருந்துகள் ஒன்று கலந்துள்ளதால் 'அனஸின்' — தலைவலி, ஜலதோஷம், ஜுரம், பல்வலி, தசைவலி ஆகியவற்றிலிருந்து அதி விரைவில் பூரண நிவாரணம் அளிக்கிறது.

2. 'அனஸின்' பதட்டத்தைப் போக்கி சமனமளிக்கிறது. அமைதியிழந்து பதட்டப்படும் வேதனையை அடியோடு அகற்றி இதமுடன் இளைப்பாறிய பலனை உங்களுக்கு அளிப்பது 'அனஸின்'.

3. 'அனஸின்' சோர்வை விரட்டுகிறது. வலிகளுடன் அடிக்கடி தோன்றும் சோர்வை வென்றுவிடுவது 'அனஸின்'

4. 'அனஸின்' ஜுரத்தைத் தணிக்கிறது. 'அனஸினில்' கொயினா கலந்திருப்பதால், ஜுர வேகத்தைக் கட்டுப்படுத்த மிகவும் சிறந்ததாக இருக்கிறது

★ இரட்டை வில்லைகளாக செல்லோ பேன் தாள்களுள் சுகாதார முறையில் அடக்கமிடப்பட்டும், குடும்ப உபயோகத்திற்காக 32 வில்லைகளாக, மோசடிக்கு இடங்கொடாதவாறு சீசாக்களில் அடக்கமிடப்பட்டும் கிடைக்கின்றன.



Registered User: GEOFFREY MANNERS & CO. LIMITED

TAM. 2-44 (A)



அபாய அறிவிப்பு !

"வீடுகள் இல்லாத திறந்தவெளியிலே மோட்டார் ஓட்டக் கற்றுக் கொள்ளுங்கள் ! இல்லாவிட்டால் வீடுகள் உள்ள தெருக்கள் எல்லாம் திறந்த வெளிகளாகி விடும் !"

★

இஸ்திரி தர்மம் !

"நெருப்பில்லாமல் புகையுமா ? ஏன்



புகையாது ? நாங்கள் வீட்டிலே துணிகளுக்கு இஸ்திரி போடும்போது வந்து பாருங்கள் !"

★

விகாரிசனம் !

"பேபி கோகிலா ஆடியது நன்றாகவே இருந்தது. ஆனால் மேடை ஓரத்தில் அவள் அம்மா சொல்படி அவள் அப்பா ஆடிக்கொண்டிருந்தது இன்னும் நன்றாக இருந்தது."

கோட்டுமுரசே !



"பரீட்சையிலே கோட் அடித்திருக்கிறாயே ! உங்கப்பா கிட்டே சொல்றேன். என்ன பண்றார் அவர் ...?"

"அவர் கோட்டு வாத்தியம் வித்துவான், சார் !"

★

இனமதேயர் !

"காணோம் : என் மைத்துனன் கப்புவை ஒரு வாரமாகக் காணோம் ! அவனைக் கண்டு பிடித்து ஆயிரம் மைல்களுக்கப்பால் கண் காணாத பிரதேசத்தில் கொண்டு போய் விட்டு வருபவர்களுக்கு நூறு ரூபாய் இனாம் !"

கலியாணப் பரிசு !

"என் கலியாணத்துக்கு வந்திருந்தவர்களுக்கெல்லாம் இதன் மூலம் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன் ; ஒவ்வொருவருக்கும் தனியே எழுத இயலவில்லை, என் சம்பளப் பணமெல்லாம் மனைவியிடம் போய் விட்டதால் !"

★

ஆணியாயம் !



"சார் ! உங்க வீட்டுக்குள்ளே வரலாமா?"

"எதுக்கு?"

"எங்க வீட்டுச் சுவரிலே அடிச்ச ஆணியைக் கொஞ்சம் பிடுங்கணும் ; அது உங்கவீட்டுச் சுவரிலே..."

★

விண்ணப்பம் !

"அம்மணி ! 'சமைப்பது எப்படி' என்ற தங்கள் புத்தகத்தை என் மனைவி உபயோகித்து வருகிறாள். தயவுசெய்து அதைச் 'சாப்பிடுவது எப்படி' என்றும் ஒரு புத்தகம் தாங்களே போடுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

அன்புள்ள

வலிகண்டசாமி."

★

நாள்மாறுட்டம் !

ஓட்டல் முதலாளி : நாளுக்கு நாள் உலகம் எப்படி மாறிண்டு வர்றது, பார்த்தீர்களா ?

நண்பர் : அதென்னவோ தெரியாது. உங்க ஓட்டல் பட்சணம் மட்டும் நேற்று இருந்ததேதான் இன்னிக்கும் இருக்கு !

★

அரியதுகேட்கின் !



ஆயுள் இன்ஷூரன்ஸ் ஏஜெண்ட் : உனக்குப் பின் உன் குடும்பம் கஷ்டப்படாமல் இருக்க நீ அவர்களுக்காக ஏதாவது எழுதி வைக்க வேண்டாமா ?

ஆள் : அதெப்படிங்க முடியும் ? எனக்குத்தான் எழுதவே தெரியாதுங்களே !

★

பாதி பக்தி !

"என்னப்பா ! 'இன்டர்வல்'லியே எழுந்து வந்திட்டியே, சினிமாவிலேயிருந்து ? ஏன் ?"

"'இன்டர்வல்'லின் போது 'இன்று போய் நாளை வா'ன்னு ஒரு ரிக்கார்டு வச்சாங்களே?"

— எஸ் விஜயலக்ஷ்மி

புது வருட சினிமாப் பஞ்சாங்கம்

பெயர்ப் பலன்

மெல்லினத்தின் ஓசையை ஆதாரமாகக் கொண்டு விளங்கும் இந்தப் பிலவ வருஷத்தில் மெல்லிடையார்களுக்கு நல்ல பலன்கள் காணப்படுகின்றன. ரேடியோ சங்கீதத்தில் மெல்லிசைப் பகுதிக்கு அதிக வரவேற்பு இருக்கும்.

இவ்வருஷம்

ராஜா : நட்சத்திர நடிகர் கத்தப்பா
மந்திரி : மன்னார்சாமி
சேனாதிபதி : நாராயணன் நாயர்
ரசாதிபதி : நட்சத்திர நடிகை பாமினி
மேகாதிபதி : ராஜப்பா

தமிழ்நாட்டின் பல பாகங்களிலும் உற்பத்தியாகிப் பண மேகம் கோடம்பாக்கம் பக்கமாக வந்து எழுபது யோசனை விஸ்தீரணமும் எண்பது யோசனை உயரமும் உள்ள மரக்காலில் முக்குறுணி மழை பெய்யும். அதில்,

எழுபது பங்கு — பிளாக் மணி
இருபதுபங்கு-தரகர்கள்
பத்து பங்கு — உழைப்பாளிகள்
பெறுவார்கள்.

பொதுப் பலன் : பண வறட்சி, தியேட்டர் பஞ்சம்.

மகர சங்கராந்தி பலன்

மகர சங்கராந்தி தேவதை, முப்பது வயதுக்கு மேலானாலும் பதினெட்டு வயது யுவதியாக, மையிட்ட கண்ணும், லிப்ஸ்டிக் பூசிய அதரமும், குடை மிளகாய் போன்ற மூக்கும், செயற்கைப் புருவமும், பளிச்சிடும் கேசமும் அலங்கரிக்க மைதா மாவை அள்ளிப் பூசினாற் போன்ற நிறத்துடன் ஐந்தடி உயரமும் நூற்றி இருபது பவுண்டு சரீரத்துடனும் நைலான் புடவை சுற்றித் தலையில் ஒரு சுமை கனகாம்பரத்துடன் சந்தன சோப்பு தேய்த்துக் குளித்த வாசனையுடன் வருகிறாள். பெயர் கலிகாமினி. வாகனம் புது மாடல் கார்.



பலன்

நாமதேயம் கலிகாமினி என்றிருப்பதால் அவள் எல்லோரையும் ஆட்டி அடக்கக்கூடியவளாக இருக்கிறாள். ஆகவே ஆடவர்கள் இவ்வருடம் வீடுகளில் மனைவி கைப்பொம்மையாகத்தான் இருப்பார்கள். குறிப்பாக, திரை உலகில் நடு வயதை அடைந்த நட்சத்திரங்களுக்கு மீண்டும் யௌவனம் திரும்பாவிட்டாலும் புகழும் கீர்த்தியும் கிடைக்கும். அவர்களுடன் நடிக்கும் ஆண் நடிகர்கள் பின்னணிக்குத் தள்ளப்படுவார்கள்.

ஸ்நானம் சந்தன சோப்பைக் கொண்டு நடந்திருப்பதால் நட்சத்திரங்கள் எத்தனைதான் சந்தனக் கட்டையாகத் தேய்ந்து உருக்கமாக நடித்தாலும் விமர்சகர்கள் கருணை காட்ட மாட்டார்கள்.

வஸ்திரம் நைலானாக இருப்பதால் ஸ்திரீ நட்சத்திரங்களின் அபிலாஷைகள், ஆசாபாசங்கள் வெளிப்படையாகவே தெரியும். இதனால் அவர்கள் குடும்ப வட்டத்திலோ, நண்பர்கள் வட்டத்திலோ பொறாமை உணர்ச்சி மேலோங்கி நிற்கும்.

புருவம் செயற்கையாக இருப்பதால், அவர்கள் நடிப்பும் செயற்கையாக இருக்கும். பல காட்சிகள் பல தடவைகள் ரீ-டேக் எடுக்கப்பட்டும் பலன் அளிக்காமல் போகலாம்!

கனகாம்பரப் பூ வாசனையற்ற தன்மையைக் குறிப்பதால் இவர்கள் நடித்து வெளிவரும் பல படங்கள் பண வாசனையைப் பெறாமலே தியேட்டரை விட்டு வெளியே ஓடிவிடும்.

ஆபரணம் கவரிங் நகைகளாகவே இருப்பதால் இந்தச் சினிமா நட்சத்திரங்கள் தங்கள் மேக்அப்பையே முழுதும் நம்பி வாழவேண்டியவர்களாக இருப்பார்கள்.

வாகனம் புது மாடல் மோட்டாராக இருப்பதால் வேகம் ஜாஸ்தி. சினிமா நடிகர்களுக்கு வேகமாக வரும் புகழ் வேகமாகப் போய்விடவும் ஹேதுவாகிறது.

மேஷ சங்கராந்தி பலன்

சூரியன் மகர ராசியில் பிரவேசிப்பதால் பல பழைய நட்சத்திரங்கள் அஞ்ஞாத வாசத்தை மேற்கொள்ள நேரிடும்.

ஜேஷ்ட பலன்

இன்கம்டாக்ஸ் பயம் அதிகமாகும்.

ஆஷாட பலன்

குழந்தை நட்சத்திரங்கள் தோற்றம். அதிகப்படியான குழந்தைக் கதைகளைக் குழந்தைத்தனமாக வெளியிட்டுப் பண வருவில்லாமல் தயாரிப்பாளர்கள் 'குவா குவா' வென்று கத்துவார்கள்!

கலி லட்சண பலன்கள்


கலி கல்கத்தா மெயிலில் அடிக்கடி பிரயாணம் செய்வதால் வங்க நாட்டிலிருந்து தமிழ்ப் படங்களுக்கான மூலக் கதைகள் அதிகம் இறக்குமதி செய்யப்படும்.

பஞ்சாங்க சிரவண பலன்

வருஷ ஆரம்ப காலத்தில் இந்தப் பஞ்சாங்கத்தை ஒரு சினிமாக் கொட்டகையில் அமர்ந்து இடைவேளையில் படிப்பவர்கள், எதிர்பாராத விதமாக, தாங்கள் பார்த்துக் கொண்டிருக்கும் தமிழ்ப் படங்களில் கடைசிக் காட்சிகள் 'போர'டிக்காமல் விறுவிறுப்பாக ஓடி முடிந்து அளிக்கும் இன்பத்தைப் பெறுவார்கள்!

— **கோமதி சுவாமிநாதன்**


அவளுக்கு ஏன் சாப்பிட்டோம் என்றே தோன்றிற்று...
கல்யாணச் சாப்பாடு பிரமாதம்!
ஆனால் வலுவான சாப்பாடு என் வயிற்றை கெடுத்து விட்டது
கவலைப்படாதே. ஈனோ சாப்பிட்டால் சீக்கிரம் சரியாய் விடும்
மறுநாள் காலை
நேற்று ஈனோ சாப்பிட்டதும் வயிற்றுக் கோளாறு பறந்து போய் விட்டது. இப்பொழுது என்ன புத்துணர்ச்சி!
ஒரு தேக்கரண்டி ஈனோ ஒரு டம்ளர் ஜலத்தில் போட்டால் உடனே பொங்கி கரைந்து நேர்த்தியான, புத்துணர்ச்சியளிக்கும் பானமாக மாறும். தனதனக்கும் ஈனோ 'ப்ரூட் ஸால்ட்' இதத்தையளித்து சமன மூட்டசகூடியது. வயிற்று கோளாறுகளிலிருந்து உடனடியாக நீடித்த நிவாரணமளிக்கிறது. ஜீரணசக்தியை சரியாக்குகிறது.
ENO
SPARKLING ANTACID
'FRUIT SALT'
ஈனோ சீக்கிரத்தில் அவளுக்கு குணமளித்தது
ஈனோ
'ப்ரூட் ஸால்ட்'
ஈனோ 'ப்ரூட் ஸால்ட்', என்ற வார்த்தைகள் ரெஜிஸ்டர்ட் ட்ரேட் மார்க்குகள்
பீச்சம் (இந்தியா) பிரைவேட் லிமிடெட்
JWT-ENO-1043



அம்மணியுடைய ஆசை நிறைவேற வழியிருப்பதாகவே தெரியவில்லை அவளைக் கொடுத்து வைக்காதவள் என்றுதான் சொல்ல வேண்டும். ஏனென்றால், அவள் அப்படி ஒன்றும் எளிதில் நிறைவேறக் கூடாததாக, மனக்கோட்டை கட்டிவிடவில்லை. அவள் ஆசை சின்னஞ் சிறு ஆசைதான்.

"அம்மணி, காப்பி!"

தன் கணவன் பத்திரிகை படிக்கும்போது, தான் அவன்முன் ஆவி பறக்கும் பேஷான காப்பியுடன் நிற்க வேண்டும்; அவன் அழகிய கண்ணோட்டத்தைத் தன் மேல் செலுத்தியபடி அதை வாங்கிக் கொண்டு புன்னகை புரிய வேண்டும்; பதிலுக்குத் தானும் ஒரு மென்னகையை உதிர்க்க வேண்டும் — இதுதான் அவள் ஆசை.

கதைகளிலெல்லாம் இப்படி வருவதைப் படித்துப் படித்து, தன் வீட்டிலும் அப்படி நடக்க வேண்டுமென்று விரும்பினாள் அவள்.

அந்த அல்ப ஆசை பலிதமாவதாகக் காணோம்! இத்தனைக்கும் அவள் கணவன் பேப்பர் படிப்பவன் காப்பியும் குடிப்பவன்தான்; அவன் கண்வீச்சு அவளை வசீகரிக்கும் சக்தியுள்ளதுதான். அப்படியிருந்தும், அவளுடைய இந்த அல்ப ஆசை ஏன் நிறைவேறக்கூடாது? எல்லாம் போக, அவர்கள் வீட்டுக் காப்பி பேஷாக இல்லை என்றோ அதில் ஆவி பறக்காது என்றோ யாரும் நாக்கில் பல்லைப் போட்டுச் சொல்லிவிட முடியுமா என்ன? ஆகவே அதையும் ஒரு காரணமாக முடியவே முடியாது. அப்படியெல்லாம் யாராவது சொல்லப் போனால் அப்புறம் சொல்பவர்கள் பாடு அந்தச் சம்பந்தம் பாடு. 'அது யார் சம்பந்தம், அவனுக்கும் நமக்கும் என்ன சம்பந்தம்?' என விலகிவிட முடியாது. ஏனென்றால், அவன்தான் அந்த வீட்டில் காப்பி போடுபவன் பேஷான ஆவி பறக்கும் காப்பியாகத் தயாரிப்பவன்.



பொறுப்புணர்ச்சி ரொம்பவும் அதிகம் சம்பந்தத்துக்கு. பால்காரன் வருவதற்குக் கால்மணி முன்பே, வீட்டுக்கார அம்மணி எழுந்திருப்பதற்கு அரை மணி முன்பே, அவன் விழித்து எழுவான்.

அம்மணி பல் தேய்த்து விட்டுச் சமையற்கட்டில் பிரவேசிக்கும்போது.... அங்கு பால் கொதித்துக் கொண்டிருக்கும். டிகாக்ஷனெல்லாம் பால்காரன் வருமுன்பே போட்டு வைத்தாயிற்று! பொழுதை வீணடிக்காமல் கறிகாய் நறுக்கிக் கொண்டிருக்கிறான் சம்பந்தம்.

வீட்டுக்கார அம்மணியைக் கண்டதும், சம்பந்தம் அலறிப் புடைத்துக் கொண்டு எழுந்திருக்கிறான். மின்னல் வேகத்தில் காரியங்களைக் கவனிக்கிறான். டிகாக்ஷனில் பாலைக் கலந்து, சர்க்கரை போட்டு, ஆவி பறக்கிற அந்தக் காப்பியை 'சர்' 'சர்' என்று ஆற்றி அவள்முன் வைக்கிறான். அத்தனை வேகமாக ஆற்றினாலும் அந்தச் செய்கையில் விநயம், பவ்யம், பணிவு, அடக்கம் எல்லாமே மிளிர்கின்றனவே!

"இன்னும் கொஞ்சம் சர்க்கரை போடவா, அம்மணி? சொட்டு டிகாக்ஷன் விடவா?" என்றெல்லாம் என்னமாகக் குழைந்து குழைந்து பேசுகிறான்!

அவையொன்றும் அவளுக்குத் தேவைப்படுவதில்லை. காரணம் அந்த ஆவி பறக்கும் காப்பி பேஷான காப்பியாகவும் இருப்பதுதான். எனவே அவள் அப்படியே பருகி விடுவாள். அப்புறம் வழக்கம்போல் முகத்தில் கேள்விக்குறியுடன் அவனைப் பார்ப்பாள்.

அது தினப்படி கேள்விதான் என்றால், அவனும் என்றும்போலவே அல்லவா பதிலளிக்கிறான் "ஆச்சு, நான் சாப்பிட்டாச்சு, அம்மணி!"

என்ன துணிச்சல்? அவளுக்கு முன்பாகவே, தனக்கென்று தனியாகச் சிறிது பாலைக் காய்ச்சி, முதலில் இறங்கிய டிகாக்ஷனில் விட்டுக் குடித்திருக்கிறான்!

அம்மணிக்கு ஆத்திரம் உண்டாவதில் ஆச்சரியம் என்ன? அதற்கு இன்னொரு காரணமும் உண்டு என்பதை அறிந்தால் அவள் கோபம் ரொம்பவும் நியாயம் என்பீர்கள்!

அவளுடைய நீண்ட நாளைய விருப்பப்படி, கணவன் பேப்பர் படிக்கும்போது அவனிடம் அவளே காப்பியைக்கொண்டு போய் வைப்பதற்கில்லாமல், எத்தனை கடிந்து கொண்டாலும், ஒரு கால்மணி பொறுத்துக் கொள்ள முடியாதபடி அப்பேர்ப்பட்ட சபலம் என்னவோ அவள் கணவன் அந்தச்சம்பந்தத்துக்கு? -கண்பட்



தூரம், வெகு தூரம்!

டி. நமசிவாயம்


ஜல் ஜல் ஜல் ஜல்....!

சலங்கை பூட்டிய மாடுகள் மிடுக்கு நடை போட்டன. குலுங்கிக் குலுங்கிச் சென்று கொண்டிருந்த வண்டி தூரம்.. ரொம்ப தூரம்..... ரொம்ப ரொம்ப தூரம் போய்விட்டது.

சித்ரா கன்னத்தில் வழிந்து ஓடிய கண்ணீரைச் சுண்டி யெறிந்தாள். சின்னக் கண்களை அகல விரித்து மீண்டும் ஒரு முறை கூர்ந்து நோக்கினாள். குலுங்கிக் குலுங்கிச் சென்று கொண்டிருந்த வண்டியைப் புகை போலக் கவிந்து நின்ற புழுதிப் படலம் மறைத்துவிட்டிருந்தது.

சித்ராவின் இதயம் துடித்தது. கண்கள் நீரைக் கொட்டின.

அவன் போய் விட்டான், அவளை விட்டு விட்டு. ஜல் ஜல் என்று சதங்கை ஒலி கேட்க மாட்டு வண்டியில் ஏறி அவள் பார்வையிலிருந்து மறைந்து விட்டான்; கண்ணுக்கெட்டாத இடத்துக்குப் போய் விட்டான். அவனுடன் விளையாடுவதற்கு இனிமேல் யார் இருக்கிறார்கள்? "சித்ராக் கண்ணு!" என்று செல்லமாக



அவள்கன்னத்தில் கிள்ள, "போடி, மக்கு!" என்று கோபமாக அவள் தலையில் குட்ட, அவள் ஏதாவது தவறு செய்யும்போது, "இனிமேல் இப்படிச் செய்யமாட்டியே! செய்தால்..." என்று அவள் திருகி எச்சரிக்க உற்ற நண்பனாய் இனி யார் இருக்கிறார்கள்?

'முணுக்'கென்று கோபம் வந்துவிடும். "என் கூடப் பேசாதே, போ," என்று கத்துவான். ஒரே ஒரு நிமிஷம்தான்; அடுத்த நிமிஷம் பறந்து விடும் அந்தக் கோபம். அப்புறம் அவள் கையைப் பற்றிக்கொண்டு அவன் கெஞ்சுகிற கெஞ்சல்கள், அடடா!

"இனிமேல் அவனுடன் பேசவே கூடாது" என்றுதான் சில சமயங்களில் அவள் நினைப்பாள். ஆனால் அவளுடைய வைராக்கியமெல்லாம் தூள் தூளாகி, உறுதியெல்லாம் பொடிப் பொடியாகிப் பஞ்சாய்ப் பறந்து விடும், அவன் முகத்தைப் பார்த்தவுடனே.



யார் யாரிடமெல்லாமோ அவன் தன் கோபத்தின் கைவரிசையைக் காட்டியிருக்கிறான். அம்மாவிடம் கோபித்துக் கொண்டு பட்டினி கிடந்திருக்கிறான். அப்பாவிடம் கோபித்துக் கொண்டு உதை வாங்கியிருக்கிறான். ஆனால் இறுதி வெற்றி என்னவோ, அவனுக்குத்தான்.

ஆனால் அவளிடத்தில் மாத்திரம் அவன் ஜம்பம் சாய்வதில்லை. அவன் முகம் வாட அவன் மனம் பொறுப்பதில்லை. அவள் மனம் நோக அவன் நடப்பதில்லை.


அவன்தான் போகிறான் வண்டியில். அவள் முகத்தை வாடச் செய்துவிட்டு; அவள் மனத்தை நோகச் செய்துவிட்டு; அவளை வேதனையால் துடிக்கச் செய்துவிட்டு!

வண்டி இதுவரை எவ்வளவு தூரம் சென்றிருக்கும்? அவளால் சொல்ல முடியாது. ஆனால், தூரம்....ரொம்ப தூரம்...ரொம்ப ரொம்ப தூரம் போயிருக்கும்; போயும்விடும்!

"பாலு!" என்று அவள் உரக்கக் கூவினாள். அந்த அழைப்பு அவனுக்குக் கேட்கும் என்று அவள் நினைத்தாள். கேட்டிருந்தால் "சித்ரா!" என்று சொல்லிக் கொண்டே அவன் ஓடி வந்திருக்க மாட்டானா?

இனிமேல் எங்கே அவளைப் பற்றி அவன் நினைக்கப் போகிறான்? மறந்து விடுவான். அவளுடைய பெயர், அவளுடைய முகம், அவளுடன் விளையாடி மகிழ்ந்த இன்ப நாட்கள் எல்லாவற்றையும் அவன் மறந்தே போய் விடுவான்.

அவளும் அதுபோலவே மறந்து விடுவாளோ? அது எப்படி முடியும்? அழித்தெழுத முடியாத ஓவியம்போல், அவனுடைய நினைவுகள் அவளது இதயத்தின் அடித்தளத்தில் பதிந்து விட்டிருக்கும் பொழுது அவளால் எப்படி மறக்க முடியும்? உண்ணும்போதும், உறங்கும்போதும், படிக்கும்போதும், விளையாடும்போதும், கனவிலும், நனவிலும் அவன் முகம் தோன்றித் தோன்றி அவளுடன் பேசும், சிரிக்கும்; மறக்க நினைத்தாலும் அவளால் அவனை மறக்க முடியாது.



அம்மாள்:—அன்னதானம் செய்வதற்குப் பணம் வசூல் பண்ணுறேளே? அந்தக் கோடி வீட்டு மாமியைக் கேளுங்கள்; நிறையக் கொடுப்பாள். அவளுக்கு அன்னதானம் என்றால் ரொம்பப் பைத்தியம்!

வந்தவர்:—அதைச் சொல்லத்தான் வந்தோம்! அந்த அம்மாளுக்குப் பைத்தியம் தெளிந்து விட்டது...!

*

காலம் ஓடியது, வண்டிச் சக்கரமென. அன்றொருநாள் தூரத்தில் - ரொம்ப தூரத்தில் கேட்டுத் தேய்ந்த சதங்கை ஒலி.

ஜல் ஜல் ஜல்!

ஒருநாள் மீண்டும் அருகில் கேட்டது; காதைத் தீட்டிக்கொண்டு கேட்டாள்: அவளுக்குப் பிரியமான குரல்! விருப்பமான குரல்! அவள் கேட்டுக் கேட்டுப் பழகிப் போன குரல்! செவிகளின் வழியே உட்புகுந்து இதயத்தில் இன்பத்தைப் பாய்ச்சுகின்ற குரல்! "சித்ரா!"

ப்பிட்டுக் கொண்டிருந்தவள் பாதியிலேயே நிறுத்திவிட்டு வாசலுக்கு ஓடினாள். சிரித்துக் கொண்டே வண்டியிலிருந்து இறங்கியவன் பாலுதான். அவனுக்குப் பின்னால் இன்னொரு பெண்ணும் இறங்கினாள். அது யார்? சித்ராவுக்கு அவளைத் தெரியாது. அந்தப் புதியவளை அவள் இதுவரை பார்த்ததில்லை. பட்டுப் பாவாடையும் பட்டுச்சட்டையும் போட்டுக்கொண்டு, இரட்டைப் பின்னல்கள் ஊசலாட, கால்களில் பூட்ஸ்கள் ஒலியெழுப்ப, கழுத்தை வெட்டி வெட்டி நடந்து வரும் அந்தப் பெண்ணைப் போல் ஊரிலேயே யாரையும் பார்த்ததில்லை.

"சித்ரா!"

பாலுவின் இந்த அழைப்பு அவள் பார்வையைத் திருப்பியது. "என்னைத் தெரிகிறதா உனக்கு.....?"

அவள் தலையை ஆட்டினாள். "தெரிகிறது" என்று அதற்கு அர்த்தம். 'மறந்து விடவில்லை' என்று அதற்கு விளக்கம்.

ஒரு வருஷத்துக் கதையை யெல்லாம் பேசித் தீர்த்துவிட வேண்டும் என்ற வேகம் அவளுக்கு. உன்னைப் பாராமல், உன்னுடன் பேசாமல் எப்படித் தவித்துப் போனேன் என்று தன் வேதனையையெல்லாம் கொட்டித் தீர்த்துவிட வேண்டுமென்ற தாபம் அவளுக்கு. அவன் மாத்திரம் தனியாக இருந்தால் அதெல்லாம் சரிதான். நிழல்போல் அவனருகே இன்னொருத்தியும் ஒட்டிக் கொண்டிருக்கும்போது, அது சரிப்பட்டு வருமா?

'இவள் இந்திரா! என் மாமாவின் மகள். இவர்கள் வீட்டில் தங்கித்தான் நான் படித்துக் கொண்டிருக்கிறேன்."

"ஓஹோ!"

அந்த இந்திரா எத்தனை அவசரக் குடுக்கையாக இருந்தாள்! ஒரு நிமிஷம் அவனைச் சித்ராவுடன் பேசிக்கொண்டிருக்க விட்டால்தானே?

"பாலு, நேரமாகிறது. வீட்டுக்குப் போகலாம் வா!" என்று தொணதொணத்து விட்டாள். அதற்குப் பின்னும் சித்ராவுடன் பேசிக்கொண்டு நிற்கப் பாலுவுக்குப் பைத்தியமா என்ன? அந்த ராணி கைகளை வீசிக் கொண்டு தனக்கு நிகரில்லை என்பதுபோல் அலட்சியமாக நடக்க, இந்தப் பாலு அவளுக்குப் பின்னால் அடிமைபோல் செல்ல, அந்தக் காட்சியைப் பார்த்துக் கொண்டு நின்ற

சித்ராவுக்கு எரிச்சல் பற்றிக் கொண்டு வந்தது. பாலுவிடம் அவளுக்கு அனுதாபம்தான். அந்த இந்திராவோ, சந்திராவோ அவளிடம்தான் அவளுக்குக் கோபமெல்லாம். 'அவள்தான் என் பாலுவைக் கெடுத்து விட்டாள்!' அவள்தான் எனக்கும் அவனுக்கும் குறுக்கே நிற்கிறாள்!'

★

மறுநாள் அவர்கள் வெளியே உலாவச் சென்றார்கள்.

"என்ன சித்ரா, பேசவே மாட்டேன் என்கிறாயே!"

"என்ன பேச வேண்டும்...?"

"எதையாவது பேசேன். உன்னுடன் பேச வேண்டுமென்று தானே ஓடோடி வந்தேன்? ஆமாம், நான் போன பிறகு ஒருமுறையாவது என்னைப்பற்றி நீ நினைத்ததுண்டா? நான் சுகமாக இருக்கிறேனா, இல்லையா என்று ஒரு நாளாவது நீ கவலைப் பட்டதுண்டா? நான் ஒருமுறையாவது உன்னை நினைக்காத நாளே கிடையாது!"

"ஆயிரம் முறை உன்னை நினைத்தேன் பாலு! தினமும் நீ சுகமாக இருக்க வேண்டுமென்று கடவுளை வேண்டிக் கொண்டேன் பாலு!" என்று சொல்லத்தான் சித்ரா நினைத்தாள். ஆனால் அவள் உள்ளத்தில் கொதித்தெழுந்த உணர்ச்சி வெள்ளம் வார்த்தைகளாக வெளி வரத்தானில்லை.

இதற்குள், "போகலாமே" என்றெழுந்தாள் அவசரக் குடுக்கையான அந்த இந்திரா.

"ஏன்?"

"எனக்கு ஒன்றும் பிடிக்கவில்லை."

"இந்த ஆற்றங்கரை, இந்தத் தென்னந் தோப்பு இந்த மகிழமரம் எதுவுமே உனக்கு அழகாக இல்லையா? உன் மனத்துக்குப் பிடிக்கவில்லையா?"

"அழகாயிருக்கிறது என்பதற்காக எவ்வளவு நேரம்தான் பார்த்துக்கொண்டேயிருப்பது? வா. பாலு போவோம்."

அவள் அவனைப் பெயர் சொல்லிக் கூப்பிடுவது சித்ராவுக்குப் பிடிக்கவில்லை.

'பாலு, இப்பொழுதே போக வேண்டாம்: இன்னும் கொஞ்ச நேரம் பேசலாம்" என்று சொல்ல ஆசைதான் அவளுக்கு. அவன் கேட்பானோ, மாட்டானோ? அவன் கேட்பது கேட்காதது ஒருபுறம் இருக்கட்டும். அந்த ராங்கிக்காரி சண்டைக்கு வந்துவிட மாட்டாளா? அவளிடம் நமக்கு வம்பு எதற்கு?

முதலில் எழுந்தது சித்ராதான். முதலில் நடந்ததும் அவள்தான். அவள் இஷ்டப்படி எதுவும் நடக்காது. அந்த இந்திரா இருக்கும்வரை. அவள் அப்படி நடக்க விட மாட்டாள். அவள் பெரிய அகம்பாவக்காரி! 'பட்டணத்திலிருந்துவந்திருக்கிறோம்' என்ற கர்வம்! 'அவள் வீட்டில் தங்கித்தான் பாலு படித்துக் கொண்டிருக்கிறான். அதனால் தன் சொல்லைக் கேட்டுத்தான் ஆக வேண்டும்' என்ற பிடிவாதம்!

ஒரு மாதமும் ஒரு நிமிஷமாகக் கழிந்து விட்டது போலிருந்தது சித்ராவுக்கு. மனம் விட்டுப் பேச முடியவில்லை என்ற ஏக்கம்தான்; ஓடி விளையாடி, ஆடிப் பாடி மகிழ்ச்சியாக இருக்க முடியவில்லையே என்ற வருத்தம்தான். ஆனால் பாலுவின் அருகில் இருக்கிறோம் என்ற ஆறுதலே அவளுக்கு இதமாக இருந்தது.

பாலு புறப்பட வேண்டிய நாள் வந்தது.

வண்டி வாயிலில் நின்றது. வைத்த கண் வாங்காமல் அவளும் நின்றாள். பாலு ஏறி உட்கார்ந்ததும் சலங்கை பூட்டிய மாடுகள் முன்போல் மிடுக்கு நடை போட்டு நடக்கவில்லை. துள்ளிக் கொண்டு ஓடின. அவள் பார்வையிலிருந்து அவனை விரைவில் மறைத்து விட வேண்டுமென்று அவற்றுக்கு என்னதான் ஆத்திரமோ? போதாக் குறைக்கு வண்டியையும், அதற்குள்ளிருந்தவர்களையும் புழுதி வேறு மறைத்தது.

தூரம்...ரொம்பதூரம்...ரொம்ப ரொம்ப தூரம் வண்டி போய்விட்டது: சதங்கை ஒலியைக் காற்றில் தேய்த்துக்கொண்டு அவள் கண்களைக் குளமாக்கிவிட்டு.

மகிழ மரம் பூக்களைச் சொரிந்து சொரிந்து சலித்துப் போயிற்று. 'சில நாட்கள் மொட்டையாக நின்று பார்ப்போமே' என்று ஆசைப்பட்டது போல. இலைகளை உதிர்த்து விட்டு நின்றது.

இப்பொழுது பாலுவின் நினைவு அடிக்கடி வருவதில்லை சித்ராவுக்கு. அதற்காக அவனை முழுதும் மறந்துவிட்டாள் என்று சொல்லவும் முடியாது. அவள் வளர்ந்து விட்டாள்.

ஜல் ஜல் ஜல் - என்று சலங்கைகள் ஒலிக்க மாடுகள் விரைந்து வந்தன. வண்டி பாலுவின் வீட்டுக்கெதிரே வந்து நின்றது. குதித்துக் கொண்டு இறங்கும் அந்த வாலிபன்தான் பாலுவா? தெரு முழுக்கக் கூடி நின்று அந்த அதிசயத்தைப் பார்த்தது. சித்ராவும் பார்த்தாள். அவளுக்குக்கூட அவனை அடையாளம் தெரிந்து கொள்வது கஷ்டமாகத்தானிருந்தது. பழைய பாலுவாகவே அவனில்லை. துரை போலக் கம்பீரமாய், அழகாய் இருந்தான்.



"உங்க பேச்சுத் திறமைபற்றி எல்லோரும் வானளாவப் புகழ்கிறாங்க. எல்லோரும் நீங்கள்தான் எங்கள் செவிட்டு பள்ளிக் குழந்தைகள் ஆண்டு விழாவுக்குப் பேசத் தகுதியுள்ளவர் என்று சொல்கிறாங்க. அதனாலே....."

சுற்றிலும் இருந்தவர்களை ஒருமுறை கண்ணோட்டமிட்ட பின் பாலு வீட்டுக்குள் போனான். அவனுக்குச் சித்ராவின் ஞாபகமேயில்லை. இருந்திருந்தால், "சௌக்கியமா, சித்ரா?" என்று கேட்டுக்கொண்டு வந்திருக்க மாட்டானா? வலியப் போய், "நான்தான் சித்ரா; சிறுவயதில்......." என்று தன்னை அறிமுகப்படுத்திக் கொள்வதற்கும் அவளுக்கு வெட்கமாக இருந்தது. அது நன்றாயில்லை. சுத்தமாக நன்றாயில்லை.

இரண்டு நாட்கள் இப்படிப் போராட்டத்தில் தவித்தாள் சித்ரா. மூன்றாவது நாள் அந்தச் சந்தர்ப்பம் தானாகவே கிடைத்தது. குடம் நிறையத் தண்ணீர் மொண்டு கொண்டு திரும்பியவள், கையில் ஒரு புத்தகத்தைப் பிடித்த வண்ணம் மகிழ மரத்தடியில் நின்று தன்னையே பார்த்துக் கொண்டிருக்கும் பாலுவைப் பார்த்து விட்டாள். குடத்தைப் போட்டுவிட்டு அப்படியே ஓடிவிடலாமா என்று நினைத்தாள். அவ்வளவு நாணம்! தலையைக் குனிந்து கொண்டே நடந்தாள். அவன் அவளருகில் வந்து நின்று, "நீ சித்ரா இல்லை?" என்று கேட்டான்.

அவள் தலை ஆடியது. அந்த ஆட்டத்தில் தலையில் சூடியிருந்த மல்லிகைப் பூக்கள் கீழே உதிர்ந்தன.

"நான் பாலு! அடையாளம் தெரிகிறதோ? மிகவும் மாறிப் போய் விட்டேனில்லையா? ஆமாம், நீயும்தான் இப்பொழுது நன்றாக வளர்ந்து விட்டாய்!"

அவன் சிரித்துக் கொண்டே மேலும் சொன்னான்:

"சிறு வயதில் நீ ரொம்ப வாயாடியாக இருந்தாய். எனக்கு நன்றாக நினைவிருக்கிறது. இப்பொழுது ஏன் ஊமையாகிவிட்டாய்? நல்ல வேடிக்கைதான். வாயாடி ஊமையாவது!"

அவன் பேச்சு, சிரிப்பு எல்லாமே புதுமையாகத்தானிருந்தன. கேட்டுக் கொண்டேயிருக்கலாம் போலவும், கேட்கவே வேண்டாம் போலவும் இருந்தன.

"என்ன ஆச்சரியம்! இந்தப் பெண்களே ஒரு விசித்திரப் பிறவிகள்தான். என்னடாவெனில் நீ இங்கே ஊமையாகி விட்டாய். அவள் அங்கே மௌனியாகி விட்டாள். என்னுடன் பேசவே மாட்டாளாம்; என்னைப் பார்த்தாலே அவள் வாய் அடைத்துப்போகிறதாம். வெட்கமாம்; கண்ணை மூடிக் கொள்கிறாள்..." இடையில் நிறுத்தி விட்டு அவன் சிரித்துக் கொண்டான்.

பிறகு அவனே தொடர்ந்து, "எனக்குத் தெரியும். கல்யாணத்துக்குப் பிறகு பேசிப் பேசியே என்னை வதைத்து விடுவாள். 'நீ பேச்சை நிறுத்தப் போகிறாயா? அல்லது நான் சந்நியாசம் வாங்கிக் கொள்ளட்டுமா?' என்று ஒரு நாள் நான் கேட்குமளவுக்கு அவள் பேசுவாள்" என்று கூறிச் சிரித்தான். மௌனமாகக் கேட்டுக் கொண்டிருந்த சித்ராவின் இதயத்தை அவன் வார்த்தைகள் எப்படி எப்படித் தாக்கின என்பது அவனுக்கு என்ன தெரியும்?


"உனக்கு ஒரு சந்தோஷ சமாசாரம் சொல்லப் போகிறேன். எனக்குக் கல்யாணம்; ஓ, பெண் யாரென்று கேட்கிறாயா? எல்லாம் உனக்குத் தெரிந்தவள்தான். இந்திராவை நீ பார்த்ததில்லை? அவள்தான்! கல்யாணத்தை முடித்துக் கொண்டு நான் லண்டனுக்குப் படிக்கப் போகிறேன். இந்திராவும் என்னுடன் வருவாள். நீ என்னுடைய கல்யாணத்துக்கு....."

பேச்சு முழுவதையும் கேட்கு முன்பே அவள் ஏன் இப்படி ஓடுகிறாள் என்பது அவனுக்கு விளங்கவில்லை. அதற்குப் பின்னால் அவள் ஏன் தன் கண்ணிலேயே படவில்லை என்பதும் அவனுக்குப் புரியவில்லை.

அவள் வீட்டிலேயே அடைந்து கிடந்தாள்; வெளியே வரவேயில்லை. துக்கம் நெஞ்சையடைக்கத் திடீரென்று அவளுக்கு அழவேண்டும் போல் இருந்தது. பல நாட்களுக்கப்புறம் மறுபடியும் 'ஜல் ஜல் ஜல்' என்று சலங்கைச் சத்தம் கேட்கிறது. 'போய் வருகிறேன்' என்று எல்லாரிடமும் விடைபெற்றுக் கொள்கிறான் அவன். சித்ராவை அவன் கண்கள் தேடுகின்றன. அவளைக் காணவில்லை.

புழுதியைக் கிளப்பிக் கொண்டு வண்டி ஓடி விட்டது. தூரம், வெகு தூரம்.... ரொம்ப தூரம் போய் விட்டது.


மிக அழகிய...
அடர்ந்த நீண்ட ஒளியுள்ள கூந்தல்!
பிரதிதினமும் கால்கேட் பெர்பியூம்டு காஸ்டர் ஹேர் ஆயில் தடவி வந்தால், கூந்தலானது அடர்த்தியாகவும், நீளமாகவும் வளருவதுடன் இளமையின் ஒளியுடனும், அற்புத ஜ்வலிப்புடன் விளங்குவதைக் கண்டு நீங்கள் பரவசமடைவீர்கள். அது உங்கள் கூந்தலின் இயற்கை அழகை எடுத்துக்காட்டி எல்லோரையும் பிரமிக்கச்செய்யும்.
மகிழ்ச்சியூட்டும் நறுமணம்—
உங்கள் குடும்பம்
முழுவதும் விரும்புவது!
COLGATE
HAIR OIL
கால்கேட்
பெர்பியூம்டு
காஸ்டர்
ஹேர் ஆயில்
எக்கானமி சைஸை வாங்கி பணத்தை மிச்சப்படுத்துங்கள்!


உங்களுக்கும் பிலிப்ஸிற்கும் உள்ள இணைப்பு
பலவித
ரகங்கள்
பிலிப்ஸின் விசேஷ தன்மைகள்
பிலிப்ஸ் நோவோஸோனிக் ரேடியோ



படித்துப் பாருங்கள்



மகாத்மா காந்தி நூல்கள்—6

சோஷலிஸ்டு யார்? சோஷலிஸப் புரட்சியின் பயனாக ராம ராஜ்யம் ஏற்படுமா? உழைத்துச் சாப்பிடுவது என்றால் என்ன? தரும சொத்து என்றால் எது? யந்திரத் தொழில் மயமாக்குவது எதற்கு? தொழிலாளரின் பலம் எதில் அடங்கியிருக்கிறது? வேலை நிறுத்தம் செய்ய வேண்டிய காலம் எது? தொழிலாளருக்கும் முதலாளிகளுக்கும் அடிக்கடி போராட்டம் மூளுவதைத் தடுக்க முடியுமா? விவசாயிகளின் நிலை உயர வழி என்ன? ஏழ்மையிலிருந்து விடுதலை பெற வழி என்ன?

அரசியல், பொருளாதாரம், விவசாயம், சமுதாயம் முதலிய பல்வேறு துறைகளை ஒட்டியும், இவை போன்ற சிக்கலான, நுணுக்கமான கேள்விகளுக்கு உரிய விடைகள் இந்த நூலில் அடங்கியிருக்கின்றன.

''உழைத்துச் சாப்பிடுவது என்பது பற்றி டால்ஸ்டாய் எழுதியிருந்ததை வாசித்த போதுதான், மனிதன் வாழவேண்டுமானால், அதற்கு அவன் உழைக்க வேண்டும் என்ற நியதி முதலில் எனக்குப் புலப்பட்டது. ஆனால் அதற்கு முன்பு ரஸ்கினின் 'கடையனுக்கும் கதிமோட்சம்' என்ற புத்தகத்தை வாசித்த போதே அந்த உண்மையை நான் ஏற்றுக் கொண்டுவிட்டேன். யக்ஞம் செய்யாமல் உணவு அருந்துபவன் திருட்டு உணவை உண்பவனாகிறான் என்று கீதையின் மூன்றாவது அத்தியாயத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. உழைத்துச் சாப்பிட வேண்டும் என்பதே இதன் பொருள் என்று நினைக்கிறேன்.''

''சமீப காலமாக, விலைவாசிகளின் அதிகரிப்பைப் பற்றிப் புகார்கள் கிளம்பியிருக்கின்றன. வேஷ்டி விலைகள் அசாதாரணமாக உயர்த்தப்பட்டிருக்கின்றன. வியாபாரிகள் பணம் சம்பாதிக்கக் கூடாது என்று யாரும் சொல்லவில்லை. ஆனால், அதைக் கெட்ட வழியில் சம்பாதிக்காமல் நல்ல வழியில் சம்பாதிக்க வேண்டும். நியாயமான வழிகளில்தான் வியாபாரிகள் பணம் சம்பாதிக்க வேண்டும். அநியாயமான வழிகளை ஒரு போதும் கடைப்பிடிக்கக் கூடாது. ஒரு நாட்டின் பிட்சம், அதன் வர்த்தக சமூகத்தையே பொறுத்திருக்கிறது. வர்த்தகர்கள் அறவழியில் நம்பிக்கையும் தேசபக்தியும் உடையவர்களாக இருக்க வேண்டும்.''

முதலாளிகளுக்கும் தொழிலாளர்களுக்கும் இருக்க வேண்டிய நல்லுறவை வற்புறுத்தியுள்ள காந்திஜி, முதலாளிகளிடம் தொழிலாளர்கள் நன்றியுடனும் நல்லெண்ணத்துடனும் இருக்க வேண்டிய அவசியத்தை வலியுறுத்தியிருக்கிறார்.

''உழைக்காதவர் தொழிலாளர் அல்ல. உழைக்க வெட்கப்படும் தொழிலாளருக்குச் சாப்பிட உரிமை இல்லை'' என்று காந்திஜி தொழிலாளரின் கடமையை இரண்டே வாக்கியங்களில் தெளிவுபடுத்தியுள்ளார்.

''நம் உள்ளத்தில் தீயகுணமும் இருக்கிறது; நல்ல குணமும் இருக்கிறது. தீய குணம் ராவணனுக்கு ஒப்பானது: நல்ல குணம் ராமனுக்கு ஒப்பானது. தீய குணமாகிற ராவணன் எழும்போது, நல்ல குணமாகிற ராமனைக் கொண்டு அந்த ராவணனைத் தலைதூக்க விடாமல் செய்ய வேண்டும்.''

பாட்டாளிகளின் குடியரசு, பஞ்சாயத்து ராஜ்யம், உழைப்பின் மதிப்பு, பொருளாதார சமத்துவத்தின் அவசியம், பணக்காரர்கள் தருமகர்த்தாக்களாக இருக்க வேண்டிய முறை, கிராமங்களில் வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்கும் வழி போன்ற மற்றும் பல்வேறு அரிய விஷயங்களை ஒட்டியும், தருமத்தையும், நீதி நெறியையும் அடிப்படையாகக் கொண்ட காந்திஜியின் பொன்மொழிகள் இந்த ஆறாவது தொகுப்பு நூலை அலங்காரம் செய்கின்றன.

காந்திஜி தம்முடைய சுய சரிதையில் ஒரு நூலின் மந்திர சக்தியைப் பற்றிக் குறிப்பிட்டுள்ளார். அது பேரறிஞர் ரஸ்கின் எழுதியுள்ள 'கடையனுக்கும் கதி மோட்சம்' (Unto This Last) என்ற நூலேயாகும். காந்திஜியின் வாழ்க்கையை அடியோடு மாற்றிய நூல் அதுதான். பின்னர் 'சர்வோதயம்' என்ற தலைப்பின்கீழ் காந்திஜி அதைக் குஜராத்தியில் மொழிபெயர்த்தார். அந்த நூலின் தமிழாக்கமும் 6-வது தொகுதியின் இறுதியில் சேர்க்கப்பட்டிருக்கிறது.

750 பக்கங்கள் உள்ள இந்தப் பெரும் நூலில் 200 அத்தியாயங்களுக்கு மேல் அடங்கியிருக்கின்றன. ஒவ்வோர் அத்தியாயத்திலும் ஒவ்வொரு சங்கடமான பிரச்னையைத் தீர்க்கும் தரும நியாயமான வழியைக் காந்திஜி தெளிவாகக் குறிப்பிட்டுள்ளார்.

இந்த நூலின் முதல் பாகத்தை ஸ்ரீ ந. ராமரத்தினமும், இரண்டாம் பாகத்தை ஸ்ரீ கு. அழகிரிசாமியும், மூன்றாம் பாகத்தை ஸ்ரீ ரா. வேங்கடராஜுலுவும் மொழிபெயர்த்திருக்கிறார்கள்.

கிடைக்குமிடம்: காந்தி நூல் வெளியீட்டுக் கழகம், சர்க்கார் எஸ்டேட், மவுண்ட் ரோடு, சென்னை-2: விலை ரூ. 7-50.

தென் இந்திய வரலாறு

காலச்சூரி இனத்தைச் சேர்ந்த பிச்சலர் என்ற ஒரு சிற்றரசர் சாளுக்கிய அரசை 1163-ம் ஆண்டில் கைப்பற்றினார்: 1956-ம் ஆண்டு இந்தியாவில் பாஷாவாரியாக மாகாணங்கள் அமைக்கப் பெற்றன. இதற்கு மத்தியில் சுமார் ஏழு ஆண்டுகள் வரையில் நிகழ்ந்த சரித்திரச் சம்பவங்களும், புரட்சிகரமான மாறுதல்களும் 'தென்னிந்திய வரலாறு' என்ற இந்த நூலின் இரண்டாம் பகுதியில் அடங்கியிருக்கின்றன. 'தென்னாடும் முஸ்லிம் தொடர்பும்,' 'விஜயநகரப் பேரரசு காலம்.' 'ஐரோப்பியரின் வருகையும்

அரசியல் போராட்டங்களும்,' 'நவீன காலம்' என்ற தலைப்புக்களுடன் நான்கு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது ஆராய்ச்சி மிக்க இந்த அருமையான நூல். இந்தியாவில் உள்ள பல்வேறு மொழிகளின் இலக்கிய வளர்ச்சி வரலாறும் இந்த நூலில் விரிவாகக் கொடுக்கப்பட்டுள்ளது. இதில் சில இந்திய தேசப் படங்களும் பாரதநாட்டின் பண்டைய சிற்பச் சிறப்பை விளக்கும் பல படங்களும் சேர்க்கப்பட்டுள்ளன. தமிழ், ராஜ்யமொழியாகி வரும் இக்காலத்தில் இதுபோன்ற வரலாற்று நூல் மாணவர்களுக்கு மாத்திரமல்ல எல்லோருக்குமே பயன்தரத்தக்கது.

தென்னிந்திய மொழிகள் புத்தக டிரஸ்டின் ஆதரவில் வெளியாகியுள்ள இந்த நூலை எழுதிய சென்னை பல்கலைக் கழகப் பேராசிரியர் டாக்டர் கே. கே. பிள்ளை அவர்களுக்குத் தமிழ் மக்கள் கடமைப்பட்டிருக்கிறார்கள்.

கிடைக்குமிடம்: பழனியப்பா பிரதர்ஸ், சேப்பாக்கம், சென்னை—5. விலை: ரூ. 2—40.

கனடா. சுவீடன். குவாய்ட். தாய்லந்து

ஐரோப்பா கண்டத்தில் உள்ள சுவீடன், ஸ்விட்ஜர்லாந்து நாடுகளுக்கு ஒரு தனிச் சிறப்பு உண்டு. போர் முனையிலிருந்து ஆயிரக்கணக்கான மைல்களுக்கு அப்பால் உள்ள சிற்றரசுகளும் சாம்ராஜ்யங்களும் போர்ச் சுழல்களில் அகப்பட்டு அல்லல்பட்டபோது, போர் வெறி பிடித்த வல்லரசுகளுக்கும், பயங்கரமான போர்முனைகளுக்கும் மத்தியில் இருந்தும் கூட முதலாவது உலக மகாயுத்தத்திலும் இரண்டாவது உலகமகா யுத்தத்திலும் சிக்கிக் கொள்ளாமல் எப்படியோ அவை தப்பின. அப்படிப்பட்ட சிறப்பு வாய்ந்த சுவீடனைப் பற்றிய எல்லா விவரங்களும் சுவீடன் என்ற நூலில் காணலாம்.

உலக நாடுகள் வரிசை என்ற தொடரில் 'சோமலெ.' கனடா. சுவீடன். குவாய்ட். தாய்லந்து முதலிய நாடுகளைப் பற்றி எழுதியுள்ளார். ஒவ்வொரு நாட்டையும் பற்றிய எல்லா விவரங்களும் 50 பக்கங்கள் கொண்ட ஒவ்வொரு தனி நூலில் அடங்கியிருக்கின்றன. நள்ளிரவிலும் சூரியன் தெரியும் நாடான சுவீடன், செல்வச் செழிப்பும் தொழில் வளமும் அடைந்துள்ள கனடா, எண்ணெய் வளம் காரணமாகச் செல்வத்தில் புரளும் பாலைவன நாடு குவாயிட், இருப்பாலை, இரு வெம்பாலை படிக்கும் வழக்கம் நிலவும் தாய்லந்து முதலிய நாடுகளைப் பற்றிய வரலாறுகளை இந்நூலில் ஆசிரியர் 'சோமலெ' சுவை ததும்பக் குறிப்பிட்டுள்ளார்.

கிடைக்குமிடம்: பாரி நிலையம், 59, பிராட்வே சென்னை—1 விலை: ஒவ்வொன்றும் 50 காசு

—வாஞ்சி

அளவை விளக்கம்

இந்நூல் தர்க்க சம்பந்தமான கருத்துக்களை விளக்குவதற்கு எழுதப்பட்டது. சிவஞான முனிவரின் தருக்க சங்கிரகம், மணிமேகலையின் இறுதிப் பகுதிகள், நியாயப் பிரவேசம் போன்ற அரிய தர்க்க நூல்களைப் படிக்கப் புகுவோர் யாழ்ப்பாணம் இரு த. இராமநாத பிள்ளை எழுதிய இந்நூலைத் துணைநூலாகப் பயன்படுத்திக் கொள்ளலாம். பிரமாணங்கள் எனப்படும் அளவைகளை விளக்கும் பகுதிகள் நன்றாக இருக்கின்றன. மேலை நாட்டாசிரியர்களின் தருக்க சம்பந்தமான குறிப்புக்களையும் இடையிடையே எடுத்துச் சொல்லியிருக்கிறார் ஆசிரியர். சொல்லி விளக்குவதற்கு அருமையானதொரு கலையை இவ்வளவு தெளிவாக எழுதி விளக்கியிருப்பது நூலுக்கே சிறப்புத் தருவதாக இருக்கிறது.

வெளியீடு: ஸ்ரீ லங்கா அச்சகம், கே. கே. எஸ். ரோடு, யாழ்ப்பாணம், இலங்கை. விலை ரூ. 3.

கணேசையர் நினைவு மலர்

ஆறுமுக நாவலர், சி.வை. தாமோதரம் பிள்ளை ஆகியோருக்குப் பின் ஈழ நாட்டிற் பெரும் புலவராக விளங்கிய சி. கணேசையர் அவர்களின் நினைவுக் கருவூலமாக இம்மலர் வெளியிடப்பட்டிருக்கிறது.

கணேசையரின் வாழ்க்கை வரலாறு, சிறப்பியல்புகள் ஆகியவை பற்றிய கட்டுரைகள் தவிர வேறு பல கட்டுரைகளும் இம்மலரில் இடம் பெற்றுள்ளன. இவ்வளவு அற்புதமாக இந்த மலரைத் தயாரித்தவர்கள், 'ஈழகேசரி'ப் பொன்னையா நினைவு வெளியீட்டு மன்றத்தினர் ஆவார்கள்.

வெளியீடு: ஈழகேசரிப் பொன்னையா நினைவு வெளியீட்டு மன்றம், சுன்னாகம், யாழ்ப்பாணம், இலங்கை. விலை. ரூ. 10.

இராச புதல்வன்

'கதைக்குக் காலுண்டா, கை உண்டா?' என்பார்கள். காலும், கையும், காதும் மூக்கும் வைத்து எழுதினால்தான் கதை கதையாக இருக்கும் என்பதை யாருமே ஒப்புக்கொண்டுதான் ஆக வேண்டும். அதாவது கதைக்கு ஓர் உருவம் கொடுக்க வேண்டும்.

அப்படி உருவாக்கின கதையை நாடகமாக்குவது சிரமமான காரியம்தான். ஆசிரியர் 'அமரன்' அந்தச் சிரமமான பணியை மேற்கொண்டு வெற்றி காண முயன்றிருக்கிறார். ஆனால் கதைக் கருவிலே வலு இல்லாமையினால், அவருக்கு வெற்றி கிட்டியதாகச் சொல்ல முடியவில்லை. ஒரே மாதிரியான உருவம் படைத்த இருவரைக் கதாநாயகர்களாகக் கொண்டு, பின்னப்பட்டிருக்கும் இந்த நாடகத்திலே, நாம் ஒரு புதுமையையோ, கதையின் கட்டுக்கோப்பையோ காணவில்லை என்றாலும், வேகமான வசனத்தைக் காண்கிறோம்; பகுத்தறிவுப் படைக்களத்தின் அடுக்குத் தொடர்களைக் காண்கிறோம். பல இடங்களில் சொல்லும் பொருளும் இயைந்து எழில் கூட்டாமல் சப்பென்றிருப்பதையும் காண்கிறோம். ஆயினும் ஆசிரியரின் எழுத்துத் திறன் நாடகத்தைப் படித்து முடிக்க வேண்டும் என்ற உணர்ச்சியைத் தூண்டவே செய்கிறது.

பிரசுரம்: தென்றல் நூற்பதிப்புக் கழகம், சலகண்டபுரம் சேலம் மாவட்டம். விலை ரூ. 1.50.

Printed & Published by R Ananthanarayanan on behalf of Messrs Bharathan Publications Private Limited at the Kalki Press Kilpauk Madras-10
Managing Editor T Sadasivam

நாள் முழுவதும் புத்துணர்ச்சியுடன் விளங்க

பாண்ட்ஸ் ட்ரீம்ப்ளவர் டால்கம்

பவுடரை உபயோகியுங்கள்



ஆம், நறுமணமுள்ள புத்துணர்ச்சியளிக்கும் பாண்ட்ஸ் ட்ரீம்ப்ளவர் டால்கம் பவுடரை உபயோகித்தால் மிக உஷ்ண காலத்திலும்கூட நீங்கள் குளுமையுடனும் புதுமலர்ச்சியுடனும் இருக்கலாம். இந்த மிருதுவான பவுடரை உங்கள் உடம்பின்மேல் தூவிக் கொண்டால் அது வியர்வையை உறிஞ்சி உங்களை நாள்முழுவதும் காலையில் இருக்கும் புதுமலர்ச்சியுடனும், நறுமணத்துடனும் விளங்கச் செய்யும். நீண்ட நேரம் புத்துணர்ச்சியுடன் இருக்க எப்பொழுதும் பாண்ட்ஸ் ட்ரீம்ப்ளவர் டால்கம் பவுடரையே உபயோகியுங்கள்.

சீஸ்ப்ரோ-பாண்ட்ஸ் இன்கார்ப்பொரேடட்

(வரையறுக்கப்பட்ட பொறுப்புடன் யு.எஸ்.ஏ.வில் இணைக்கப் பெற்றது)

JWT-P-1876

REGISTERED No. M. 4392
Registered as a Newspaper in Ceylon

